www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2027 கும்பம் 7 (21.02.1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு: 60p


## கவிதை மூலை

வெட்டித் தமிழரைக்
கொன்றிடும் போதும்
பெட்டிப் பாம்பாய்ப்
படுத்தது போதும்
பட்டது போதும்
பகைவன் செயலால்
கொட்டுது குருதி
கொடு வாளெடடா!

- சுடு கவி

# புலிகள் கப்பல் மூழ்கடிப்பில் இந்தியாவின் பங்கு என்ன?

## இந்தியா மறுப்பு - இலங்கை அதிகாரியோ கருத்துத் தெரிவிக்க மறுப்பு

**திருமலைத் துறைமுகத்துள் சிறிலங்காக் கடற்படைத் தளத்தின் மீது தாக்குதல் நடாத்துவதற்கெனச் சென்று கொண்டிருந்த கடற்புலிகளின் வெடி மருந்து ஏற்றிய கப்பல், இந்திய - சிறிலங்காக் கடற்படையினர் கூட்டாக நடத்திய தாக்குதலினால் வெடித்துச் சிதறியது. இம் மோதலின்போது 2 கடற்கரும்புலிகள் உட்பட 3 கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.**

திருமலைத் துறைமுகத்தினுள் சிறிலங்காக் கடற்படைக்கப்பல் மீது தாக்குதல் நடாத்தச் சென்ற கடற்புலிகளின் வெடிமருந்து ஏற்றிய கப்பலுக்கும் அதனோடு இணைந்து சென்ற கடற்புலிகளின் படகுகளுக்கும் சிறிலங்காக் கடற்படையினருக்கும் இடையினில் ஏற்பட்ட மோதலின் போது, வெடிமருந்துகளுடன் சென்ற கடற்புலிகளின் கப்பல் வெடித்துச் சிதறியது. இதில் இரண்டு கடற்கரும்புலிகள் உட்பட 3 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். 14-02-96 அன்று அதிகாலை 1.00 மணியளவில் இம் மோதல் இடம்பெற்றது. இதன்போது சிறிலங்கா விமானப் படையின் புக்காரா விமானம், உலங்கு வானூர்திகளுடன் இரண்டு புதிய போர்க் கப்பல்களும் இணைந்து புலிகள் அணியினர் மீது தாக்குதல் நடாத்தின. இதனைத் தொடர்ந்து வெடி மருந்து ஏற்றிய கப்பல் வெடித்துச் சிதறியது. இம்மோதல் சம்பவம் முல்லைத்தீவு கடற்பரப்பில் கரையோரத்தில் இருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் இடம் பெற்றுள்ளது.

### 6 விடுதலைப்புலிகள் வீரச்சாவு

இச்சமரில் கடற்கரும்புலி லெப். கேணல் சோதித்தம்பி அல்லது மதன் என்றழைக்கப்படும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த யோகச்சந்திரன் ரவிக்குமார், கடற்கரும்புலி மேஜர் வேங்கை என்றழைக்கப்படும் பொலிகண்டியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை செல்வகுமார், கடற்புலிகளின் வேவுப்பிரிவைச் சேர்ந்த கப்டன் இலங்கேஸ்வரன் என்றழைக்கப்படும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ராசமாணிக்கம் சுரேஸ் ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

அதே கடற்பரப்பில் காலை ஏழு மணியளவில் மீண்டும் ஒரு சண்டை நடைபெற்றது. சிறிலங்காக் கடற்படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலிற்கு ஈடுகொடுக்க முடியாமல் நிலைகுலைந்து நிற்க, அதற்கு உதவியாக ஆறு உலங்கு வானூர்திகளும் புக்காரா குண்டு வீச்சு விமானங்களும் சண்டையில் ஈடுபட்டன. கடலில் நின்றபடி ஒரேநேரத்தில் சிறிலங்காவின் விமானப்படையையும், கடற்படையையும் எதிர்த்துத் துணிகரமாக நடந்த இத்தாக்குதலில் விமானப்படையின் குண்டுவீச்சு விமானம் ஒன்று சேதமடைந்ததைத் தொடர்ந்து, சிறிலங்காப் படையினர் தாக்குதல்களைக் கைவிட்டுப் பின்வாங்கினர். இச்சண்டையில் கடற்புலி கப்டன் வானன் அல்லது மைக்கல் என்றழைக்கப்படும் உடுப்பிட்டியைச் சேர்ந்த சச்சிதானந்தசிவம் ஆனந்த கீர்த்தனன், கடற்புலிளின் மகளிர் பிரிவைச் சேர்ந்த லெப். அருள் என்றழைக்கப்படும் தாளையடியைச் சேர்ந்த இளையதம்பி புஸ்பலதா ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

### இந்தியா மறுப்பு

இத்தாக்குதல்களில் தாம் ஈடுபடவில்லையென இந்தியா மறுத்துள்ளது. அப்படி அவர்கள் மறுத்துரைத்தபோதும், அத்தாக்குதலில் ஈடுபட்ட கப்பலின் தலைமைச் சிப்பந்தி, இந்தியா இதில் சம்பந்தப்பட்டதா? என்ற கேள்விக்குக் கருத்து வழங்க மறுத்துவிட்டார். இலங்கைக்கு வந்த இந்தியப் படையின் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் கல்கட் பி.பி.சி க்கு அளித்த செவ்வியில், சிறிலங்காக் கடற்படைக்கு இந்தியக் கடற்படை தகவல் கொடுத்து உதவுவது இயல்பானது என்ற கருத்துப்பட பேசியுள்ளார். மேலும் 'சார்க்' உறுப்பு நாடுகளான இரு நாடுகளுக்கும்

தொடர்ச்சி : 2 ஆம் பக்கம்

# குமாரபுரத்தில் தமிழர்களை வெட்டிக் கொலை செய்த அரச படைகள்

## விசாரணை என்ற பெயரில் சிறிலங்கா கண்துடைப்பு

திருகோணமலை நகரிலிருந்து தெற்கே 25 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள குமாரபுரம் தமிழ்க் கிராமம், சிறிலங்கா இராணுவத்தாலும் சிங்கள ஊர்காவற் படையாலும் சுற்றிவளைக்கப்பட்டு வெறித்தனமான தாக்குதலிற்குள்ளானது.

கத்திகள், கோடரிகள், துப்பாக்கிகள் சகிதம் குமாரபுரம் கிராமத்தினுள் புகுந்த வெறியர்கள் வீடு வீடாகச் சென்று மக்களை வெட்டியும், சுட்டும், குத்தியும் படுகொலை செய்துள்ளனர்.

இப்படுகொலை வெறியாட்டத்தில் 24 அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

'ட்ரக்' வண்டிகளில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் இக்கிராமத்தைச் சுற்றி வளைத்து, வீடுகளுக்குள் இருந்த மக்களை வெளியில் இழுத்து வைத்துச் சுட்டுக் கொன்றுள்ளனர். வயல்வெளிகளுக்கூடாக உயிர்காக்க ஓடிய மக்களையும் துரத்தித் துரத்திச் சுட்டுள்ளனர். இப் படுகொலை வெறியாட்டத்தில் இறந்தவர்களில் 9 சிறுவர்கள், 8 பெண்கள், 7 ஆண்கள் அடங்குகின்றனர். 26 பேர் இச் சம்பவத்திற் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பலர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். மேலும் பலரின் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது. படுகொலைக்குப் பயந்து வீடுகளுக்குள் பதுங்கி இருந்த 10 இளம்பெண்களை, இப் பயங்கரவாதக் கும்பல் கடத்திச் சென்றுள்ளது. மேலும் இக்கொலைச் சம்பவத்தை அறியாது மூதூரில் இருந்து அப்பகுதிக்குச் சென்று கொண்டிருந்த 20 தமிழ் ஆண், பெண் அரச ஊழியர்களையும் சிறிலங்காப் படையினர் பிடித்துச் சென்றுள்ளனர் எனக் காயமடைந்தவர்கள் தெரிவித்தனர். இவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டார்கள், என்ன ஆனார்கள் என்பது இதுவரை தெரியவரவில்லை.

நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் சிசுவுடன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேலும் 6 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர்களில் இரு இளம் பெண்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளது எனவும் இவர்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பின்பே கொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

இவ் உடல்கள் ஆடைகள் எதுவும் அற்ற நிலையில் காயங்களுடன் கம்புத் தடிகளால் மூடப்பட்ட நிலையிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்து, குமாரபுரத்துக் கிராமப் படுகொலையில் இதுவரை கிடைத்த தகவல்களின்படி 30 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. படுகாயமடைந்தோர் தொகை பிந்திக் கிடைத்த செய்தியின்படி 40 எனத் தெரியவருகிறது. இவர்களில் 15 பேர் 12 வயதிற்கும் குறைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குமாரபுரத்துக் கிராமத்தில் மொத்தம் 50 தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வந்ததாகத் தெரியவந்துள்ளது. இச்சம்பவங்கள் பற்றி, சம்பவத்தை நேரில் கண்ட-காயமடைந்தவர்களை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சந்தித்து அவர்களிடம் அப்பயங்கரங்களைப் பற்றிக் கேட்டறிந்துள்ளனர். சீருடை தரித்த இராணுவத்தினர் வீடுகளின் கதவுகளை உடைத்துக் கொண்டு வீடுகளுக்குள் நுழைந்ததாகவும், யன்னல்களை உடைத்து வீடுகளுக்குத் தீ வைத்ததைத் தான் நேரில் கண்டதாகவும் காயப்பட்ட பொதுமகன் ஒருவர் தெரிவித்ததாக 'ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இப்படுகொலை வெறியாட்டத்தில் தன் இளம் கணவனைப் பறிகொடுத்த 24 வயதுடைய இளம் விதவைப் பெண் பூரணம் பாக்கியராஜா, முகங்களைக்

தொடர்ச்சி : 2 ஆம் பக்கம்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குமாரபுரத்தில் தமிழர்களை....

1 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

கறுப்புத் துணியால் மறைத்து முகமூடி அணிந்து வந்த இராணுவத்தினர் தன் குடும்பத்திடம் உயிரைக் காப்பாற்ற வேண்டு மென்றால் திரும்பிப் பார்க்காமல் ஓடுங்கள் எனக் கூறிவிட்டு தாம் நகரும் போது பின்னால் தம்மைச் சுட்டதாகவும் தெரிவித்தார். இத் துப்பாக்கிச் சூட்டில் இருந்து காயங்களுடன் தப்பிவிட்டதாகவும் அந்த இடத்திலேயே தன் கணவன் கொல்லப்பட்டு விட்டார் எனவும் தனது தாங்க துடியாத துயரத்தைக் கலங்கிய விழிகளுடன் வெளிப் படுத்தினார். தேநீர்க்கடை வைத் திருக்கும் காளி முத்து என்பவர் தெரிவிக்கையில், அண்மையில் இருந்த கிளிவெட்டி இராணுவ முகாமில் இருந்து வெளிவந்த சிறி லங்கா இராணுவம், மக்களைக் கண்ட இடத்திலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்து சுட்டுக் கொன்றது எனவும் தனது கடையில் சில வாடிக்கையாளர்க ளுடன் தான் ஒளிந்து கொண்ட போதும் தம்மில் ஒருவர் கொலை வெறியர்களின் சூட்டிற்குப் பலியாகி விட்டதாகவும், இதில் இராணுவ த்தினர் தம் முகங்களைக் கறுப்புத் துணியால் சுற்றியிருந்ததைத் தான் கண்டதாகவும் தெரிவித்தார். இரு சாட்சிகளும் தம்மால் இக் குற்றவா ளிகளை அடையாளம் காட்ட முடியுமெனவும் தெரிவித்துள்ளனர்.

ஒரு தமிழ்க்கிராமத்தின் மீது நன்கு திட்டமிடப்பட்டு, அதேவேளை மிகக் கோரமாக இப் படுகொலை நடாத்தப்பட்டுள்ளது. கிழக்கின் பிடி தம் கையில் இருந்து நழுவிப் போவதைப் பொறுக்கமுடியாத சிறி லங்கா அரசு, தனது படைமூலம் ஆக்கிரமிப்பாளர்கள் வழமையாகச் செய்யும் அதேபாணியில், மக்கள் மீது உளவியல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தி, பயமுறுத்தி அடக்கும் விதமாகவும் இப்படுகொலை இராணுவத்தால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. சந்திரிகா அரசு இக் கொலையை வெளியுலகுக்கு மறைப்பதற்கும் முயல்கின்றது. அதாவது இனந்தெரியாத நபர்க ளினால் இது நடாத்தப்பட்டுள்ளது எனவும் இதுபற்றி விசாரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் தலைமையிலான விசாரணைக்குழு அமைத்துள்ளதாகவும் தனது வழமையான பாணியில் பறை சாற்றுகிறது. இருப்பினும் சர்வதேச செய்தி நிறுவனங்களும், செய்தி த்தாள்களும் இப்படுபயங்கர வாதத்தைச் சிறிலங்கா இராணுவமே செய்துள்ளதென்பதை ஐயம் திரிபுற வெளிப்படுத்தியுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபை, இது பற்றி விரிவான விசாரணை செய்யப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனக் கேட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப் படுகொலையில் இறந்த முதல் 24 பேரினதும் விபரங்கள்:-

## ஆண்கள்

சுப்பையா சேவிராஜா வயது 76
கிண்ணன் கோவிந்தன் வயது 72
சிவக்கொழுந்து சின்னத்துரை வயது 56
வடிவேலு நடராஜா வயது 22

## பெண்கள்

சுந்தரலிங்கம் லக்சுமி வயது 35
அருணாசலம் கமலாதேவி வயது 35
அழகுதுரை பரமேஸ் வயது 30
சுப்பிரமணியம் பாக்கியம் வயது 30
அருமைத்துரை வல்லிப்பிள்ளை வயது 28
செல்லத்துரை பாக்கியம் வயது 26
ஆனந்தன் அன்னம்மா வயது 26

## சிறுவர்கள்

துரைராஜா கருணாகரன் வயது 15
அருமைத்துரை சந்தியலக்சுமி வயது 15
கனகராஜா சுபாசினிராஜா வயது 15
வினாயகமூர்த்தி சுதாகரன் வயது 14
ராமஜெயம் கமலேஸ்வரி வயது 13
தங்கவேல் கலா வயது 12
சண்முகநாதன் நிசாந்தன் வயது 11
சுந்தரலிங்கம் பிரபாகரன் வயது 11
அமிர்தலிங்கம் ராசநிகாந்தி வயது 10
தீபன் பத்தினி வயது 9

## குழந்தைகள்

சிவபாக்கியம் திரையம்பன் வயது 6
பாக்கியராஜா வசந்தினி வயது 6
சுந்தரலிங்கம் சுபாசினி வயது 3 ■

# தமிழர் உயிர்கள் கிள்ளுக் கீரையா?

## படுகொலையைக் கண்டிக்காத துரோகிகளும், கண்டும் காணாத வெளிநாடுகளும்

திருமலை மாவட்டத்தில் குமாரபுரத்தில் மற்றொரு இனப்படுகொலையைச் சிறிலங்கா இராணுவம் நிறைவேற்றியுள்ளது. இப்படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் தொடர்பாக இன்னமும் சரியான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் குறைந்தது 30 பேராவது கொல்லப்பட்டதோடு, 25 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்பதும் உறுதியாகியுள்ளது. இப்படுகொலையானது ஒரு தமிழ்க் கிராமத்தின் மீது நன்கு திட்டமிடப்பட்டு அதேவேளை, மிகக்கொடூரமாக நடாத்தப்பட்டுள்ளது. கிராமமக்கள் ஆண், பெண், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களால் குத்தியும், வெட்டியும் கொல்லப்பட்டதோடு சுட்டும் கொல்லப்பட்டனர். சிங்கள இராணுவம் புரிந்த இப்படுகொலை இனந்தெரியாதவர்கள் செய்த படுகொலை எனக்கூறி, சந்திரிகா அரசு தட்டிக்கழித்துவிடப் பார்க்கின்றது. ஆனால் இதனைச் "சமாதானத்திற்கான படுகொலைகள்" என அரசு விளக்கம் கூறாது விட்டமை ஆச்சரியத்திற்குரியதொன்றாக இருக்கின்றது. ஏனெனில் சந்திரிகா அரசானது, தமிழருக்கு எதிராகத் தற்பொழுது நடாத்தும் போரிற்கு, "சமாதானத்திற்கான போர" எனக்கூறிக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்து, இவ்வாறான படுகொலைகள் இடம்பெறுவதும் அதில் தமிழ் மக்கள் பெருமளவில் . கொல்லப்படுவதும் துயர்தரும் விடயங்களே ஒழிய அவை ஆச்சரியத்திற்கு உரியவையோ அதிர்ச்சி தருபவையோ அல்ல. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்களது கட்சியும் சிங்கள இராணுவக் கட்சியும் பற்றி அவர்கள் நிறையவே அறிந்து வைத்துள்ளார்கள்.

இந்தநிலையில் குமாரபுரத்தில் நடந்த இனப்படுகொலை குறித்து அரசு இராணுவம் மீது குறைகூறமோ அன்றி நடவடிக்கை எடுக்குமோ என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் நவாலி புனித பேதுருவானவர் தேவாலயத்தின் மீது இடம்பெற்ற குண்டுவீச்சையும், கண்ணிவெடியில் விசேட அதிரடிப்படையினர் தமிழர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதையும் நியாயப்படுத்த முனைந்த அரசிடம் தமிழ் மக்கள் இது குறித்து எதையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க மடையர்கள் அல்ல.

இதேசமயம், தொடர்ச்சியாக இனப்படுகொலைகளில் ஈடுபட்டிருக்கும் சிங்கள அரசைக் கண்டிப்பதினாலும் பயனேதும் விளையப் போவதுமில்லை. ஆகையினால், இப்படுகொலைகளைக் குறித்துக் கண்டனங்கள் வெளியிடுதல் எமது நோக்கமல்ல. அவை பயனற்றவை என்பதும் தமிழர் தாயகத்தில் இருந்து சிறிலங்காப் படைகள் என்று வெளியேற்றப்படுகிறார்களோ அன்றே இனப்படுகொலை முடிவுக்கு வரும் என்பதும் யதார்த்தமானதாகும். ஆனால் இன்று எம்மால் எழுப்பப்படும் கேள்வியானது, கொழும்பிலோ அல்லது வேறு பகுதியிலோ சிங்களவர் பாதிக்கப்படும்போது கண்டனங்கள் செய்பவர்களும் குரல் எழுப்புபவர்களும் ஏன் தமிழர்கள் படுகொலை குறித்து கண்டனங்கள் எழுப்புவது இல்லை என்பதேயாகும். இந்த வகையில் அது பொதுமக்கள் மீதான தாக்குதல் இல்லாது இருப்பினும் கூட, அதாவது பொருண்மிய இலக்குகள் மீதான தாக்குலாக இருக்கும்போதும் அதற்காகக் கண்டனங்களைத் தெரிவிப்பதில் முன்னணியில் இருப்பவர்கள் தமிழ்க் குழுவினரே. அதுவும் புலிகள் தான் இத்தாக்குதலுக்குப் பொறுப்பு என அரசு (வழமைபோல்) குற்றஞ்சாட்டுவதற்கு முன்னரே தமிழ்க் குழுக்கள் முந்திக் கொண்டு கண்டனம் செய்கின்றன. ஆனால் சிறிலங்கா இராணுவம் செய்யும் இனக்கொலை பற்றி இவர்கள் கண்டனம் தெரிவிக்காதது மட்டுமல்ல, சிலசமயம் சிங்களப் பேரினவாதிகளுக்கு வாக்காளத்து வாங்குகின்றனர் என்பதுதான் வேடிக்கையானது. எடுத்துக் காட்டாகக் கூறுவதானால், புளொட் மற்றும் ஈ.பி.டி.பி குழுவினர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் மக்கள் எவரும் கொல்லப்படவில்லையெனக் கூறியது மட்டுமல்ல, அதற்காக அரசுக்குப் பாராட்டும் தெரிவித்துக் கொண்டனர். ஆனால் இந்த நடவடிக்கையில் பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டமை வெளிப்படையானதொன்று. இந்த நிலையில் இன்றைய குமாரபுரம் படுகொலை குறித்துக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை பி.பி.சி க்கு வழங்கிய உரையில் படுகொலையை உறுதிப்படுத்தினாரே தவிர, அதுகுறித்துத் தமது கண்டனத்தைத் தெரிவிக்கவோ அன்றி இராணுவத்தையோ அரசையோ சாடவுமில்லை. மாறாகக் கொல்லப்பட்டோருக்கு நிவாரணம் தாருங்கள் என அரசைக் கெஞ்சியே கேட்டுக் கொண்டுள்ளார். இது ஒரு புறம் இருக்கட்டும். ஏனெனில் சிறிலங்கா அரசின் தயவிலேயே இக் குழுக்களின் வாழ்வு இருப்பதினால் நன்றியுள்ள சேவகனாக நடந்ததாக இருக்கலாம். ஆனால் கொழும்பிலுள்ள அன்றி வேறு இடங்களிலுள்ள சிறிலங்கா அரசின் நிலைகள் தாக்கப்படும் போது அவற்றைக் கண்டனம் செய்யும் வெளிநாட்டு அரசுகள் சிலவற்றிக்குத் தமிழர் படுகொலை மட்டும் ஏன் கண்களுக்குத் தெரி வதில்லை. இவர்கள் காட்டும் வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? தமிழர்களின் உயிர்கள் அவர்களுக்கு உயிர்களாகத் தெரியவில்லையா? அல்லது சிறுபான்மையினத்தவரின் உயிர்கள் பெறுமதியற்றவையா? அவ்வாறாயின் இனப்படுகொலையில் ஈடுபடும் பேரினவாதிகளுக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு? வேறு எவரையும் கண்டனம் செய்யும் தார்மீகப் பொறுப்பு இவர்களுக்கு உண்டா? ■

# புலிகள் கப்பல் மூழ்கடிப்பில்....

1 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

இடையே நல்லுறவுகள் உண்டு எனவும் தெரியப்படுத்தியுள்ளார். சிறிலங்கா இராணுவத்தின் மீதும் மற்றும் கேந்திர நிலைகள் மீதும் விடுதலைப் புலிகளின் படையணிகள் தாக்குதல் நடாத்த முனைவதும் அத்தாக்குதல்கள் வெற்றியடை வதும் தோல்வி அடைவதும் சிறிலங்காவின் ஆயுதப்படையினரையும் விடுதலைப் புலிகளை யும் பொறுத்த விடயம். ஏனெனில் இருவரும் எதிர்த்தரப்பினர். தாக்குதல்கள் வெற்றி தோல்வியை அடைந்தே ஆகவேண்டும்.

ஆனால், இவ்விடயத்தில் இந்தியா தலையீடு செய்வது என்பது வேறுவிடயமாகும். இந்திய அரசு உள்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதித்திருப்பது என்பது அதன் எல்லைக்குள் உட்பட்ட விடயமே ஒழிய, அதற்கும் அப்பால் உள்ள விடயமல்ல. ஆகையினால் இந்தியா தனது எல்லைகளுக்கு அப்பால் புலிகளுக்கு எதிரா கச் செயல்படுவது என்பது, அதன் அடாவ டித்தனத்தைக் காட்டும் செயலே ஒழிய வேறெதுவும் இல்லை.

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் அச்சுறுத்தலாக இருக்கின்றது என இந்தியா கடந்த காலத்தில் சுட்டிக்காட்டி இருப்பினும், அவ்வாறானதொரு நிலைப்பாட்டை அதனால் ஆதாரபூர்வமாகவோ அன்றி வெளிப்படையாகவோ நிரூபித்துக் காட்ட முடியவில்லை.

ஏனெனில் அவ்வாறான ஒரு நிலையைக் காட்ட ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால் மறுவளமாக விடுதலைப் புலிகளின் செயற் பாட்டிற்கு எதிராகப் பல தடவை இந்தியா நடந்து கொண்டுள்ளது. சர்வதேச கடற் பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் இரண்டு கப்பல்களை அது வழி மறித்து ள்ளது. அதில் ஒன்றைக் கைப்பற்றி இந்தியா வுக்குக் கொண்டு சென்றது. மற்றொன்றினைக் கைப்பற்ற முயன்றபோது, அதில் இருந்த தளபதி கிட்டு உட்பட 10 விடுதலைப் புலிகள் கப்பலைத் தகர்த்துத் தற்கொடை செய்து கொண்டனர். கடலிற் குதித்த அக்கப்பலின் மாலுமிகளை மட்டும் கைது செய்து இந்தியா கொண்டு சென்றனர். இதில் முதற் கப்பலையும் இதில் இருந்த மாலுமிகளையும் தற்பொழுது நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. இக்கப்பல் இந்திய கடல் எல்லைக்குள் வைத்து பிடிக்கப்பட்டது என்பதையோ, அதில் சட்டரீதியில் விரோதமான பொருட்கள் எவையும், அதாவது ஆயுத தளபாடங்கள் எவையும் இருந்ததாகவோ இந்திய கரையோரக் காவற் படையினரால் நிரூபிக்க முடியவில்லை எனக்காரணம் கூறி நீதிமன்றம் கப்பலையும் மாலுமிகளையும் விடுதலை செய்துள்ளது.

இவ்வாறனதொரு நிலையே தளபதி கிட்டுவின் கப்பலுக்கும் வந்திருக்கும். ஆனால் எதிர்த்தரப்பினரிடம் உயிருடன் சிக்குவதில்லை, அச்சுறுத்தல்களுக்குப் பணிந்து போவதில்லை என்ற விடுதலைப் புலிகளின் மரபில் வந்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும், வீரச்சாவை தழுவிக் கொண்டார்கள். இவர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொள்ளாது விட்டிருந்தால், இந்தியாவும் சிறிலங்காவும் சேர்ந்து இவ்விவகாரத்தை வேறு திசைக்குத் திசைமாற்றியிருப்பார்கள்.

ஏனெனில் இக்கப்பலில் தளபதி கிட்டு வருகின்றார் என்பது இந்தியாவுக்குத் தெரியும். இதேசமயம் தளபதி கிட்டு வருவதற்கு இந்தியா மறைமுகமாகச் சம்மத மும் அளித்து இருந்தது. இந்த நிலையில் இந்தியா கப்பலை வழிமறித்ததும், கிட்டுவைச் சரணடையுமாறு வற்புறுத்தியதும் இந்தியா வின் நோக்கில் வேறு பல சதித் திட்டங்கள் இருந்ததன் வெளிப்பாடே எனலாம்.

இவ்வாறானதொரு அட்டூழிய நடவடிக்கை ஒன்றே, 14-02-96 அன்று அதிகாலையில் சிறிலங்காக் கடற்படையுடன் இணைந்து விடுதலைப் புலிகளின் கப்பலை இந்தியக் கடற்படை தாக்கி அழித்ததாகும். ஆனால் இத்தாக்குதலானது, இந்தியாவின் முன்னைய நிலைப்பாட்டில் இருந்து சற்று வித்தியாச மானதாகும். அதாவது இந்தியக் கடற்படை சிறிலங்காக் கடற்படையுடன் நெருக்கமான தகவல் பரிமாற்றத்தை வைத்திருந்தபோதும்; கூட்டு ரோந்து என்ற ரீதியில் முழு அளவில் அவை செயற்படவில்லை. ஆனால், தற்பொழுது சிறிலங்காக் கடற்படையுடன் இணைந்து விடுதலைப் புலிகளின் கப்பல் களைக் கூட்டாகத் தாக்கும் நடவடிக்கை க்குச் சென்றுவிட்டது என்பதையே காட்டுகின்றது. அதாவது இந்திய அரசானது, தனியாகச் சிறி லங்கா அரசிற்கான தார்மீகமான ஆயுத, தளபாட உதவியை மட்டும் அல்ல நேரடியாகவும், அதேசமயம் மறைமுகமான தாக்குதல் நடவடிக்கைகளிலும் உதவுவ தற்குத் தயாராக உள்ளது என்றே கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிலையானது, பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் இனப்படு கொலை நடவடிக்கைகளுக்கும் இந்தியா நேரடியாக உதவி செய்யத் தயாராக உள்ளது என்பதை வெளிப்படுத்தும் அம்சமாகவே இருக்கின்றது. அதாவது ஆதார பூர்வமற்ற ரீதியில் விடுதலைப் புலிகளினாலும் தமது தேசிய ஐக்கியத்துக்கு இடையூறு ஏற்படலாம் எனக்கூறித் தடைசெய்தது மட்டுமல்லாமல், சிறிலங்கா அரசுடன் இரகசிய இராணுவ கூட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இந்தியா முனைவதானது, தமிழீழப் போருக்கு அது தொடர்ந்தும் இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படும் என்றும் வெளிப்படுத்தி யுள்ளது. இந்த நிலையில் அண்மையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குரல்கள் தமிழகத்தில் மட்டுமல்ல ஏனைய பகுதிகளில் இருந்தும் கேட்கத் தொடங்கியிருப்பது முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். இந் நிலையில் இந்திய அரசின் போக்கைக் கண்டி க்க வேண்டியதும், அதற்கு எதிராக அழுத் தம் கொடுக்க வேண்டி யதும் இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் மக்களின் ஆதரவு சக்திகளே. ஏனெனில் இந்தியாவின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தக்கக்கூடிய ஆற்றல் அவர்களின் கைகளிலேயே உள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துடுப்பாட்டத்திலும் இனப்பிரச்சனையின் அறுவடை

அரசியற் தீர்வு காணப்பட வேண்டிய இனப்பிரச்சனைக்கு, இராணுவத்தீர்வு காணமுற்பட்டதன் விளைவுகளைச் சிறிலங்கா அரசு, இப்பொழுது அறுவடை செய்யத் தொடங்கியுள்ளது. இன்று போரினால், தனியாகப் பாரிய பொருண்மிய நிலைகள் மட்டுமல்ல, உலக அரங்கில் சிறிலங்கா அரசின் அந்தஸ்தும் கேள்விக்குரியதொன்றாகவே மாறியுள்ளது. இந்த வகையில் இன்று, பெரும் பாதிப்பை விளைவிக்கக் கூடிய விவகாரமாக உலகக் கிண்ண துடுப்பாட்ட விளையாட்டுப் போட்டியுள்ளது. சிறிலங்காவில் நடைபெறவிருந்த போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியும், மேற்கிந்திய அணியும் கலந்து கொள்வதில்லை என்று அந்த நாடுகளின் துடுப்பாட்டக் கட்டுப்பாட்டுச் சபையினர் எடுத்த தீர்மானமே இதற்குக் காரணமாகும்.

இயற்கை அனர்த்தம், தொற்று நோய் என்பவற்றால் ஒரு நாடு பாதிக்கப்பட்டிருந்தாலொழிய ஒரு நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேசப் போட்டிகள், மாநாடுகள் போன்றவற்றில் வேறு நாடுகள் பங்குபற்றாமல் இருப்பது செயற்பாட்டாளரைப் பொறுத்து பெருத்த அவமானமே. அதிலும் நாடு என்ற ரீதியில் ஏற்பாடு செய்யும்போது, போட்டிகள் இடைநிறுத்தப்படுவதோ அன்றி தடைப்படுவதோ அந்த நாட்டின் அரச கௌரவத்தைப் பாதிப்புக்குள்ளாக்குவது நிச்சயமாகும். இதனைச் சிறிலங்கா அரசு, போட்டிகளை எப்பாடுபட்டாவது நடாத்தி முடித்துவிட வேண்டும் எனக்காட்டிய ஆர்வத்தில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

அதாவது சிறிலங்கா அரசானது, போட்டிகளை நடாத்துவதற்குத் தன்னாலான சகல ஏற்பாடுகளையும் செய்வதற்குத் தயாராகவுள்ளது என்பதை அதன் அறிவிப்புக்களே காட்டுகின்றன. இவ்வுறுதிமொழிகள் அல்லது ஏற்பாட்டு முறைகள் கூட, சிறிலங்கா அரசின் அந்தஸ்த்தைப் பாதிக்கக் கூடியவையாக இருந்துள்ள போதும், போட்டி நடைபெறாது போனால் ஏற்படும் தலைகுனிவு அதிகம் என்ற ரீதியிலேயே சிறிலங்கா போட்டியை நடாத்த முனைந்தது.

சிறிலங்கா அரசின் ஆரம்ப அறிவிப்பின் பிரகாரம், "கொழும்பு வரும் ஒவ்வொரு அணிக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கப்படும்: இதன் பிரகாரம் விளையாட்டு வீரர்கள் தங்குமிடங்கள், உல்லாசப் பயண விடுதிகள், சென்றுவரும் இடங்கள் மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளும் இடங்கள் யாவற்றிலும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படும். இது ஒரு நாட்டின் அதிபருக்கு அளிக்கப்படும் பாதுகாப்புப் போன்றதாக இருக்கும்" என உறுதி கூறப்பட்டது. அதன் பின்பும் நிலைமை சீரடையவில்லை. அதனால் விமான நிலையத்திலிருந்து விளையாட்டு அரங்கிற்குச் செல்ல உலங்கு வானூர்தி ஏற்பாடு செய்யவும் விடுதிகளிலிருந்து விளையாட்டு மைதானத்திற்குச் செல்லும் வீதிகளில் போக்குவரத்தைத் தடைசெய்யவும் இந்தியாவிலோ அன்றி மாலைதீவிலோ இரவு தங்கிவிட்டுக் காலையில் வந்து போட்டிகளில் கலந்து கொள்ளவும் மாலையில் அந்த நாடுகளுக்குத் திரும்பிச் செல்லவும் சிறிலங்கா அரசு ஏற்பாடு செய்து கொடுக்கத் தயாராக இருந்தது. இந்த வகையில் சிறிலங்கா அரசு இச்சலுகைகளைச் செய்வதற்குக் காரணம், துடுப்பாட்டப் போட்டியினால் கிடைக்கப்போகும் சிறுதொகை வருமானத்திற்காகவல்ல. சர்வதேச விளையாட்டுப் போட்டி ஒன்றை அதுவும் 12 நாடுகள் கலந்து கொள்ளும் ஒரு போட்டியில், சில போட்டிகளைக்கூட நடாத்தக்கூடிய ஆற்றல் சிறிலங்காவிற்கு இல்லை என்ற கணிப்பு ஏற்பட்டுவிடும் என்பதினாலேயே ஆகும். இதனால் சர்வதேச அரங்கில் சிறிலங்காவும் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகலாம். ஏனெனில் அவுஸ்திரேலியாவும், மேற்கிந்தியத் தீவுகளும் தாம் விளையாட மறுப்பதற்குத் தெரிவிக்கும் காரணம் பாதுகாப்பு இல்லை என்பதேயாகும். ஆகையினால் இது தனியாகச் சிறிலங்காவில் நடைபெறவிருந்த துடுப்பாட்டப் போட்டியை மட்டும் பாதிக்கும் விடயமாக இருந்துவிடாது. சிறிலங்காவின் எதிர்கால அரசியல், பொருண்மிய நெருக்கடிகளில் கூட பெரும் பாதிப்பைச் செய்யக்கூடும். சுருக்கமாகக் கூறுவதானால், சிறிலங்கா பாதுகாப்பு அற்ற நாடு என்ற பெயரைப் பெற்றுக் கொண்டமையானது அதற்கு வெளிநாட்டு மூலதன வருகையினையும், அதன் வருமானம் முழுவதையும் பாதிக்கக்கூடியதாக இருக்கும். ஏற்கனவே சிறிலங்கா, போர் அபாயமுள்ள நாடு என்ற பட்டியலில் இடம்பெற்றுள்ள நிலையில் மேலும் புறக்கணிப்புக்கு உள்ளாகும் போது, பாதிப்பு உயர்வாகவே இருக்கும் என்பது நிச்சயம். இதனைச் சிறிலங்கா அரசு நன்கு உணர்ந்து கொண்டதினாலேயே எப்பாடுபட்டாவது அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளைச் சிறிலங்காவிற்கு அழைத்து வருவதில் தீவிர அக்கறை காட்டியது. இதன் காரணமாகவே துடுப்பாட்டக் கட்டுப்பாட்டுச் சபைக்கு அப்பாலும் இராஜதந்திர ரீதியான முயற்சியையும் சிறிலங்கா மேற்கொண்டது. இதனை, இரு அரசுகளுக்குமிடையிலான (சிறிலங்கா–அவுஸ்திரேலியா) இராஜதந்திர ரீதியிலான உறவுகளைப் பாதிக்கும் விடயமாகவே சிறிலங்கா எடுத்துள்ளது. அதாவது, அவுஸ்திரேலியா அணியின் பாதுகாப்புக்குப் சிறிலங்கா அரசு உத்தரவாதம் அளிக்கும் எனத்தெரிவித்த வேளை, அவுஸ்திரேலியாவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் சிறிலங்காவில் நடக்கும் போட்டிகளுக்குக் குந்தகமாக அமையுமானால், அது அவுஸ்திரேலியாவுடனான இராஜதந்திர ரீதியிலான உறவுகளைப் பாதிக்கும் என எச்சரிக்கை செய்யும் அளவிற்குச் சென்றதிலிருந்து இதனைப் புரிந்து கொள்ளலாம். இது குறித்துச் சிறிலங்கா வெளிநாட்டமைச்சர், அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சருக்கு அனுப்பிய தகவலில் "ஏனைய நாடுகள் சிறிலங்கா வருவதை அவுஸ்திரேலியா தடுக்குமானால், அது ஒரு பகைமைச் செயலாகவே கருதப்படும்" என எச்சரிக்கை செய்திருந்தார். ஆனால் சிறிலங்காவின் எச்சரிக்கை எந்தளவில், அவுஸ்திரேலியாவைப் பாதிக்கும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் சிறிலங்கா அரசு எண்ணுவதுபோல், இனப்பிரச்சனை தொட்டு சகல விடயங்களிலும் இவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ள உலகம் கண்மூடிக்கொண்டு இருக்கவில்லை. அதேவேளை, அவுஸ்திரேலிய அணி சிறிலங்கா வருவதற்கு முடிவு ஒன்றை எடுத்திருக்குமானால், அதுகூடச் சிறிலங்கா கூறும் உறுதிமொழிகளுக்காகவோ அன்றி எச்சரிக்கைக்காகவோ இருந்திருக்காது.■

# மனிதாபிமான அமைப்புக்களின் முயற்சிக்கும் சிறிலங்கா அரசு முட்டுக்கட்டை

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பிற் தங்கியுள்ள மக்களுக்கு, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கவெனத் தனிப்பட்ட சில அமைப்புகள் எடுத்த முயற்சியும் சிறிலங்கா அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளாற் கைகூடாமற் போய்விட்டுள்ளது. அவை தாண்டிக்குளத்தில் வைத்துச் சிறிலங்காப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. இதனையடுத்து இவ்வமைப்புகள், சர்வதேச ரீதியிற் சிறிலங்கா அரசின் இம் மனிதாபிமானமற்ற செயலை அம்பலப்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளன.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையின் போது, வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்கள். குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் உள்ள நலனோம்பு நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருப்பது தெரிந்ததே.

இடம் பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களையும், உணவினையும் வழங்க முன்வந்த சில அமைப்புக்கள், அவற்றை லொறிகளில் ஏற்றி வந்தன. தாண்டிக்குளம் தடைமுகாமை வந்தடைந்ததும் அங்கு சோதனையில் ஈடுபட்டுள்ள படையினர், அவற்றை வடபகுதிக்குள் கொண்டு செல்ல அனுமதி வழங்க மறுத்ததுடன், திருப்பிக் கொண்டு செல்லுமாறும் பணித்துள்ளனர்.

படையினரின் இத்தகைய கெடுபிடிகளால் மனம் வேதனையுற்ற அவ்வமைப்புக்கள், அவற்றைத் திருப்பிக்கொண்டு சென்றதுடன், சிறிலங்கா அரசினதும் அதனது படைகளினதும் இத்தகைய மனிதாபிமானமற்ற செயல்களைக் கண்டித்ததுடன், இது குறித்து சர்வதேச நாடுகளுக்கும் தெரியப்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளன.■

# நல்லதென்ன ?

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், தனது அடாவடித்தனங்களை இந்தியா அவ்வப்போது மிக முரட்டுத்தனமாகப் பதித்து வருவது வேதனைக்குரியது. ஆரம்ப காலத்திலிருந்தே இந்தியா தனது பூகோள நலன்களை மட்டுமே மையமாக வைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சந்தேகக்கண் கொண்டு பார்த்ததும், அதனூடு பல இயக்கங்களை வளர்த்து, அவற்றிடையே மோதல்களை ஏற்படுத்திப் படிப்படியாகப் பின் அவற்றை அழித்ததும், தமிழர் கட்சிகள் மட்டுமல்லாது சிங்களக் கட்சிகளிடையேயும் ஊடுருவ முயன்றதும், கட்சிகளைக் கைப்பொம்மையாக்க முயன்றதும், இப்படியாக இலங்கை அரசியலில் வல்லாதிக்கத் தனத்துடன் நடந்துகொண்டமை வரலாறு.

அதேபோல, தமது இராணுவத்துடன் தமிழீழத்தில் உள்நுழைந்து எமது போராட்டத்தை நசுக்க முனைந்ததை விடுதலைப் புலிகளின் இராஜதந்திரமும், வீரமும் செறிந்த போராட்டமும் வென்றதும் வரலாறு.

இந்த வரலாற்றுப் பாடங்களை மீறி, இந்தியா புரிந்த சதிகளில், தமிழீழ விடுதலைப் போராட்டம் கொடுத்த விலை மிக மிக அதிகம். வாக்குறுதிகளை நம்பி இழக்கப்பட்ட காலம், துரோகத் தனங்களால் பறிகொடுத்த சொத்துக்கள் என்பவற்றினூடு ஜொனி, தீலிபன், குமரப்பா– புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகள், அன்னை பூபதி, கிட்டண்ணாவுடன் ஒன்பது போராளிகள் போன்றவர்கள் மட்டுமல்லாது, இந்தியா தமிழீழத்தை ஆக்கிரமித்தபோது போராடி இறந்த 700க்கும் அதிகமான போராளிகள், 6000 க்கும் மேற்பட்ட அநியாயமாக இறந்த நல்ல கல்விமான்கள் உள்ளிட்ட பொதுமக்கள் என்று இந்தியா பலி எடுத்தது. பலி எடுத்துக் கொண்டேயிருக்கிறது. அந்த வரிசையில் இன்று முல்லைத்தீவுக் கடலில், புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவமும் இரத்தம் தோய்ந்த வரிகளில் பதியப்படுகிறது.

தாக்குதலுக்குச் சென்ற கப்பலை மூழ்கடித்த சம்பவத்தில் தமக்குச் சம்பந்தமில்லையென இந்தியா மறுத்தாலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குத் தமிழகத்தில் பெருகிவரும் ஆதரவினால் தனது சம்பந்தம் என்ன? என்பதை ஒத்துக்கொண்டால் உருவாகப்போகும் தமிழக எதிர்ப்புக்கு அஞ்சியே, இந்தியா அதனை மூடி மறைக்க முயல்வது தெளிவு. ஆனாலும் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் பலர், இவ் இழிசெயலை எதிர்த்துக் குரலெழுப்பியது நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியது கண்கூடு.

அதேவேளை, இத்தாக்குதலை நிகழ்த்திய சிறிலங்காக் கடற்படைக் கப்பலொன்றின் தலைமைச் சிப்பந்தியினை 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' என்ற செய்தி நிறுவனம் செவ்வி கண்டபோது, அந்தத் தாக்குதற் சம்பவத்தை ஒத்துக் கொண்டபோதும் இத் தாக்குதலில் இந்தியக் கடற்படை நேரடியாகச் சம்பந்தப்பட்டதா என நிருபர் கேட்ட கேள்விக்கு, தான் இது பற்றி ஆம் என்றோ இல்லையென்றோ சொல்லத் தயார் இல்லையென மறுத்துவிட்டார். அதேவேளை, இருதரப்புக் கடற்படைகளும் போராளிக் கப்பல்களது நடமாட்டங்களையும், நடவடிக்கைகளையும், இரு கடற்படைகளிடையேயும் பரிமாறிக் கொள்வது வழமை என்றும் கூறியுள்ளார். இதுவும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டியதொன்று.

எது எப்படியிருப்பினும், எமது விடுதலைப் போராட்டம் இந்தியாவுக்கோ அல்லது அதனது பாதுகாப்புக்கோ எதிரானதல்ல. இது எத்தனையோ தடவை திரும்பத் திரும்ப விடுதலைப் புலிகள் தரப்பில், எல்லா வழிகளிலுமே தெளிவாகத் தெளிவுபடுத்தப்பட்டதொன்று. அப்படியிருந்தும் இந்தியா அதனைப் புரிந்து கொள்ள மறுக்கிறது. இது தமிழ் மக்களுக்கு மிக மிக வேதனையளிக்கிறது. இது நல்லதல்ல. அப்போ நல்லதென்ன? இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையிற் தற்போது கொண்டுள்ள தமிழீழம் பற்றிய கொள்கையை மறுபரிசீலனை செய்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் புலிகளையும் அங்கீகரிப்பதே நல்லதாகும்.■

www.tamilarangam.net

# தீராத திரவப் பணச் சிக்கல்

யாழ். மாவட்டத்தில், குடிசார் நிர்வாகத்தை ஏற்படுத்தப் போவதாகப் பிரச்சாரம் செய்துவரும் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகள், அங்கு சொற்ப அளவிலேனும் செயற்படும் அரசு நிர்வாகத்தை முடமாக்கும் அளவிற்குச் சென்று கொண்டிருப் பதாக அரச அதிகாரிகள் சிலர் கருதுகின்றனர். அரச ஊழியர் தமது சம்பளக் காசோலைகளைப் பணமாக்க முடியாத நிலை. ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியக் கட்டளைகளை வைத்துக் கொண்டு தவிக்கும் நிலை – அரச வங்கிகளில் மக்கள் நம்பிக்கையிழந்த நிலை என்பவற்றை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வடபகுதியில், திரவப்பணம் இல்லாததால் ஏற்படும் சிக்கல் நாளுக்கு நாள் விசுவரூபம் எடுத்து வருகிறது. கப்பல் மூலம் வங்கிகளுக்கு எடுத்துவரப்படும் பணம் மூன்று மாதங்களுக்கு மேலாகத் தடுக்கப்பட்டுள்ளது. அரச, திணைக்கள, கூட்டுத்தாபன அதிகாரிகள், ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கத் தரைவழியாக – தாண்டிக்குளம் ஊடாகப் பணம் எடுத்துவர மேற்கொண்ட முயற்சிகள் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் தோல்வி அடைந்துள்ளன. இடம்பெயர்ந்து துன்பமுறும் மக்களுக்கு உதவ, பணம் எடுத்துவர அரசசார்பற்ற நிறுவனங்கள் எடுத்த முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. இந்நிலையில் வட பகுதியில் பணச்சுற்று முற்றாகச் சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாத காலமாகச் சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் திரவப் பணத்திற்கான தடையினால் அரச, திணைக்கள, கூட்டுத்தாபன ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளக் காசோலையைப் பணமாக்கிக் கொள்ளப் பகீரத முயற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பலர் பெருமளவு தரகுப் பணத்தைச் செலுத்தி, இந்தக் காசோலைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்கோ அல்லது இந்தக் காசோலைகளைப் 'பொருட்களாக' மாற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்கோ தள்ளப்பட்டுள்ளனர். இதனை விரும்பாதவர்கள் குறைந்தது இரண்டு காசோலைகளையாவது கைவசம் வைத்திருக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதனால், அரச ஊழியர்கள் அரசின் மேல் விரக்தி கொண்டு வேலைநிறுத்தம் செய்யுமளவிற்குச் சென்றுள்ளனர். ஓய்வூதியம் பெறுபவர்களின் நிலையும் இதுவாகவே உள்ளது. இடம்பெயர்ந்து அல்லற்படும் இன்றைய நிலையில் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களைக்கூட, பணம் செலுத்திப் பெறவேண்டிய பரிதாபநிலை இவர்களுடையது.

இவர்களைவிட, பரிதாபகரமான நிலையில் அரச, தனியார் வங்கிகளில் தமது சேமிப்புகளை வைப்பிலிட்டவர்கள் உள்ளனர். பணமாகச் செலுத்திய தமது வைப்புக்களைக் கூட, தமக்குத் தேவையான நேரத்தில் பணமாக மீளப் பெறமுடியாத நிலையில் இவ் வங்கிகள் மீது இவர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இவற்றைச் சீர்செய்ய, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவையும் இதுவரை பயன்தராத நிலையில் அவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு காலகட்டத்தில் அரசபடைகளின் கண்முன்னால் தாம் தாக்கப்பட்டதாலும், பின்னர் அரசபடைகளாலேயே கொல்லப்பட்டதாலும் தமிழ் மக்கள் சிறிலங்காப் படையினர் மீது முற்றுமுழுதாக நம்பிக்கை இழக்கவேண்டி ஏற்பட்டது. இதனால் இன்று, சிறிலங்கா அரசின் படைகளின் நடவடிக்கைகளை அவர்கள் முற்றாகப் புறக்கணித்துள்ளனர்.

ஒப்பந்த மீறல்கள், வேலைவாய்ப்பில் பாரபட்சம், உயர்கல்வி மறுப்பு, பொருண்மியத்தடை எனக் காலத்துக்குக்காலம் சிறிலங்காவில் ஆட்சிப்பீடமேறியோரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சிங்கள அரசுகள் மீது தமிழரை வெறுப்படைய வைத்தது. இன்று சிறிலங்கா அரசின் குடிசார் நிர்வாகத்தை நடத்திய – நடத்தி வரும் தமிழ் ஓய்வூதியர் – அரச ஊழியர்களிற்கு ஏற்பட்டுள்ள விரக்தி நிலை அரச உத்தியோகத்தின்மீதும் வெறுப்பினை ஏற்படச் செய்துள்ளது.

இவ்வாறு சிறிலங்கா அரசு மேற்கொண்டுவரும் இந்நடவடிக்கைகளானது, தமிழ் மக்களுக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தி, அவர்களின் அன்றாட வாழ்க்கையைச் சிதைக்கும் முயற்சிகளின் ஒரு அங்கமாகவே அமைந்துள்ளது. அதே வேளை, தமிழர் பகுதிகளிற் தனது கட்டுப்பாட்டை முற்று முழுதாக இழந்துவரும் கையறு நிலையின் வெளிப்பாடாகவுமே மக்கள் இவற்றை உணரத் தலைப்பட்டுள்ளனர்.

எது எவ்வாறாயினும் பணப் பிரச்சனை ஒரு வாழ்வுச் சிக்கல். இதைக்கருவியாக்கி, அரசு தமிழ் மக்களை இன்னொரு வகையில் நெருக்கடிக்குள்ளாக்கி பணிய வைக்கலாமென நினைப்பது அறிவீனத்தின் உச்சநிலையாகும். அரசின் அதிகார ஆதிக்கவெறியின் பல்வேறு அகோர முகங்களைக் கண்டு சலித்த தமிழ் மக்கள், இந்நடவடிக்கையினூடாக இன ஒடுக்குமுறையின் இன்னோர் பரிமாணத்தைப் புரிந்து கொண்டவர்களாகியுள்ளனர் என்பதும் உண்மையாகும்.■

> **பணப் பிரச்சனை ஒரு வாழ்வுச் சிக்கல். இதைக் கருவியாக்கி, அரசு தமிழ் மக்களை இன்னொரு வகையில் நெருக்கடிக்குள்ளாக்கி, பணிய வைக்கலாமென நினைப்பது அறிவீனத்தின் உச்சநிலையாகும். அரசின் அதிகார ஆதிக்கவெறியின் பல்வேறு அகோர முகங்களைக் கண்டு சலித்த தமிழ் மக்கள், இந்நடவடிக்கையினூடாக இன ஒடுக்கு முறையின் இன்னோர் பரிமாணத்தைப் புரிந்து கொண்டவர்களாகியுள்ளனர் என்பதும் உண்மையாகும்.**

# தீட்டும் திட்டங்களும் தோற்கும் நடவடிக்கைகளும்

சசீகரன்

உயிர், உடமை இழப்புக்களைக் கருத்திற் கொள்ளாது, புலிகளை விரட்டிவிட்டு, எஞ்சும் மக்களைத் தம்பிடிக்குள் சிக்க வைத்து அடக்கியாள இட்ட திட்டம், தவிடுபொடியாகிவிட்ட நிலையில் தவிக்கிறது சிங்களப் பேரினவாதம்.

நீண்டகாலமாகத் திட்டமிட்டுப் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டதே, சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையெனச் சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் வெளிப்படையாகக் கூறியுள்ளார். திட்டமிட்டு நடத்தப்பட்ட படையெடுப்பின் மூலம் அவர்கள் எதைத்தான் சாதித்து விட்டார்கள்?

இருபதாயிரம் மக்கள் அழிக்கப்படுவார்கள், கோடிக்கணக்கான சொத்துக்கள் நாசமாக்கப்படும், ஆயிரக்கணக்கான புலிகள் அழித்தொழிக்கப்படுவார்கள், புலிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடலாம், சிங்கள மக்கள் மத்தியிற்றமது செல்வாக்கை வலுப்படுத்திடலாம், இதுவரை யாரும் சாதிக்காத ஒன்றைச் சாதித்துக்காட்டி அரசியல் இலாபம் ஈட்டலாம், யாழ்ப்பாணத்தில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி மக்களிடமிருந்து புலிகளைப் பிரித்தாளலாம் என்ற சிங்களப் பேரினவாதிகளின் கனவுகள் புஸ்வாணமாகிவிட்டன.

பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டே தாம் இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக இராணுவத் தளபதிகள் கொட்டமடிக்கின்றனர். எதிர்ப்பு இல்லாத திசைகளூடாக முன்னேறியது, இழப்பு ஏற்பட்டதும் படையணிகளை வாபஸ்பெற்று புதிய படையணிகளை நகர்த்தியது, அடுத்த படையணிக்கே தெரியாத வகையில் இராணுவத் தரப்பு இழப்புக்களைக் கூடுமானவரையில் மூடிமறைத்தது, 'லீப்போவேட்' முன்னேறிப்பாய்தலில் விட்ட தவறுகளைக் கருத்தில் கொண்டு படிப்படியாக நிலைகளைப் பலப்படுத்தி இராணுவ அணிகளைச் சீரமைத்தது, தமது தரப்பு இழப்புக்களை மூடிமறைத்து விடுதலைப் புலிகளின் இழப்பினைப் பன்மடங்கு உயர்த்திக்கூறிச் சிங்கள மக்களை ஆறுதற்படுத்திப் படையினருக்கு உட்சாகத்தை ஏற்படுத்தியது, இவைகள்தான் இவர்கள் வெற்றிகரமாகக் கையாண்ட இராணுவ தந்திரோபாயங்கள்.

இதன் மூலம் இவர்கள் எதிர்பார்த்த எதுவுமே நிறைவேறாது போய்விட்டது. வலிகாமத்தை, தமக்குச் சாதகமான பகுதிகளூடாக முன்னேறி மூடிவிடுவதன் மூலம் புலிகளை அங்கிருந்து விரட்டிவிட்டு இலட்சக்கணக்கான தமிழர்களையும் பணயப் பொருளாக வைத்துக்கொண்டு இராணுவத்தையும் நிலைகொள்ளச் செய்துவிடலாம் என போட்டதிட்டம் தவிடுபொடியாகி எதிர்மாறாகிவிட்டது.

இராணுவம் கோப்பாயை அடைவதற்கு முன்னரே, ஐந்து இலட்சம் மக்களும் வலிகாமத்தை விட்டு ஓர் இரவுக்குள்ளேயே வெளியேறிவிட்டமையும், வெளியேறிவிடுவர் என எதிர்பார்த்த புலிகள் வலிகாமத்துக்குள்ளேயே முகாமிட்டுக் கொண்டமையும், அரசுக்கும் அரச படையினர்க்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்துவிட்டது.

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரையும் டாங்கிகளையும் இழந்து கோடிக்கணக்கில் செலவிட்டதும்தான் மிச்சமே தவிர, வேறெதையுமே இந்தச் 'சூரியக்கதிர்' சாதித்துவிடவில்லை.

விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து மக்களை மீட்டு அவர்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறிக்கொண்டிருந்த ஜனாதிபதியின் முகத்தில் தமிழ் மக்கள் கரியைப் பூசி விட்டார்கள். விழுந்தவன் மீசையில் மண்படவில்லை என்ற நிலையில் தம்பிடியில் இருந்து தப்பியோடிய தமிழர்களை மீண்டும் எவ்வாறு மடக்கிப் பிடிக்கலாம் என்ற திட்டத்தை வகுப்பதிலேயே மூழ்கிக்கிடக்கிறது சிங்களப் பேரினவாதம்.

விடுதலைப்புலிகளிடம் பறிபோவதிலிருந்து கிழக்கைப் பாதுகாப்பதா? – வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள புலிகளை அங்கிருந்து வெளியேற்றுவதா? – வடமராட்சிக் கரையோரமாக இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு கடற்புலிகளின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி, படை நகர்விற்குக் கடல்வழிப்பாதையை இஸ்திரப்படுத்திக் கொள்வதா? – கிளாலியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து குடாநாட்டைத்துண்டாடி மக்களைத் தம் பிடிக்குள் கொண்டு வருவதா? என்பது குறித்தே சிறிலங்கா அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இத்திட்டங்களில் எதை இவர்கள் மேற்கொள்ள முற்பட்டாலும் அதற்கு முன், புலிகள் கொடுக்கப் போகும் பதிலடியில் இவை அனைத்தும் தூள் தூளாகிவிடப்போவது மட்டும் உறுதியென இராணுவ ஆய்வாளர்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ் நிலத்தினை ஆக்கிரமிக்கவும், தமிழரை அழிக்கவும் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் ஏற்படும் தோல்விகளால், அடுத்த நடவடிக்கை குறித்து ஆராய்ந்துவரும் அரசு, கடந்த தோல்விக்கான காரணத்தைக் கண்டறிந்து புதியதிட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்வது வழமையானதே. எனினும் இவர்கள் ஒவ்வொரு முறையும் புதிய புதிய திட்டங்களை வகுத்து அமுற்படுத்தும் போதும் புலிகளும் மக்களுமாக இணைந்து அதனை முறியடித்து வருவது வரலாறாகி வருகிறது.■

# சுயகௌரவம் இழந்தவர்கள் யார்?

முழுத்தமிழ்ச் சமுதாயமுமே தனது சுயகௌரவத்தை இழந்துவிட்டது. ஏனெனில், தமிழர்கள் அனைவருமே சந்தேகநபர்களாக நடாத்தப்படுகின்றனர். இது தமிழர்கள் எவரும் தொடுத்துள்ள கண்டனம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்காவை நீண்டகாலம் ஆட்சி செய்த, ஐ.தே. கட்சியின் இன்றைய தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவின் கண்டனமாகும். எதிரகட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் கண்டனமானது, சிறிலங்காவின் பிரசைகள் என்ற ரீதியில், தமிழர்களைச் சிங்கள ஆட்சியாளர்கள் சந்தேகக்கண்கொண்டு பார்ப்பதும், நடாத்துவதும் என்ற கண்டனம் சரியானதே. அதாவது சிங்கள அரசின் பிரசைகள் என்ற ரீதியில், தமிழ் மக்களின் சுயகௌரவத்தைச் சிங்கள ஆட்சியாளர்கள் மதிக்கவில்லை என்பதே இன்றைய யதார்த்தமாகும். ஆனால் இவ்வாறானதொரு நிலை, அதாவது தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரசைகள் என்ற நிலை உருவாகுவதற்கும், அவர்கள் சுயகௌரவம் பறிக்கப்படுவதற்குமான நிலை தோன்றுவதற்கும் தனிய இன்றைய ஆட்சியாளர்களை மட்டும் குறைகூறுவது தவறானதாகும்.

ஏனெனில் இவ்வாறானதொருநிலை உருவாகுவதற்குச் சிறிலங்காவில் நீண்டகாலம் ஆட்சிசெய்த கட்சியின் இன்றைய தலைவர் என்ற ரீதியிலும், தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்களை உருவாக்கிய ஐ.தே.கட்சி அரசில் அங்கம் வகித்தவர் என்ற ரீதியிலும் அவருக்கு இதிற் பங்குண்டு. ஆகையினால் இதில் ஐ.தே.க வின் பங்கு என்ன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பங்கு என்ன என்பதே முக்கியமானதாகும். ஆனால் அவற்றை வேறுபடுத்திப் பார்ப்பதும், அளவு செய்வதும் இலகுவானதல்ல. தற்போதைய நேரமும் அதுவல்ல. ஆனால், சிங்களக் கட்சிகள் ஒவ்வொன்றும், ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் ஆட்சிக்கு வரும்போது, தமது சக்திக்கு ஏற்ப தமிழரின் சுயகௌரவத்தையும், பாதுகாப்பையும் சீர்குலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பதே உண்மையாகும்.

ஆனால், சிறிலங்காவின் பிரசைகள் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சுயகௌரவக் குறைவானது, தமிழீழ மக்கள் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் தமது சுயகௌரவத்தை மீட்பதற்காகப் போராட்டத்தை நடாத்திக் கொண்டு இருக்கின்றனர். தமது மண்ணில் தமது ஆட்சியை நிறுவித் தலைநிமிர்ந்து வாழ்வதே அவர்களின் குறிக்கோளாகும். இந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டதோ, அன்றே தமிழ் மக்கள் தமது சுயகௌரவத்தை இழந்து வாழத் தயாராக இல்லை என்பதே உலகிற்கு உணர்த்தப்பட்ட செய்தியாகும். இதில் துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் என்வனவற்றைத் தமிழ் மக்கள் சந்தித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அடிபணிந்து சுயகௌரவம் இழந்து வாழமாட்டார்கள் என்பதே தற்பொழுது நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிற் தமிழர் தாயகத்தில்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

www.tamilarangam.net



# தாண்டிக்குளத்தில் இராணுவத்தின் தமிழர்கள் மீதான அடாவடித்தனங்கள்

வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாமூடாகக் கொழும்பு நோக்கிச் செல்லும் தமிழ்ப் பயணிகள், சிறிலங்கா இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்படுவதுடன், விசாரணை என்னும் பெயரிற் சித்திரவதைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

03-02-96 அன்று இவ்வாறு சென்ற பயணிகள் பலரின் அடையாள அட்டைகளைப் பறித்து எடுத்ததோடு, பயணிகளில் வயோதிபர்களை ஓமந்தைப் பகுதிக்குத் திருப்பி அனுப்பிவிட்டு ஏனையோரைத் தடுத்து வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

பறித்த அடையாள அட்டைகள் பலவற்றைப் படையினர், பயணிகள் முன்னேயே கிழித்தெறிந்தும் உள்ளனர். இதேவேளை, கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி வந்த பயணிகள் எவரையும் வடபகுதிக்குள் நுழைய இராணுவம் அனுமதிக்கவில்லை. ஓமந்தைத் தடைமுகாம் ஊடாக வவுனியா நகரை வந்தடைந்த பிரயாணிகளில் வியாபாரிகள் அனைவரையும் சிறிலங்கா இராணுவத்தினர் நொச்சிமோட்டையில் வைத்துப் பேரூந்துகளில் ஏற்றி மீண்டும் வவுனியாவிற்குக் கொண்டு சென்றனர். நொச்சிமோட்டைப் பாலத்திற்கு அருகாமையிற் திரும்பிக் கொண்டிருந்த மக்களைத் தடுத்து நிறுத்திய படையினர் ஆண், பெண் எனத் தனித்தனியாகப் பிரித்து அடையாள அட்டைகளைப் புரட்டிப் புரட்டிச் சோதனை செய்தனர். இதனைத் தொடர்ந்து இவர்களை மீண்டும் நான்கு பேரூந்துகளில் ஏற்றி வவுனியாவிற்குக் கொண்டு சென்றனர். இவ்வாறு கொண்டு சென்றவர்களிற் பெண்கள், சிறுபிள்ளைகள் என 38 பேரை மாத்திரமே வட பகுதி நோக்கிச் செல்ல அனுமதித்தனர்.

கொழும்புக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, 31-01-96 இரவு 11 மணியளவில் வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர், அங்கு 'லொறி'களுக்குள் நித்திரையில் ஆழ்ந்திருந்த 15 'லொறி'ச் சாரதிகளைப் பிடித்துச் சென்றுள்ளனர். வவுனியாவில் இருந்து மறுநாள் வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுடன் வரவிருந்த 'லொறி'களின் சாரதிகளே இதில் அதிகமாக அடங்குவர். ஏனைய சாரதிகள் தங்கள் வாகனங்களுக்குள் நித்திரை கொள்ளாமல் வேறு இடங்களில் உறங்கியதால் தப்பித்துக் கொண்டனர். மறுநாள் சுமார் 50 'லொறி'கள் வடபகுதிக்கு வரவிருந்தன. ஆனால் அதில் 39 'லொறி'களே வடபகுதிக்குச் சென்றுள்ளன. கைது செய்யப்பட்ட சாரதிகளுக்கு என்ன நடந்தது என்று அறியப்படவில்லை.

வவுனியாவில் வைத்துக் கிளிநொச்சிச் செயலகத்திற்கான வாகன அணி உத்தியோகத்தர்கள், சிறிலங்காப் படையினரின் கெடுபிடிகளுக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். வவுனியாவிற் கிளிநொச்சி மாவட்டத்திற்கான வாகன அணி தொடர்பான அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வாகன அணி உத்தியோகத்தர் ஒருவர் சிறிலங்காப் படையினராற் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

தாண்டிக்குளம் தடைமுகாமூடாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென வரும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உடைத்தும், குத்திப் பார்த்தும் ஏற்றியும் இறக்கியும் சோதனை செய்யப்படுவதாற் பொருட்கள் மிகுந்த சேதத்திற்குள்ளாகி வருகின்றன என ப.நோ.கூ. சங்கங்கள் புகார் செய்துள்ளன. பல இலட்சம் ரூபாக்கள் பெறுமதியான பொருட்கள் இவ்வாறு சேதமாக்கப்பட்டே வருகின்றன.■

# உரம், மீன்பிடி வலைகள் எடுத்துச் செல்லத் தடை

வடபகுதிக்குச் சிறிலங்கா அரசால் சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்ட உரவகைகளுடன் ஏனைய உரவகைகள், கிருமி நாசினிகள் என்பனவற்றைச் சிறிலங்கா இராணுவத்தினர் உத்தியோகப் பற்றற்ற முறையில் தடைசெய்வதினால், இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக விளைச்சல் மிகக் குறைவாகவே இருக்குமெனக் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். இதனால் இங்குள்ள மக்களின் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது.

கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் மீன்பிடி உபகரணங்களை வடபகுதிக்கு எடுத்துவரத் தாண்டிக்குளத்தில் இராணுவத்தினர் அனுமதி மறுப்பதாகவும், பல கட்டுப்பாடுகளை விதிப்பதாகவும் வடமராட்சியிலுள்ள கடற்றொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. வலைகளுக்குப் பாவிக்கும் 'நைலோன்' கயிறுகள், வலைச்சாயம், தூண்டில்கள் என்பனவற்றைக் கூட எடுத்துச் செல்லத் தடை விதித்துள்ளனர். அனுமதிக்கப்படும் உபகரணங்களையும் கொழும்பில் இருந்து எடுத்துவர வவுனியா இராணுவம் தடைவிதித்துள்ளது. இவற்றை வவுனியாவிலுள்ள வியாபாரிகளிடமே கொள்வனவு செய்ய வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளனர். இதனால் மிக அதிக விலை கொடுத்தே இவற்றை வாங்க வேண்டியுள்ளதென அச்சங்கம் மேலும் அறிவித்துள்ளது.■

# போசாக்குணவைத் தடுக்கும் சிறிலங்கா அரசு

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்களுக்கான போசாக்குக் குறைவை நிவர்த்தி செய்வதற்காகப் பெறப்படும் சத்துணவான பால்மாவை வடபகுதிக்குக் கொண்டு வருவதற்குச் சிறிலங்கா அரசு தடைகளைப் போட்டு வருகிறது. இதனால் இப்பகுதியிற் தொடர்ந்தும் போசாக்குக் குறை காணப்படுவதாக வடபகுதிச் சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். "போசாக்குக் குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும், இன்றேல் நோய்த்தாக்கங்கள் அதிகமாவதைத் தடுக்க முடியாமற் போகவேண்டி இருக்கும்" எனவும் கூறியுள்ளார். இருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுப்பப்பட்ட சத்துணவு மாப்பொதிகள் கூடப் பெரும்பாலானவை பழுதடைந்த நிலையிலேயே இருப்பதாகப் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார்.■

# யாழ்ப்பாணத்தில் இராணுவம் சிக்கியுள்ளது மட்டக்களப்பில் புலிகள் சுதந்திரமாக செயற்படுகின்றனர்

## –முன்னாள் பிரதமர் ரணில்

"யாழ்ப்பாணத்தில் இராணுவம் சிக்குண்டுகொண்டு தவிக்கிறது: மட்டக்களப்பில் இராணுவம் தாக்குவதாகக் கூறுகிறபோதிலும், விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் சுதந்திரமாகப் பத்திரிகையாளர் மகாநாடு நடத்துவது உலகறிந்த உண்மை. இந்நிலையில் இன்று யுத்தத்தை வெற்றியாக முடிக்க முடியுமா? என்று கேட்பவர்களுக்குப் பதிலளிக்கச் சந்திரிகா, யுத்தத்தில் வெற்றி பெறுவது எப்படி? யுத்தத்தை முடிப்பது எப்படி? என்று தொலைக்காட்சியிற் கேள்வி கேட்டு அங்கலாய்ப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தக் கேள்வியை அவர் ரத்வத்தயிடமோ அல்லது பீரிஸ்சிடமோதான் கேட்க வேண்டும். யுத்தத்தை முடிக்க முடியாதென்றால் உண்மை நிலையை நாட்டுமக்களுக்குப் பகிரங்கமாகக் கூற வேண்டும். சந்திரிகாவே யுத்தத்தை முடிக்க இயலாது எனத் தொலைக்காட்சியில் கூறுகிறார். ஆனால் அரசாங்கம் இதை மூடி மறைத்துச் செய்திகள் வெளியிடுகிறது. யாழ்ப்பாணத்தில் 2000 விடுதலைப் புலிகள் சிக்கிவிட்டதாகக் கூறினார்கள். ஒரு துப்பாக்கியையாவது அவர்களிடம் இருந்து எடுத்தார்களா? ஒரு விடுதலைப் புலியையாவது கைதாக்கினதாகக் கூற முடியுமா? இன்று யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் இல்லை. வலிகாமம் மக்களுக்கு வீட்டு வசதிகளும், உணவும் வழங்கும்படி அரசாங்கத்தைக் கேட்டோம். இருந்தபோதும் எதையுமே அரசாங்கம் செய்யவில்லை. இதுதான் இன்றைய நிலை. சதாகாலமும் இவற்றை மறைக்க இயலாது"■

இவ்வாறு சிறிலங்காவின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, கண்டி பௌத்த கலாச்சார நிலையத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்டக் கருத்தரங்கிற் கூறியுள்ளார்.■

# கிழக்கிலும் கிளிநொச்சியிலும் இம்மாத முடிவிற்குள் யுத்தம்

அனுருத்த ரத்வத்த சிறிலங்காப் பாராளுமன்றத்தில், தகவற்துறை அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, இம்மாதத்துள் கிழக்கிலும், கிளிநொச்சியிலும் யுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்திருந்தார்.

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் வழிகாட்டுதலின் கீழ், நன்கு திட்டமிட்டு நெறிப்படுத்தப்பட்ட அடிப்படையிலேயே இந்த யுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 3 கிபிர் போர் விமானங்கள் கொழும்பை வந்தடைந்துள்ளன. மேலும் இத்தகைய மூன்று விமானங்களைக் கொள்வனவு செய்யக் கட்டளையும் வழங்கப்பட்டுள்ளது.

ருஸ்யாவிடமிருந்து எம். ஐ. 17 போக்குவரத்து விமானங்கள், எம்.ஐ. 24 ஹின்ட் தாக்குதல் உலங்குவானூர்திகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யும் சிறிலங்கா, கசாகிஸ்தான் விமான மோட்டிகளுடன் கூடிய அன்டனோவ் 24 போக்குவரத்து விமானத்தையும் வாடகைக்கு அமர்த்தத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் விமான ஓட்டிகள் தமிழ்ப் பகுதிகளுக்கு வரமறுப்பதை ஈடுசெய்யவும் சிறிலங்கா முயல்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலி அணிக்கு அஞ்சும் சிறிலங்காப் படைகள், நீரின் கீழான குண்டுத்தாக்குதல்களைக் கண்டுபிடித்து உதவக்கூடிய நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல் ஒன்றைச் சீனாவிடமிருந்து இலவசமாகப் பெறவுமுள்ளது. மேலும், சிறிலங்காவின் பிரதான ஆயுத விநியோக நாடாக விளங்கும் சீனாவிடமிருந்து, படையினரைத் தரை இறக்கும் இரண்டு பீரங்கிப் படகுகளையும் உதவியாகப் பெறவுள்ளது.

இவ்வாறு நவீன ஆயுதமயப்படுத்தலுடன், புதிய இன அழிப்பில் இறங்கவுள்ள சிறிலங்கா, முன்னர் மக்களை விடுவிப்பதற்கான யுத்தம் எனக் கூறி யாழ்க் குடாநாடு மீது யுத்தத்தை நடாத்தியதுபோல, இம்முறையும் பாதை திறப்புக்கான முயற்சி எனக் கூறி, கிளிநொச்சி மீதான யுத்தத்தை முடுக்கிவிடத்திட்டமிட்டு வருகிறது எனக் கூறப்படுகிறது.

ஆயினும், யாழ் குடாநாட்டைக் கைப்பற்றி விட்டதாகச் சந்திரிகாவும் ரத்வத்தையும் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்த வேளையில், குண்டுகளை இனங்காணும் நிபுணர்கள் உள்ளடங்கிய 39 படையினருடன் பறந்து கொண்டிருந்த எம்.ஐ. 17 என்ற உலங்குவானூர்தி, தமிழீழ வான்பரப்பில் இழக்கப்பட்ட சம்பவமானது படையினரிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தன்னியங்கு கருவிகளுடன் இயக்கப்படும் விமானங்களின் துணையைச் சிறிலங்கா நாடி, விமானிகளின் அச்சத்தைப் போக்க முயற்சிப்பதாகத் தெரிகிறது.■

# சிறிலங்காவிற்கு சர்வோதயா உதவி

யாழ் மாவட்டத்தின் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில், சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள புனர் நிர்மாணம் மற்றும் சிவில் நிர்வாக சேவைகளை மேற்கொள்ள உதவியாகச் சர்வோதயம் தனது தொண்டர்களை வழங்க முன்வந்துள்ளது.

இதேவேளை, சர்வோதய அமைப்பே வட-கிழக்கு எல்லைக் கிராமங்களில் பல சிங்களக் குடியேற்றங்களுக்கு உடந்தையாக இருந்து வருவதுடன், மணலாறில் ஏற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களுக்குச் சர்வோதயத்தின் வட – கிழக்கு மாகாணங்களுக்கான நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதுடன், குடியேற்றவாசிகளின் உற்பத்திப்பொருட்களைச்சந்தைப்படுத்தியும் வருகிறது.■

# தொலைத்தொடர்பு வசதிகளுக்கு சிறிலங்கா மறுப்பு

## –யூ.என்.எச்.சீ.ஆர். பணியிலிருந்து விலகல்

சிறிலங்கா அரசு, ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உணவு நிவாரணங்களை அனுப்புவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதற்குத் தேவையான, தொலைத் தொடர்பு வசதிகளை வழங்க மறுத்துள்ளது. இதனால் இவ்அலுவலகம், உணவு நிவாரணங்களை அனுப்பும் பணியிலிருந்துவிலகியுள்ளது. இம்முடிவினால் இப்பகுதிகளில் உணவுத் தட்டுப்பாடு மேலும் அதிகரித்துள்ளது. அகதிகள் தொடர்பான விபரங்களை மேற்கூறப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபர்கள் நேரத்துடனேயே அறிவித்து நிவாரணங்களைக் கோரிய போதிலும், இவர்களின் கோரிக்கைகளைச் சிறிலங்கா அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இதனாற் பலத்த உணவுத்தட்டுப்பாடு ஏற்படக்கூடிய வகையிற் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் உணவுக் களஞ்சியங்களிற் கையிருப்புக்கள் குறைவடைந்துள்ளன. இந்நிலையில், யூ.என்.எச்.சீ.ஆர் அலுவலகத்திற்குத் தொலைபேசி வசதிகள் அளித்துத் தொண்டர் நிறுவனப் பணிகளை அதிகரிக்க உதவுமாறு மக்கள் அமைப்புக்கள் சிறிலங்கா அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.■

# சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் எனும் ஏமாற்றுக்கதை

இனப்பிரச்சனைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான முன்யோசனை எனச் சொல்லிக்கொண்டு சந்திரிகாவினால் முன்மொழியப்பட்ட யோசனைகள், பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவெனத் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணத்தில் முற்று முழுதாக மாற்றப்பட்டுள்ளதென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆரம்பத்திற் கூறப்பட்ட "பிரதேசங்களின் ஒன்றியம்" என்ற நிலை கூட முற்றுமுழுதாக மாற்றப்பட்டு "பிரதேசங்களைக் கொண்ட நாடு" எனச் சிறிலங்கா அழைக்கப்பட்டுள்ளது. அதாவது சிறிலங்காவின் இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்பில் எவ்வித சிறுமாற்றமும் செய்யப்படமாட்டாது என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இன்றைய அரசியற் சாசனத்தை நன்கு திட்டமிட்டு வலுப்படுத்தவும் உதவும். அத்துடன், புத்த சாசனத்தைத் தொடர்ந்தும் மேலாதிக்க ஆவணமாகப் பேணுவதற்கும் புத்தபிக்குகள் தொடர்ந்தும்■

தொடர்ச்சி 6ஆம் பக்கத்தில்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர்க் கோலங்கள்

## நம்பிக்கை

நான்கே நான்கு கிடுகுகளிலான கூரை, அந்தக் கூரையைத் தாங்கவும் சக்தியற்று நெளியும் தடிகள், இரண்டு கிடுகுகளை ஒரு மேசை போலாக்கி அதன் மேல் ஐந்து சோப் கட்டிகள், ஒரு போத்தலிற் பீடிகள், மற்றுமொரு போத்தலிற் சிகரெட், சில பைகளிற் சிலவகை இனிப்புக்கள் குச்சொழுங்கையொன்றிற் புதிதாக முளைவிட்டிருந்தது ஒருகடை. கடைக்குள் சாக்கை விரித்து அதன்மேல் குந்திமிருந்தார் ஒரு பெரியவர்.

நரைவிழுந்த தலையும், குழிவிழுந்த கண் களும், முகத்திற் புலப்பட்ட சுருக்கங்களும் அவர் நடுத்தர வயதைத் தாண்டி விட்டவர் என்பதைத் துல்லியமாகப் புலப்படுத்தியது. எனினும் தடித்து விறைத்திருந்த கைகளும் குந்திமிருந்த பாங்கும் அவரது உள்ளம் சோரவில்லை என்பதை எடுத்துக்காட்டியது. மெல்ல நெருங்கினேன். பேச்சுக்கொடுப்பதற்கு வாய்ப்பாக டொபி வாங்க எண்ணிச் சட்டைப் பைகளில் கை துழாவியது. அவர் கவனித்து விட்டார். வாடிக்கையாளனைக் கவரும் வேகம் அவரது வார்த்தைகளாக வெளிப்பட்டது.

"என்ன தம்பி வேணும்"

"என்ன ஐயா இருக்கு உங்கட கடைமில"

"என்ன தம்பி உப்பிடிச் சொல்லிப்போட்டாய்: இதில இருக்கிற முதல், இப்ப ஆமிரம் ரூபாய்க்கு மேல தேறும்"

"ஆமிரம் ரூபாயோ? அப்படி என்ன சாமான் வைச்சிருக்கிறியள்"?

"அஞ்சு சோப்புக் கட்டிக்கும் முந்நூறு ரூபா போச்சு: பீடி, சிகரெட், மற்ற இனிப்புக்கள் யோசிச்சுப்பார்." அவர் சொல்லவும் மனத்திரை மில் எண்கணிதம் ஓடியது.

"என்ன தம்பி யோசிக்கிறாய்?" அவர் கேள்வியெழுப்பினார்.

"இதில நீங்கள் காத்திருக்கிற அளவுக்கு உங்களுக்கு இலாபம் வருமோ?"

"இதென்ன கேள்வி தம்பி: இருக்க வீடுமில்லை. சும்மா மரத்துக்குக் கீழ் படுக்கிறதை விட்டிட்டு இதிலை இருந்தால் ஒரு அஞ்சு பத்தாவது மிஞ்சாதே? ஒரு சோப்புக்கட்டி வித்தாலும் இரண்டு ரூபா வரும். பீடி சிகரெட் எண்டாலும் நல்லா விலை போகும். சின்னன்கள் எல்லாம் இனிப்புக்கும், டொபிக்கும் ஓடிவரும். வியாபாரம் பரவாமில்லை".

"ஐயா முந்தியும் கடையே வைச்சிரு ந்தனிங்கள்"?

"ஓம் மோனை...... இங்க வரமுந்திக் கோப்பாமில பல சரக்குக் கடை போட்டிருந்தனான்: பெரிய கடை. ஒரு பத்தாமிரம் ரூபா முதல் தேறும். போட்டது போட்டபடியே. அப்படியே ஓடி வந்ததுதானே" ஒரு பெரு மூச்சை இழுத்துவிட்டார். பின் தொடர்ந்தார்.

"இப்படி எத்தினை தரம்! 58 இல வறக்காப்பொலவில் விட்டிட்டு வந்தன்.· 77 இல் வியாங்கொடையில் புடவைக் கடையை நெருப்பு வைச்சுப் பொசுக்கினாங்கள். 83ல் காலியிலை எல்லாம் போச்சு. ஆனா என்ன செத்தா போனன்?" அவரது கேள்வியின் நிய–ாயம் என்னைச் சுட்டது. மௌனித்துப் போனேன். ஆனால் அவர் தொடர்ந்தார்......

"மாட்டைக்கட்டிவளர்: பூவரசை வெட்டிவளர் எண்டு சொல்லிற மாதிரி அப்பப்ப எனக்கும் வெட்டுவிழும்! ஏதோ அரும்பொட்டில தப்பித்தப்பி இந்தளவுக்கும் வந்திட்டன்......." அவர் கூறி முடிப்பதற்கிடையில்,

"ஐயா....... இரண்டு பீடியும் ஒரு சிகரெட்டும்" என்றபடி சில்லறைக்காசுகள் சிலவற்றை நீட்டியது ஒரு குழந்தை. கையை நீட்டிச் சில்லறையை வாங்கி எண்ணியவர், பீடியையும் சிகரெட்டையும் எடுத்துக் குழந்தையின் கையில் கொடுக்கும்போதே...... "கவனமாய்க் கொண்டுபோ: பிறகு கொப்பர் வந்து சண்டைபிடிப்பார்" என எச்சரிக்கையும் செய்துவிட்டார். அத்துடன், மிகுதிச் சில்லறை யையும் எடுத்துக் கொடுக்க விரைந்தார்.

"மிச்சத்துக்கு எனக்கு இனிப்புத்தா" என்றது குழந்தை. அதையும் கணக்குப்பார்த்துக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தார் அவர்.

"இந்த வியாபாரத்தில் மட்டும் ஐந்துரூபா லாபம் என" வார்த்தைகளை உதிர்ந்தார் அவர்.

"இண்டைக்கு முழு நாளும் வியாபாரம் செய்தா நூற்றம்பது இருநூறு ரூபா உழைச்சுப்போடு வியள் போல"

"தம்பி....... மனுசன் போகேக்க எதையும் கொண்டு போறதில்லை: ஆனா அதுக்காக வெட்டிப்பொழுது போக்கிறது கூடாது" என்றார். தொடர்ந்து "இதில இப்படி உழைச்சுக் கொஞ்சம் கொஞ்சம் மேலும் மிச்சம் பிடிச்சு வைச்சால் தானே நாளைக்கு ஊருக்குப் போன பிறகும் ஏதாவது செய்யலாம்: இல்லாட்டி ஆரிட்டையும் கையேந்த வேண்டியெல்லே வந்திடும்" அவரது குரலில் உறுதியும், நம்பிக்கையும் துளிர் விட்டது. அவரது முகத்தை உற்றுப் பார்த்தேன். கண்களில் ஒருவிதமான ஒளியும், முகத்திற் தெளிவான பிரகாசமும் தெரிய ஒரு மகான்போல அவர் எனக்குக் காட்சியளித்தார். ■

# மாவீரர் மனக்குமுறல்



ஆவூரான்

மாவீரர் துமிலும் இல்லம்
கோப்பாய்
தமிழீழம்.

அன்பார்ந்த அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள், எனதினிய நண்பர்கள். கடிதமாய் எழுதியனுப்ப முடியவில்லை எம் கண்ணீரை 'விழி' பெயர்த்துப் படியுங்கள்.

சென்ற கார்த்திகை மாதம் 27ம் நாளில் மாவீரர் தினம் என்பதை மறந்து விட்டீர்களா?

மாவீரர் நாளிலாவது எம்மைச் சந்திக்க வருவீர்கள் என்று காத்திருந்தோமே. நீங்கள் எங்கே ஓடினீர்கள். எங்கள் மேல் மலர் தூவிக் கண்ணீர் சொரிந்து, தீபம் ஏற்றிட வராத மர்மம் என்ன அம்மா.

– புரிந்து கொண்டோம்.

அன்னைத் தமிழ் மண்ணிலே அந்நியன் கால்பட்ட போது தான் எமது கல்லறைகள் கலங்கியது. துரோகிகள் கால்பட்டு வேதனை பொங்கியது. சிங்கள இராணுவத்தின் சப்பாத்து ஒலி கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தோம். எமது கைகளிலே இருந்த துப்பாக்கிகள்

இல்லாமைமினால் தானே அவர்கள் எம்பக்கம் வந்தார்கள்.

-- அம்மா! அந்தத் துரோகிகளிடம் போய்ச் சொல்லுங்கள் நாம் மரணிக்கவில்லை என்று.

எமது வித்துடல்கள் விதைக் கப்பட்டதாய்ச் சொல்லுங்கள்.

-- நண்பர்களே! விதைக்கப்பட்ட விதைகள் முளைத்து விடும் விரைவில் அந்த வளரும்பமிரில் ஆமிரம் ஆமிரமாய் போராளிகள் தோன்றுவார்கள் என்று கூறுங்கள்.

– தமிழ் மண்ணிலே கால் பதித்த நயவஞ்சகர்கள், சிங்கள இராணுவ வெறி யர்களின் கால்களை ஒட்ட நறுக்கி.....

– எமது மண்ணை மீண்டும் மீட்போம் என்று சபதம் செய்வதாய்ச் சொல்லுங்கள்.

– தம்பியரே! தங்கையரே! எவ்வளவு தூரம் ஓடப் போகிறிர்கள்.

தமிழ் மண்ணை விட்டா ஓடுவீர்கள். நீங்கள் எங்கு ஓடினாலும் சிங்களவன் வருவான்!

– அதற்காக ஒன்று சொல்கிறோம். அணி, அணியாய் புலி, புலியாய்த் திரளுங்கள். தலைவர் பிரபாகரன் பின்னாற் செல்லுங்கள். துரோகிகள், சிங்கள வெறி இராணுவங்கள் தலைதெறிக்க ஓடுவான்கள்.

– அடுத்து வரும் மாவீரர் நாள் வரை பொறுத்துக் கொள்ளாதீர்கள்.

எங்கள் உறக்கத்தைக் கலைத்து விட்டார்கள் துரோகிகள்.

எங்கள் துப்பாக்கிகள் வெடிக்க உங்களிடம் அல்லவா தந்துவிட்டு வந்தோம். இன்னும் ஏன் தாமதம்? புறப்படுங்கள் புலியாகி.

– பகைவனை அழியுங்கள்.

எமது தாய் தந்தையர் மீண்டும் எமது துமிலும் இல்லத்தில் கால் பதிக்க வேண்டும்.

மலர் தூவித் தீபம் ஏற்ற வேண்டும். அவர்கள் கண்ணீரும் எமது கல்லறைமில் பட்ட களங்கத்தைக் கழுவ வேண்டும். எங்களை நினைத்துக் கலங்காதீர்கள். உங்கள் வருங்காலத்தை எண்ணிக் கலங்குங்கள்.

வீரமறவர் கூட்டமே! எங்களிடம் வெறும் கைகள் தான் உண்டு. எமது வீரத்தையும், துப்பாக்கிகளையும், துணி வையும் உங்களிடம் ஒப்படைக்கின்றோம். புறப்படுங்கள் போர்க்களம் நோக்கிப் புலியாய், கரும்புலியாய், கடற்புலியாய், வென்று வாருங்கள்.

– தமிழீழம் மலரும், மாவீரர் கனவும் பலிக்கும், தமிழ் மண்ணும் சிரிக்கும். ■

இங்ஙனம்
கல்லறைமிலும் உறங்காத
உங்கள் மாவீரர்கள். ■

## சுயகௌரவம் இழந்தவர்கள் யார்....?

4 ஆம் பக்கத் தொடர்ச்சி.......

அதாவது வடக்கு–கிழக்கில் இராணுவ, பொருண்மிய நெருக்கடிகளுக்கு மத்திமில் இன்னமும் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற தமிழ் மக்கள், தமது சுயகௌரவத்தைப் பேணும் நிமிர்த்தமாக மட்டுமே அங்கு வாழ்ந்து கொண்டும் போராடிக் கொண்டும் இருக்கின்றனர். ஆகையினாற் சிறிலங்காவின் எதிர்கட்சித் தலைவர் ரணில் கூறுவது போன்று, தமிழ் மக்கள் அனைவரும் அல்லது தமிழ்ச் சமுதாயம் சுயகௌரவத்தை இழந்துவி டவில்லை. ஆனால், சிறிலங்காவில் இன்றுவாழும் தமிழர்களும் சரி, அரசியற் குழுக்களும் சரி ரணில் கூறுவது போன்று தமது சுயகௌரவத்தையும், மானத்தையும் இழந்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதே சரியானதாகும்.

ஆனால் அவ்வாறு சென்று வாழ்பவர்கள், சுயகௌரவம் பற்றிய சிந்தனைமில் உள்ளார்களா? என்ற கேள்வியும் இல்லாமல் இல்லை. ஏனெனிற் சிங்கள ஆட்சியின் கீழ் தமது சுயகௌரவமும், சுதந்திரமும் பாதுகாக்கப்பட முடியாதவை என்று தெரிந்து கொண்ட பின்னரும் கூட, அவர்கள் அவ்வாறானதொரு வாழ்வை முடிவுசெய்து கொண்டுள்ளனர். இது சுயகௌரவம் என்பதை விட, அவர்கள் சுகவாழ்வுக்கு முதன்மை கொடுத்துள்ளார்கள் என்பதே பொருத்தமாகும்.

அதிலும் இனத்தின் சுயகௌரவத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடப் புறப்பட்டதாகக் கூறிக்கொள்ளும் சில குழுவினர், இன்று சுயகௌரவம் இழந்து சிங்கள ஆட்சியாளர்கள் எறியும் எலும்புத் துண்டுக்காகக் காத்துக் கிடப்பதும், அதன் சுவை குறித்துப் பிரஸ்தாபிக்க முன்வருவதும்தான் அருவருக்க த்தக்கது. இவர்கள் எமது உரிமையையும், சுயகௌரவத்தையும் விலைக்கு விற்றுவிடலாம் எனக் கருதுகின்றனர். அதற்காக அடிவருடிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் இன்னமும் தமிழ் மக்களின் சுயகௌரவத்திற் காகவும், உரிமைக்காகவும் தாம் உழைப்பதா கக் கூறிக்கொண்டு இருப்பதுதான் வேடிக்கை யானதாகும். இது தனக்கு ஆடைமில்லாதவன், மற்றவர்களுக்கு ஆடைவாங்குவது பற்றிப் பேசுவதுபோன்றதாகும். அதாவது சுயகௌரவம் உள்ள ஒருவனே மற்றவனின் சுயகௌரவ த்திற்காக, சுதந்திரத்துக்காகப் போராட முடியும். அதைப் பெற்றுக் கொடுக்கவும் முடியும். ஆனால் இக்குழுக்களின் அவலத்தையும், கேவலத்தையும் காதிற் கேட்கக்கூடியதாக ஏதோ ஒருவகைமில் வெளிக்கொண்டு வந்துவிட்டார் என்பது மட்டும் உண்மையே.

ஆட்சிக் காலத்தில் தாம் கைக்கொண்ட இதே காரியத்தை, மூடி மறைத்து வந்த ரணில் விக்கிரமசிங்கா, தற்பொழுது தமது அரசியல் இலாபத்திற்காகச் சிறிலங்காவில் உள்ள சுயகௌரவம், தமிழர்களின் சுயகௌரவம் பற்றிப் பேசி இருப்பது இவ்வுலகுக்கு ஏதோ ஒரு விதத்தில் தமிழரின் இன்றைய நிலைகுறித்து வெளிவர உதவி உள்ளது என்றே கூறலாம். இது ஒரு வகைமில் யார் குத்தியாவது அரிசியாக வேண்டும் என்ற பார்வைமில் நோக்கப்படக் கூடியதே! ■

## சந்திரிகாவின் தீர்வுத் திட்டம்.....

5 ஆம் பக்கத் தொடர்ச்சி....

அமுக்கக் குழுவாகச் செயற்படுவதற்குமான சட்ட ரீதியான அம்சங்கள் புதிய மெருகுடன் சேர்க்கப்பட்டுள்ளன. "பிறயர் பேரவை" ஒன்றினைப் பௌத்த மகாசங்கத்தினர் அமைக்கவும் வழிசெய்யப்பட்டுள்ளது. தேசிய க்கொடி, தேசியகீதம், தேசியதினம் என்பவற்றில் எவ்வித மாற்றமும் செய்யப்படாதது குறிப்பிடத்தக்கது.

பிராந்தியச் சபைகளைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படுவது மல்லாமல், ஒதுக்கிய விடயமாக்கப்பட்டுள்ள தேசியபாதுகாப்பு என்பது, சகல ஆயுதப்படைகளின் பொறுப்பையும் ஜனாதிப திமிடம் ஒப்படைக்கிறது. மத்திய அரசினால் எந்தக் காணியும் கையேற்கப்படலாம் என்கிறதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. பொலிஸ் ஆணையாளரின் கீழேயே பிராந்தியப்பொலிசும் செயற்படவுள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நியாயங்கள்

(1)

– சங்கக் கடையில், மக்கள் நீண்ட வரிசையில் நிவாரணப் பொருட்களைப் பெறுவதற்காக முண்டியடித்துக் கொண்டு நின்றனர்.

–தெருவோரத்தில் நசிந்து நொந்துபோன ஒருவர்:

எத்தனை நாளைக்கு இப்படி அகதியாகக் கையேந்திக் கொண்டு கஸ்டப்படப்போறோமோ........! எங்கட மண்ணெல்லாம் அந்நியன் காலடியில் சின்னாபின்னமாக........ நாங்கள் ஊர் ஊராக அலையிறம் என்றார்.

–அருகே நின்ற இன்னொருவன் சொன்னான்–

"முந்தி உலகமெல்லாம் ஓடி அகதியாகினோம்........ பின் அதையே பெருமையாகப் பீத்திக் கொண்டு திரிந்தம். இப்ப சொந்த ஊருக்குள்ள அலையிறது வருத்தமாக்கிடக்கு........" என்றவன் கொஞ்சம் நிறுத்திச் சொன்னான்........

–"விடுதலை பெறாத நாடு அடிமை நாடு"

"சுதந்திரமில்லாதவன் அகதி மனிதன்"

(2)

–"எடி பிள்ளை........ புத்தகத்தை எடுத்துப் படி: மார்கழிச் சோதனை நடக்காட்டிலும் பிறகு இரண்டொரு மாதம் கழித்து நடக்கும் தானே!" – இது அம்மா

–"எங்கடை கல்வியைச் சீரழிச்சு – கலாச்சாரத்தைப் பாழாக்கி எங்கடை மண்ணையே அழிக்க நினைக்கிறவன் எங்களுக்குச் சோதினை நடத்தி, அதிலை நாங்க பாஸ் பண்ணி என்ன நடக்கப் போகுது?" – என்று மகன் தொடர்ந்து சொன்னான்.

–தம்பி சொல்லுறதிலை ஞாயமிருக்கு. முதல்லை எங்கடை மண்ணுக்கு வந்த சோதனையிலிருந்து அதை மீட்க வேண்டும். மற்றச் சோதனைகளையெல்லாம் சுகமாகப் பிறகு தாண்டிப் போகலாம்தானே........!

(3)

–கிழவர் வன்னிக்குப் போக மறுத்துவிட்டார்.

– மகன் கேட்டான், "உங்கை கிடந்து சாகப்போறியோ?"

புவிராஜ்

–ஓம். அதுக்கென்ன, நான் பிறந்த மண்ணுக்குப் பசளையாகிப்போறன்" கிழவர் உறுதியாகச் சொன்னார்.

–"அப்பு உனக்குச் சரியாய் அறளை பெயர்ந்திட்டுது. அவனவன் உயிரைக்காக்க ஓடித்திரியிறான். நீ என்னவெண்டா பெரிய மண் பாசத்திலை நிற்கிறாய்........"

–ஓமடா........ மண்பாசம்தான். உன்னை மாதிரி ஊர்ச் சோத்திலை வளர்ந்து படிச்சு........ வெளிநாட்டிலை உன்ரை அறிவை வித்தவன் போலல்ல நான். என்ர வியர்வை இந்த மண்ணிலைதான் விழுந்தது........ என்ர மனசு இந்த மண்ணைத்தான் பூசிக்குது. அந்நியனுக்குப் பயந்து அடுத்த ஊருக்கு ஓடுறதைவிட, இங்கு நிண்டு முடிஞ்சவரை அவனோடு போராடிச் சாகிறதுதான் நிம்மதி........ என்று கிழவன் சொன்னான்........

"நாங்கள் மதியாத மண்ணை

அந்நியன் மிதிப்பது உறுதி ■

# பாதசாரியின் பார்வையில்...

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் எவ்வளவோ எண்ணங்கள், குமுறல்கள், கொந்தளிப்புகள்....

இடப்பெயர்வின் பின்னர் மக்கள் சந்தித்த அவலங்களும்..... நெருக்கடிகளும்..... அவர்கள் மனதில் ஆழமாகப் பதித்த வடுக்களை ஆறவைக்கும் நிகழ்வுகள் ஏற்பட வேண்டும் என்ற கனவுகளுடனும், நம்பிக்கைகளுடனும் கழியும் காலங்கள்.....

காற்று வாக்கில் காதினை ஊடுருவும் வார்த்தைகளுள் அவர்களின் ஆத்மாவின் கொதிப்பினை உணர்கையில்.....

மீசாலையில் ஒரு பாடசாலை வாசல் – அல்ல ஒரு இடம்பெயர்ந்தோர் முகாம் வாசல். அதிகாலைப் பனியில் நடுங்கியபடி இரு வயதானவர்கள். ஒருவருக்கு ஐம்பதும் மற்றவருக்கு எழுபதும் இருக்கும், சுருட்டுப் புகையை இழுத்து வெளியே விட்டபடி முதியவர் சொன்னார்:

"சே..... இராமுழுக்க ஒரு கண் மூடேல்லை....."

"ஏன்..... என்ன நடந்தது.....?"

"நேற்று ரத்வத்த சிங்களக் கொடியை ஏற்றினதிலையிருந்து மனமே சரியில்லை..... உவனுக்கு எவ்வளவு திமிர் பார்த்தியே....."

"ஏறின திமிர் இறங்கத்தானே வேணும். உவருக்கும் ரஞ்சன் விஜேரத்னா..... டென்சில் கொப்பேகடுவ..... பிரேமதாச..... கதிதான்.."

"விசர்க்கதை பேசாதை..... உவன் அப்பிடிச் சாகக்கூடாது..... உவனை உயிரோடை பிடிச்சு வந்து, உவன்ரை கையாலையே அவன் ஏத்திய சிங்கக் கொடியை இறக்க வைச்சிட்டு..... யாழ்ப்பாணத்திலை எங்கடை புலிக் கொடியை ஏத்தி வைக்கவேணும்..... அப்பத்தான் என்ரை மனம் ஆறும்..... அது வரைக்கும் நிம்மதி இல்லையடா தம்பி....." ■

# இன்றைய நாட்களில்......

துவாரகன்

## இழந்த அடையாளம்

அவரின் குரல் எனக்குப் பரிச்சயமானதாக இருந்தது. சிரிப்பும்கூட..... ஆனால், யாரென இனங்காண முடியாத குழப்பம்.

"உங்களை எங்கோ நல்லாப் பார்த்துப் பழகிய ஞாபகம்..... நீங்கள்...? யார்" என்ற சொல்லைச் சொல்லி முடிக்காமலேயே அவரை வினாக்குறியுடன் பார்த்தேன்.

கருவளையம் விழுந்து சுருங்கி, இடுங்கிய கண்களினைக் கூர்மையாக்கி என்னைப் பார்த்த அவர் –

"தம்பி....யாழ்ப்பாணமோ எவ்விடம்?" என்றார்.

"யாழ்ப்பாணம்..... தான்..... வட்டுக்கோட்டை..... நீங்கள்.....?

"நானும் அந்தப்பக்கம்தான்..... அராலி" – ஒருகணம் பொறி தட்டியது போன்ற உணர்வு.....

"ஓ..... இவர் எங்கடை சாத்திரி மாமா எல்லவோ"

–மனஉணர்வு வார்த்தைகளாக.....

"நீங்க சாத்திரிமாமா தானே.....! என்னைத் தெரியேல்லை..... நான் தான் 'பேக்கரி' பொன்னம்பலத்தாற்றை மகன்..... ராசு"

–ஆழமான அமைதி – பின் "தம்பி நீர் ராசுவே..... நான் மறந்திட்டன். ஆளே மாறீட்டீர்....."

–நீங்கள் மட்டுமென்ன..... எப்படி இருந்த நீங்கள் வெள்ளைத் திருநூற்றுக் குறியும், பூநூலும், பட்டுச்சால்வையும்..... எப்பிடி மாறீட்டீங்கள்..... என்ன நடந்தது?"

–வெற்றிலைக் காவியேறிய பற்கள் தெரியச் சிரித்தார்.

"எல்லாம் காலம் தம்பீ..... இண்டைக்கு ஆர்தான் மாறேல்லை..... அலங்காரத்தை வைச்சு ஆளை அளந்து அடையாளம் காணுற காலம் போட்டுது..... இந்தப் போரின் அவலம் எல்லாருக்கும் ஒரே அடையாளத்தைக் கொடுத்திட்டுது பாரும்..... நீரும் பொன்னம்பலத்தாற்றை மகனுமில்லை. நானும் சாத்திரி ஐயருமில்லை..... இரண்டு பேருமே அகதிகளெல்லோ....."

–மீண்டும் பலமாகச் சிரித்தார். பிறகு சொன்னார்–

"தம்பி வசதிகள்தான் மனிசரை வேறுபடுத்துகிறது. அவலங்கள் தான் மனிசரை ஒன்றுபடுத்துகிறது."

அவரின் வார்த்தைகளினூடே தெறித்த கருத்து வெறும் சொல்லாகவன்றி..... ஒரு அனுபவத்தெறிப்பாகவே எனக்குப்பட்டது. ■

# உணர்வின் அலைகள்

## உண்மைச் சம்பவம்

இனியவன்

மட்டக்களப்பு....

ஆரையம்பதி ஒரு கடலோரக் கிராமம்.

மீனவத் தொழில் அந்தக் கிராமத்துக்குச் சோறு போட்டது. செல்லத்தம்பி ஐயாவுக்கும் அன்னநேசம் அம்மாளுக்கும் ஐந்து குழந்தைகள்.

கடலன்னை அந்தக் குடும்பத்தை மகிழ்ச்சியாகத்தான் தாங்கி வைத்திருந்தாள்.

ஆனால்,

இந்தியர்களும், சிங்களவர்களும், முஸ்லிம் காடையர்களும் தொடர்ச்சியான நெருக்கடியைத் தந்த போது, தமிழீழத்தின் ஒவ்வொரு வீட்டுக்கும் நடந்தது போல அந்தக் குடும்பத்தின் இயல்பு நிலையும் பாதிப்புக்குள்ளானது.

மூத்தவன் வீமராஜன் இயக்கத்திற்குப் போனான். கொஞ்சக்காலம் போக இந்தியர்கள் வெளியேற்றப்பட்டார்கள். மீண்டும் சிங்களத் துப்பாக்கிகள் உயிர் விழுங்க ஆரம்பித்தன. இந்தியர்களுக்குத் துணைபோனவர்கள் சிங்களவர்களுக்குத் துணை போகவும் முண்டியடித்தார்கள்.

எங்கள் தாயகத்தின் தென்பிராந்தியத்தின் இரத்தத்தை உறைய வைக்கும் கொடிய நாட்கள் அவை.

வீட்டுக்குள் அடிக்கடி பாய்ந்து,

'மூத்த பொடியன் எங்க?' என்று உறுக்கத் தொடங்கினார்கள் சிங்களப் படையினர்.

ஒவ்வொருதடவையும் எதையாவது சொல்லிச் சமாளித்து அனுப்பி வைத்தார்கள்.

எவனோ ஒரு துரோகி உறுதிப்படுத்தப்பட்ட தகவலைக் கொடுத்து விட்டான்.

அவர்கள் வீட்டை முற்றுகையிட்ட ஒரு காலை, கடலுக்குப் போன அப்பா வந்திருக்கவில்லை. கடைசித் தம்பியும் தங்கையும் பள்ளிக்கூடம் போயிருந்தார்கள்.

அம்மாவோடு மகேந்திரனும் அடுத்த தங்கையும் வீட்டிலிருந்தார்கள். மகேந்திரனைப் பிடித்து 'அண்ணன் எங்கடா?' என்றார்கள் படையினர்.

'கொழும்பில படிக்கிறார்' என்றான் இவன்.

சுற்றிவர நின்று ஆவேசத்தோடு தாக்கத் தொடங்கினார்கள் அவர்கள்.

மோசமான அடிகள்.

பயங்கரமான சித்திரவதை.

'ஐயோ..... அடிக்காதீங்க..... அவரு இயக்கத்தில' இயலாமையால் மகேந்திரன் கத்திவிட்டான்.

அவர்கள் நிறுத்தினார்கள். விழுந்து கிடந்தவனை ஒருவன் தூக்கி நிமிர்த்தினான்.

'மொதல்ல நீ பொய் தானே சொன்னது?' கொச்சைத் தமிழிற் கத்தினான்.

'இந்த வாயாலதானே நீ பொய் சொன்னது' தொட்டுக் காட்டினான்.

மகேந்திரன் பேச்சு மூச்சற்றுச் சோர்ந்து நின்றான்.

வீட்டுக்கு முன்னாலிருந்த பெட்டிக் கடையில் ஓடிப்போய் மூன்று பட்டாசு வெடிகளை வாங்கி வந்தான் ஒரு சிங்கள வெறியன்.

மூன்றையும் சேர்த்துக் கட்டினார்கள்.

'இந்த வாயாலதானே நீ பொய் சொன்னது.....' ஒருவன் திரும்பவும் தொட்டுக்காட்டிக் கத்தினான்.

இரண்டு பேர் இறுக்கிப் பிடிக்க, அடுத்தவன் அந்த வாயிற்குள் வெடிகளைச் செருகினான்.

சட்டைப் பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்தான்.

அம்மா கதறினாள், ஆசைத் தங்கை அலறினாள்,

ஆனால், அந்த வெடிகளுக்கு இந்த அவலங்கள் எப்படிப் புரியும்?

அவை சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதறின.

இப்படிச் சிங்கள இன வெறிக்குப் பலியான இளஞ்சூரியன்கள் எத்தனை எத்தனையோ..... இவர்கள் ஒவ்வொருவரின் கதறலும், கண்ணீரும், தியாகமும் எம்மண்ணின் விடுதலைத் தாகத்தைத் தீர்க்கும் யாகத்தினை மென்மேலும் வீச்சுடனும், உத்வேகத்துடனும் தொடரவே செய்துள்ளன.

ஒவ்வொரு வீழ்ச்சியின் பின்னாலும் ஓர் எழுச்சிக்கான விதை மண்ணிற் புதைந்து கொண்டே இருக்கின்றது..... ■

# உட்பகை

## குறள் அகம்

மர நிழல், ஆனால் வேம்பின் நிழலோ மாவின் நிழலோ அல்ல! புளிய மரத்து நிழல்!

அதன் கீழ் படுப்பவனுக்கு அது சோர்வையும் உடல் நோவையும் கொடுக்கும் என்பர் அறிவறிந்த பெரியோர்!

இவ்விதம் நிழலிலும் தீமை உண்டு, நீரிலும் கெடுதி உண்டு!

நோய்க்கிருமிகளைத் தாங்கிய நீர்!

நஞ்சையே தன்னுள் கொண்டு பருகும் பானம்போல் ஊட்டப்படும் வஞ்சகக் கை தரும் நீர்! இவ்விதம் தன் உண்மை வடிவில் அல்ல, உணவின் வடிவில் வரவல்லது நஞ்சு!

உட்பகையும் இவ்விதமே!

'நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்'

இன்னா–துன்பம், தமர்நீரும்–நெருங்கியோர் போல வரும் சிலரின் தன்மையும்.

(குறள் 881) ■

–நாகபத்மநாதன்–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# ஒரு மாவீரனின் கடிதம்

**புலிப்பாய்ச்சல் தாக்குதல் நடவடிக்கையின்போது மாவீரரான இவர் தன் குடும்பத்தார்க்கு எழுதிய கடிதம்**





அன்புள்ள அம்மா, அப்பா, அக்காவையள் அறிவது!

அப்பா! நான் இயக்கத்திற்குப் போகிறேன். அப்பா நான் எந்த கோப, வெறுப்புக்களினாலும் இயக்கத்திற்குப் போகவில்லை. நான் எங்கட மண்ணின்ர மீட்புக்காகவே போகிறேன். நான் போவது உங்களிற்கு எவ்வளவு கவலையளிக்குமென்பதனை நானறிவேன். எனக்கும் உங்களைப் பிரிவது கவலைதான். ஆனால் என்ன செய்வது, நாடுதான் முக்கியம்.

அம்மா நான் இயக்கத்திற்கு போவதனால் நீங்கள் அழுவீர்களென்பது எனக்கு தெரியும். என்னில் உண்மையாகப் பாசம் வைத்திருந்தால் அழாதீர்கள். அம்மா மருந்துகளை ஒழுங்காகப் போடுங்கோ. அப்பா என்னைப்பற்றி என்னென்ன மனக்கோட்டை கட்டியிருப்பீர்களென்பது எனக்குத் தெரியும். இயக்கத்தில் மகன் இருக்கிறானென்று சொல்வதிலும் ஒரு பெருமைதானே கவலைப்படாதீர்களப்பா. அக்காவையளை கவனமாக பாருங்கோ.

அக்காவையள் உங்களோடு நான் நெடுக சண்டை போடுறனான். உங்களில நான் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறனென்று உங்களிற்கு தெரியுமோ தெரியாதோ? நான் இயக்கத்திற்குப் போறது உங்களிற்காக, அப்பா, அம்மாவிற்காக, எங்கட அயலுக்காக, எங்கட மண்ணுக்காக பெருமைப்படுங்கோ. அழாதையுங்கோ.

மேலும் அப்பம்மா, சித்தப்பா, சித்தி, அப்பப்பாவையள், அத்தானவையள், வரதன் சித்தப்பாவையள் அயலவர் எல்லோரிடமும் சொல்லுங்கோ. எனக்காக எவரும் கவலைப்படாதையுங்கோ.

அப்பா கவனம். மதனை விசாரிச்சனெண்டு கடிதமனுப்புங்கோ. அவன் கவலைப்படுவான் எண்டு எனக்குத் தெரியும். அம்மா, அக்காவையள் கவனம்.

இப்படிக்கு

கவாஸ்கர்

என்னைத் தேடி எவரும் வரவேண்டாம். தேடி வந்தாலும் நான் வரமாட்டன் எண்டு உங்களுக்குத் தெரியும். வீணாக அலையாதீங்கோ.

என்ர 'பேஸ்' இல் 400 ரூபா இருக்கு. நீலவண்ணனிடம் 530 ரூபா கொடுத்து சஞ்சிறிகுமாரிடம் கொடுக்கச் சொல்லவும்

# கல்வி நடவடிக்கைகள் தொடங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

## தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் அறிவிப்பு

"அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளினால் எமது இனம் பல வழிகளில் அழிவுகளைச் சந்திக்கின்றது: அந்த வகையிலேயே தமிழ்மக்களின் கல்வி வீணடிக்கப்படுகின்றது. இதன் காரணமாக, எமது இனத்தின் பாரம்பரியங்களும் இளம் பராயத்தினரின் எதிர்காலமும் கேள்விக் குறியாக உள்ளமை, இன்று நாம் காணும் பாரிய பிரச்சனையாகும். இதிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்க, விரைந்து கல்வியைத் தொடரவேண்டும் என்ற விருப்பத்தைத் தேசியத் தலைவர் அவர்கள் கொண்டுள்ளார். இதன் காரணமாகக் கல்வித் தொடங்குவதற்கான அனைத்துச் செயற்பாடுகளும் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்"

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தமது உரையில் தெரிவித்துள்ளார். கல்வியை முன்னெடுப்பது தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று வடமராட்சிப் பகுதியில் திருஇருதயக் கல்லூரியில் நடைபெற்றது. கல்விப்பணிப்பாளர் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வலயக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், 2ஆம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். இக்கருத்தரங்கில், உரையாற்றிய சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் மேலும் கூறுகையில்:-

"இன்று வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து இலட்சக்கணக்கான மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளின்றி, பாடசாலைகளிலும் பொதுவிடங்களிலும் தங்கியிருந்து அளப்பரிய துன்பங்களை அனுபவிக்கின்றனர்: இவ்வாறான வேளையில் இளைஞர்களும், பெண்களும் பாரியளவில் உளவியல் ரீதியான தாக்கங்களை அனுபவிக்கின்றனர். சமூகத்துக்கு எதிரான வழிகளில் அவர்கள் செயல்படுகின்றனர். இது எமது கலாச்சாரப் பாரம்பரியங்களையும் மக்களது எதிர்காலச் செயற்பாடுகளையும் பாதிப்பதுடன் எமது இனத்தின் கல்வியின் வளர்ச்சியில் பல வழிகளில் பாதிப்புக்களையும், அவலங்களையும் உள்ளடக்கும்" எனவும் கூறினார். மேலும், மாணவர்கள் தங்களது கல்வியைத் தொடர முடியாத அளவிற்குப் பல பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதுடன், அவர்களது எதிர்காலம் வீணடிக்கப்படக்கூடாது எனவும் இந்தநிலையைத் தொடரவிடாமற் சகல துறையைச் சார்ந்தவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் இதில் ஆர்வமுடன் செயல்பட வேண்டியதுடன், தேசியத் தலைவர் அவர்களின் விருப்பம்போல் போராட்டத்தின் மத்தியில் கல்விக்கு எந்தவிதமான தளர்வுகளும் வந்துவிடாது பாதுகாக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

அரசு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது, மக்கள் ஒட்டுமொத்தமாக வெளியேறிப் பாதுகாப்பிற்காகத் தமது சொத்து, சுகங்களை இழந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிற் குடியேறினர். இதன் காரணமாக அரசு, தனது நோக்கு நிறைவேறாதபோது, அதன் அடுத்த கட்டமான நடவடிக்கையைச் செய்யத் தொடங்கலாம். அதனால், அதிகளவிலான மக்கள் இங்கு நெருக்கமாக இருக்கின்றமையால் அவர்களது உயிரிழப்புக்களைத் தவிர்க்க வேண்டியுள்ளமை அவசியமானது. இதனாலேயே மக்களை வன்னிப் பெருநிலப்பரப்பிற்குப் போகுமாறு கேட்க வேண்டிய தேவை உள்ளது எனவும், இதன் மூலம் கல்வி, பொருண்மியம், மருத்துவம் என்பவற்றுடன் இராணுவத்தால் உண்டாகும் அனைத்துத் தாக்குதல்களிலிருந்தும் மக்களைப் பாதுகாக்க முடியுமெனத் தாம் உணர்ந்ததாகவும் அவர் மேலும் கூறினார். "வன்னிப் பெருநிலப்பரப்பு, யாழ். குடாநாட்டைப் போன்றல்லாது புவியியல் ரீதியான அமைப்பைக் கொண்ட பாரிய நிலப்பரப்பு: ஆகையால் அங்கு இராணுவ அழுத்தம் இருக்கமாட்டாது. இதன் காரணமாகவே அதிகளவிலான மக்களை அங்கு கொண்டுசென்று குடியமர்த்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டது. அதிகளவிலான மக்கள் அங்கும் இடம்பெயர்ந்துள்ளமையால் சில சிரமங்களை உடனடியாக எதிர்நோக்கியதும், இதன் காரணமாக அம்மக்கள் வன்னியிலும் மற்றும் இடங்களிலும், பாடசாலைகள் பொது இடங்கள் என்பவற்றில் தங்கவேண்டிய நிலைமை உருவானது. இவ்வாறான சூழலில் அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பல்வேறு இடங்களிற் சிதறிக் காணப்பட்டமையினாலும் இவர்கள் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கி இருப்பதாலும் உடனடியாகப் பாடசாலைகளைத் தொடங்கமுடியாமற் போய்விட்டதும் முக்கியமாகும். எனவே விரைவில் பாடசாலைகளைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைத் தொடர்வதற்காக இதற்கான பணிகளை எல்லா அதிபர்களும், ஆசிரியர்களும், படிப்பாளர்களும், பல்துறை நிறுவனங்களும், இணைந்து செய்வதன் ஊடாக எமது கல்வியை நாம் விரைவில் தொடர முடியும்" என அவர் கூறினார்.

அரசு தனது செயற்பாட்டால், அல்லலுற்ற மக்கள் மத்தியில் திட்டமிட்டவாறு பல பொய் வதந்திகளை மேற்கொண்டு மக்களைக் குழப்பம் அடையச் செய்வதுடன், அதைச் சிலர் இங்கு மக்களைப் பரபரக்க முனைவதும் வேதனையான சம்பவம். இதற்கு மாறாக மக்கள் மத்தியில் அரசினது உண்மைக்குப் புறம்பான செய்திகளை மாற்றியமைக்க, கல்விசார் நிறுனங்களும் அதிபர்களும் மக்களிடம் இன்றைய மக்களின் உண்மையான நிலையை எடுத்து விளக்குவதன் ஊடாக நாம் இங்குள்ள நிலைமையில் இருந்து விடுபட முடியும். மக்கள் எல்லா இடங்களிலும் பரவலாக குடியமர்ந்துள்ள காரணத்தினால் எல்லா மக்களிற்குமான திட்டமிடப்பட்ட நிரந்தரமான கல்விக் கொள்கையைக் கடைப்பிடித்து அனைத்து மாணவர்களும் தமது கல்வியைத் தொடர அனைவரது முயற்சிகளும் இணைக்கப்பட வேண்டும் என்று விளக்கினார்.

தொடர்ந்து வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர்கள், பருத்தித்துறை கல்விப் பணிப்பாளர் தங்கள் கருத்துக்களை தெரிவித்ததுடன் இடம்பெயர்வால் மக்கள் படும் அவலங்களை அவர்களது எதிர்பார்ப்புக்களை உணர்ச்சிபூர்வமாகத் தெரிவித்ததுடன், இன்றைய இந்த நிலையால் அனைவரும் சேர்ந்து செயற்பட வேண்டிய அவசியத்தையும் வெளிப்படுத்தினார்கள். இன்றைய காலத்தில் நாம் எதிரியினது அனைத்து அடக்கு முறைகளிற்கும் அஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறான வேளையில் எமது அனைத்து உரிமைகளிற்காகவும் போராட வேண்டிய நிலைக்கு இன்று எமது வாழ்வு அமைந்துள்ளது. இவ்வாறான வேளையில் கல்வி, பொருண்மிய அடக்குமுறைகளுடன் கூடிய அனைத்து அனர்த்தங்களிலும் இருந்து நாம் விடுபட வேண்டும். எனவே நாம் அனைவரும் இணைந்து எமது போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டிய தேவையின் உண்மை வெளிப்படையானது. எமது மக்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியபோது நாம் எமது போராட்டத்தை நிறைவுபடுத்த வேண்டியுள்ளது. அவ்வாறானபோதுதான் நாம் எமது உண்மையான உரிமையை வென்று கொள்ள முடியும். எனவே இன்றைய பிரச்சினைக்கு இணைந்து செயல்படுவதன் ஊடாக அனைத்துப் பிரச்சினைகளும் தீரும் என்பதில் ஐயமில்லை. ■

www.tamilarangam.net



# புத்த விகாரையை இடித்துவிட்டு நல்லூர்க் கோவில் கட்டப்பட்டதாம்!

## தமிழர்-சிங்களவர் இடையிலான இடைவெளி விரிகிறது!

இலங்கைத் தீவின் அண்மைக் கால வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்குத் தமிழர்—சிங்களவர்களுக்கு இடையிலான இடைவெளி படிப்படியாக விரிந்து கொண்டு போகிறது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்துக்குப் பின்னர்தான், இந்த விரிசல் ஏற்பட்டதென்று சிலர் நினைக்கக் கூடும். ஆனால் உண்மை அதுவல்ல.

தமிழர்—சிங்களவர்களுக்கு இடையிலான உறவு, பொன்னம்பலம் இராமநாதன் (1851 – 1930), பொன்னம்பலம் அருணாசலம் (1853 – 1924) சகோதரர்களது காலத்திலேயே ஆரம்பமாகி விட்டது. ஆனால் இந்த இருவரும் தங்கள் அந்திம காலத்திலேயே சிங்களவர்களது பேரினவாத அரசியற் போக்கைப் புரிந்து கொண்டுள்ளார்கள். தங்களைச் சிங்கள அரசியல்வாதிகள் ஏமாற்றிப் போட்டார்கள்: தாங்களும் நம்பி ஏமாந்து போனோம் என்று காலம் கடந்தே இவர்களுக்கு ஞானம் பிறந்தது.

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் 1931 ஆம் ஆண்டு வரை, சட்ட சபையில் எந்தவொரு குறிப்பிட்ட இனமும் ஆதிக்கம் செலுத்தாத வகையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அதுவே அவர்களது எழுத்தில் எழுதப்பட்ட கொள்கையாகவும் இருந்தது.

இலங்கையின் தேசாதிபதியாக இருந்த மனிங் (Manning) என்பவர் 1922 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 1ஆம் நாள் அரச செயலாளருக்கு எழுதிய மடல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:—

"The ethnic composition of the legislature should be such that no single community can impore its will upon the other communities"

"சட்டசபையில் இனவாரியான பிரதிநிதித்துவம், எந்தவொரு இனமும் பிற இனங்களின் மீது தனது முடிவைத் திணிக்கக் கூடியவாறு இருக்கக்கூடாது"

> "நாங்கள் பெருமையோடு அழைக்கும் தமிழீழத்தின் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கட்டிக் காத்தல் வேண்டும்; நாங்கள் எங்கள் பாரம் பரிய பெருமைக்கு ஒத்தவாறு எங்கள் தனித்துவத்தையும் காப்பாற்ற விரும்புகிறோம்"
> —சேர்.பொன்னம்பலம் அருணாசலம் (1923)

தேசாதிபதி மனிங் அவர்களது இந்தக் கோட்பாடே, முப்பதுகளிலும் நாற்பதுகளின் ஆரம்பத்திலும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் போன்ற கட்சிகளின், "சட்ட சபையில் சமபல பிரதிநிதித்துவம், (Balanced representation) அதாவது சிங்களவர்களுக்கு 50 விழுக்காடும், ஏனைய இனத்தவர்க்கு 50 விழுக்காடும் இருக்க வேண்டும்" என்ற கோரிக்கைக்கு அடித்தளமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தேசாதிபதி மனிங்கின் யோசனையைச் சிங்கள அரசியல்வாதிகள் மிகக் கடுமையாக எதிர்த்தார்கள் என்று குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை. அதுமட்டுமல்ல, 1920 ஆம் ஆண்டு முன்னைய வாக்குறுதிக்கு அமைய சேர். பொன்னம்பலம் அருணாசலத்தை, கொழும்பு நகரத்தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்துவது என்பதிலிருந்தும் சிங்களத் தலைவர்கள் பின்வாங்கினார்கள்.

இதனால் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உடையலாயிற்று. அதன் நிறுவனரும், முதற் தலைவருமான பொன்னம்பலம் அருணாசலம் 1921 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறினார். வெளியேறும் போது "இ.தே.காங்கிரஸ் சிங்களவர்களை மட்டும் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பு" என்று கண்டிக்கவும் அவர் தவறவில்லை.

இதன் பின் 1923 ஆம் ஆண்டு "இலங்கைத் தமிழ்ச் சபை" (Ceylon Tamil League) என்ற அமைப்பை நிறுவினார்.

தமிழ் ஈழம் என்ற சொற்றொடரை அடங்காப்பற்று முன்னணித் தலைவர் திரு. சுந்தரலிங்கம் அவர்கள்தான், முதன்முதலில் அரசியற் களத்தில் முன்வைத்தவர் என்று பலர் எண்ணக்கூடும்.

**—நக்கீரன்**

உண்மையில் தமிழ் ஈழம் என்ற மந்திரத்தை முதலில் உச்சாடனம் செய்த பெருமை சேர். பொன்னம்பலம் அருணாசலத்தையே சாரும்.

இலங்கைத் தமிழ்ச் சபையில் பேசிய அருணாசலம் பின்வருமாறு குறிப்பிட்டார்:— "We should keep alive and propagate those ideals throughout Ceylon and promote the union and solidarity of what we have been proud to call Tamil Eelam. We desire to preserve our individuality make ourselves worthy of our inheritance"

"இந்த இலட்சியங்களை மனதில் கொண்டு நாங்கள் இலங்கை முழுவதும் அதனைப் பரப்புதல் வேண்டும்: நாங்கள் பெருமையோடு அழைக்கும் தமிழீழத்தின் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கட்டிக் காத்தல் வேண்டும். நாங்கள் எங்கள் பாரம்பரிய பெருமைக்கு ஒத்தவாறு எங்கள் தனித்துவத்தையும் காப்பாற்ற விரும்புகிறோம்"

சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் தமிழீழம் பற்றிய கனவு, அவரது மறைவை (1924) அடுத்துக் கனவாகவே கரைந்து போயிற்று.

பொன்னம்பலம் அருணாசலத்தின் அரசியல் வாழ்க்கை ஏட்டிலிருந்து பாடம் படியாத பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தொடர்ந்தும் சிங்களத் தலைவர்களையும் நம்பிச் செயற்பட்டார். டொனமூர் ஆணைக்குழு வகுப்புப் பிரதிநிதித்துவத்தை (Communal representation) ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாகச் சகலருக்கும் வாக்குரிமை (Universal suf-ferage)த் திட்டத்தைப் பரிந்துரை செய்த போதுதான், இராமநாதன் அவர்களின் கண்கள் திறந்தன. 'சகலருக்கும் வாக்குரிமை' என்ற கோட்பாடு சிங்கள மேலாண்மைக்கு வழிவகுக்கும் என்று பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், தீவிரமாக வாதாடிப் பார்த்தார். அந்த வாதம் டொனமூர் ஆணைக்குழு முன் எடுபடவில்லை. இங்கிலாந்தில் இருந்த காலணி நாடுகளது செயலாளருக்கு 50 பக்கங்கள் கொண்ட மனு ஒன்றை, 1930 ஆம் ஆண்டு ஆடி 18 ஆம் நாள் இராமநாதன் அவர்கள் அனுப்பி வைத்தார். அதனாலும் பலன் கிடைக்கவில்லை.

"Donoughmore proposals, Tamils no more " என்று மனமுடைந்த பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் மனமுடைந்த நிலையிலேயே அதே ஆண்டு காலமானார்.

பொன்னம்பலம் சகோதரர்களைத் தக்க சமயங்களில் எல்லாம் தங்களுக்கு உகந்தவாறு பாவித்த சிங்களத் தலைவர்கள், அவர்களால் மேலும் பலன் இல்லையென்று தெரிந்ததும் உடனே கைகழுவி விட்டார்கள்.

பொன்னம்பலம் சகோதரர்களின் தலைமைத்துவத்தை அவ்வப்போது சிங்களத் தலைவர்கள் போற்றிப் புகழ்ந்தபோது, அந்தப் புகழுரைகள் வஞ்சகமான உரைகள் என்பதைப் புரிந்து கொள்ளாது அருணாசலம், இராமநாதன் ஆகிய இருவருமே ஏமாந்து போனார்கள்.

ஐக்கிய இலங்கையைப் பற்றி இருவரும் பேசியும் எழுதியும் வந்த காலத்தில், சிங்களத் தலைவர்கள் இனவாத கண்ணோடு "சிங்கள மகாசபைகள்" அமைத்துச் செயலாற்றியதைப் பொன்னம்பலம் சகோதரர்கள் கண்டுகொள்ளவில்லை. வெள்ளம் தலைக்கேறி முழுகுகிற நேரத்திலேயே விழித்துக் கொண்டார்கள்.

ஐக்கியம், ஒற்றுமை பற்றிப் பொன்னம்பலம் சகோதரர்கள் பேசிக் கொண்டிருந்த 1918–1919 ஆண்டுகளில், டி.எஸ். சேனநாயக்காவின் மூத்த சகோதரர் எவ். ஆர். சேனநாயக்காவும், கேவ விதாரண, பாரன் ஜெயதிலக்க போன்றோரும் பௌத்த இளைஞர் காங்கிரசை ஆரம்பித்து விட்டார்கள்.

1924இல் பௌத்த இளைஞர் காங்கிரஸ், 'அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் ஏகபுத்திரன் சேர் அருணாசலம் மகாதேவா அவரது தந்தையின் தமிழீழக் கனவை நனவாக்கப் பாடுபடாதது மட்டுமல்ல, தனது தந்தையாரும் பெரிய தகப்பனாரும் நம்பிக் கெட்ட அதே சிங்களத் தலைவர்களிடம் மந்திரிப் பதவியைப் பெற்றுக்கொண்டு கை கட்டி வாய் புதைத்து சேவகம் செய்து மறைந்தார்.

டி.எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் சேர் அருணாசலம் மகாதேவா உள்துறை அமைச்சராக (1943–1947) பணியாற்றினார்.

சேர் அருணாசலம் மகாதேவாவை "ஒத்துழைப்புத் தமிழர்" கந்தசாமியைக் கொன்ற துரோகி என்றெல்லாம் யாழ்ப்பாண அரசியல் மேடைகளில் திட்டித் தீர்த்து, யாழ்ப்பாணத் தேர்தற் தொகுதியில் 1947 ஆம் ஆண்டு மகாதேவாவைத் தோற்கடித்துப் பாராளுமன்றம் புகுந்த காங்கேசர் கணபதிப்பிள்ளை பொன்னம்பலம், மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை ஆகியவற்றிற்கு டி.எஸ். சேனநாயக்கா வேட்டு வைத்த போது கேவலம் ஒரு மீன்பிடி அமைச்சர் பதவிக்காகப் பத்து இலட்சம் மலையகத் தமிழர்களைச் சிங்களவரிடம் காட்டிக் கொடுத்து, 'துரோகிகளில் பெரிய துரோகி' என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டார். யானை தனது தலையில் மண்ணை வாரிப் போடும் என்பார்களே அதேபோன்று, திருவாளர் பொன்னம்பலம் தமிழினத்தின் தலையில் மண்ணை வாரிப் போட்டார்.

1948இல் மலைநாட்டுத் தமிழர்களது குடியுரிமை மட்டும் பறிபோகாதிருந்திருந்தால், (1948இல் குடியுரிமை பறிக்கப்பட்டதாற்தான் 1949இல் வாக்குரிமை பறிபோனது) இலங்கையின் அரசியல் வரலாறே முற்றிலும் வேறுவிதமாக இருந்திருக்கும்.

1956 இல் தனிச் சிங்களத்தைச் சட்டமாக்கவோ, 1972இல் சோல்பரி அரசியல் யாப்பைத் தூக்கிக் குப்பைக் கூடைக்குள் ■

### 1947 – 77 பாராளுமன்ற ஆசனங்கள் இனவாரி அடிப்படையில்

| | சிங்களவர் | இ.தமிழர் | ம.தமிழர் | முஸ்லிம் | மற்றவர்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| ஆசனங்கள் | 66 | 11 | 11 | 6 | 1 | 95 |
| பொதுத்தேர்தலில் கிடைத்த ஆசனங்கள் | | | | | | |
| 1947 | 68 | 13 | 7 | 6 | 1 | 95 |
| 1952 | 75 | 13 | – | 6 | 1 | 95 |
| 1956 | 76 | 12 | – | 6 | 1 | 95 |
| மக்கள் தொகை அடிப்படையில் | | | | | | |
| | 106 | 17 | 18 | 10 | – | 151 |
| மாசி 1960 | 123 | 18 | – | 9 | 1 | 151 |
| ஆடி 1960 | 121 | 18 | – | 11 | 1 | 151 |
| 1965 | 122 | 17 | – | 11 | 1 | 151 |
| 1970 | 123 | 19 | – | 8 | 1 | 151 |
| 1977 | 137 | 18 | – | 12 | 1 | 151 |

(மக்கள் தொகை அடிப்படையில்)

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்று கே.ஆர். டேவிட்டுக்கு என்னோடு வரச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. நவாலி விடயங்களைக் கிரகிப்பதற்கு, அனுபவத்திலும் வயதிலும் என்னைவிட முதியவரான அவர் என்னோடு நிற்பதை விரும்பினேன். தகவல் தருபவர்கள் உணர்ச்சி வசப்பட்டு அழுதுகொண்டு இருக்கும்போது தொடர்பற்றுப் போகும் செய்திகளை நிரைப்படுத்துவதற்கு, அவரது துணை வேண்டியிருந்தது.

அன்று அவர் வராதபடியால், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனைக் காணும் முடிவோடு வட்டுக்கோட்டையை நோக்கிப் போகின்றேன்.

போகும்வழியிற் சென். பீற்றர்ஸ் றோ.க.த. வித்தியாலயத்தின் அதிபர் சிறில் சுகந்திரனைச் சந்திக்கின்றேன். டேவிட்டும், சுகந்திரனும் ஆசிரியர் கலாசாலையில் ஒன்றாகப் பயிற்சி பெற்றவர்கள். அவர்தான் இவரை அறிமுகம் செய்திருந்தார். "இன்று டேவிட்டுக்கு வசதியில்லை, இன்னுமொரு நாள் முன்னறிவித்துவிட்டு நவாலிக்கு வருகின்றோம்" என்றேன்.

# வேத்தனை வித்துக்கள்





நவாலியில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கும், காயமுற்றோர், பாதிக்கப்பட்டோருக்கும் ஊர்மக்களும் பொது ஸ்தாபனங்களும் நிதி உதவி செய்வதாகவும், இரண்டு இலட்சத்துக்கு அதிகமாகப் பணம் சேரும் என எதிர்பார்ப்பதாகவும், ஆவணி 9ம் திகதி – நவாலிப் படுகொலைகளின் முதலாம் மாத நினைவு நாளில் – சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் ஆத்மசாந்தி வழிபாடும், இரங்கற் கூட்டமும் நடைபெற இருப்பதாகவும், சர்வமதத் தலைவர்களும் கலந்து கொள்ளும் இந்நிகழ்விற்கு நாம் கட்டாயம் வரவேண்டும் என்றும் கூறினார்.

கட்டாயம் இருவரும் வருவதாகக் கூறி அவரிடம் இருந்து விடை பெறுகின்றேன். அன்றும் வட்டுக்கோட்டை, மூளாய்ப் பகுதிகளிலிருந்து "மூட்டை முடிச்சுக்களுடன்" மக்கள் வந்து கொண்டிருந்தனர். நவாலியைத் தாண்டி வயல் வெளிகளூடே வட்டுக்கோட்டையை நோக்கிப் போய்கொண்டிருந்தபோது, திடீரெனப் பயங்கரச் சத்தத்துடன் மாதகலிலிருந்து அராலிக் கரைப்பக்கமாகச் ஷெல் ஒன்று இரைச்சலுடன் சென்று வெடிக்கின்றது. அந்தக் கணத்தில் வீதியால் வந்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் விழுந்து படுக்கின்றனர். மோட்டார் சைக்கிளிற் சென்றுகொண்டிருந்த என்னால் உடன் பிறேக் போட்டு, அந்த இடத்திலே நிற்க மட்டுமே முடிந்தது.

சில நிமிடங்களில் மீண்டும் அனைவரும் சுதாகரித்துக் கொண்டு, எழுந்து நடக்கத் தொடங்குகின்றனர். நானும் வட்டுக்கோட்டையை நோக்கி முன்னேறுகின்றேன்.

பேராயர் ஜெபநேசன் அவர்களை அவரது இல்லத்திற் காணச் செல்லுகின்றேன். அவரது வீட்டின் "போர்ட்டிக்கோ"வில், சிங்கள இராணுவத்தாற் கண்ணாடிகள் யாவும் அடித்து நொருக்கப்பட்டும், சக்கரம் களவாடப்பட்டும் அவருடைய "மிஸ்ருபிசி" மோட்டார் கார் பரிதாபமாக நிற்கிறது. அதையும் தாண்டி அவரது வீட்டிற் கால்பதித்த போது 'வாங்கோ நாவண்ணன்' என்ற அவரின் குரல் அன்போடு அழைப்பு விடுத்தது. யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக இருந்து போராயர் ஆனதின் பின்னர், முதன்முதலில் அவரை அவரது இல்லத்திற் சந்திக்கப் போகின்றேன். அப்போது அவர் இருந்த பதவியும் வசிக்கும் இல்லமும் வேறு, இப்போது அவர் வகிக்கும் பதவியும் வசிக்கும் இல்லமும் வேறு. சாதாரண எழுத்தாளனாக மட்டும் இருக்கும் என்னை, தேடிவந்த நோக்கம் என்னவென்று தெரிந்து கொள்ளாத நிலையில் 'வாங்கோ' என்ற அந்தப் பண்பான அழைப்பு மெய்சிலிர்க்க வைத்தது.

அதிசிறந்த கல்விமான். பட்டங்களாற் சமூகத்தின் உச்ச நிலையில் நிற்பவர். அந்த நிலையிலும் பண்பு தவறாத மனித நேயம்தான் அவரது வாழ்க்கையின் வெற்றிக்கு முதல் என்று புரிய வைத்தது. நான் அவரைத் தேடிச்சென்றதின் நோக்கத்தைக் கூறியபோது, எனது முயற்சியை வரவேற்றதுடன், "நான் எனது உள்ளக் குமுறல்களைக் கொட்டுகிறேன், எழுதிக் கொள்ளுங்கள்" என்று தொடங்கினார்.

பேராயர் ஒரு பழமை விரும்பி. அரும்பொருள் சேகரிப்பாளர். அந்த ஆர்வத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக அவர் சேகரித்து வைத்திருந்த அரிய பொக்கிசங்கள், அருமை தெரியாதவர்களாற் திருடப்பட்டும் அழிக்கப்பட்டும் விட்டன. இவற்றில் டச்சுக்காரர், ஆங்கிலேயர், கிழக்கிந்தியக் கம்பனிகள், திப்பு சுல்தான் காலத்துக் கரன்சிகள்– நாணயங்கள் முக்கியமானவை.

பேராசிரியர் நேசையா, பேராயர் குலேந்திரன் குடும்பத்தவர்கள் கொடுத்த பழைய ஏட்டுச் சுவடிகள், ஆவணங்கள், சான்றிதழ்கள் அனைத்தும் பாழடிக்கப்பட்டன. பேராயர் குலேந்திரனின் நினைவுச் சின்னமாக அவர் பாவித்த வெள்ளிச் சிலுவைகள் இரண்டில், ஆயர் கழுத்தில் அணிந்திருப்பது தவிர மற்றது திருடப்பட்டுவிட்டது.

வெளிநாட்டு அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த அரிய நூல்கள் – அமெரிக்கா, இலங்கை மிஷன், மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி சம்பந்தமான மீளப்பெறமுடியாத ஆவணக் குறிப்புக்கள் அனைத்தும் துவம்சம் செய்யப்பட்டன.

ஆயர் அவர்கள் கல்லூரி மாணவனாய் இருந்த காலத்தில் சாரணியச் சீருடையில் எடுத்த தனது புகைப்படத்தைக் கூட இல்லாது செய்துவிட்டனரே என்று கூறிய போது, அவரது மெல்லுணர்வு அதிகமாக வெளிப்பட்டது.

மாணவனாக, போதகராக, பட்டதாரியாக, அதிபராக, பேராயராக, மணக்கோலத்தில், பிரிவுபசாரத்தில் என்று எடுக்கப்பட்ட புகைப்படங்கள், வீடியோப்படங்கள், விருதுகள், பதக்கங்கள், நினைவுச்சின்னங்கள் அனைத்தையும் ஏன் எடுத்துச் சென்றார்கள் – அல்லது அழித்தார்கள்! அவை தேடக் கிடைக்க மாட்டா. திரும்பவும் கிடைக்கமாட்டா எனக் கூறியபோது, வேதனையின் உச்சத்தில் அவர் இருந்தார்.

ஆயர் அவர்களின் சகோதரர்கள் அனைவரும் வெளிநாடுகளில். அவர்களின் பெறுமதியான சொத்துக்கள் – நினைவுச் சின்னங்கள், அன்பளிப்புக்கள், இவை பல இலட்சங்கள் பெறுமதியானவை. அவை யாவும் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன.

அவர் பேசிக்கொண்டு வந்ததின் உச்சக்கட்டமாக.......

"நாயிலும் கீழாய் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதலின்றி அவர் நலமெண்ணி
உழைத்திட நான் தவறேன்"

என்ற பாரதிதாசனின் வரிகள் உணர்ச்சிப் பிழம்பாக அவர் வாயினின்று வெளிவந்தன.

"யாழ்ப்பாணத்தில் இனி எமக்குள்ள கடமை என்னவெனில், பயப்படாதே சிறுமந்தையே! இராச்சியத்தை உன் கையில் ஒப்படைக்கப் பிதாவானவர் சித்தமாயிருக்கிறார் என்று யேசுபிரான் கூறினார். நாம் அரசியலில் ஈடுபடாவிடினும், ஏழை மக்களுக்காகக் குரல் கொடுங்கள் என்றுதான் அவர் கூறினார்"

இந்த வரிகளை அவர் கூறி முடித்தபோது, நீறுபூத்து நிற்கும் நெருப்பிலிருந்து பிறந்த வெம்மையை உணரக்கூடியதாக இருந்தது.

பேச்சின் திசையை நான் மாற்றுகின்றேன்.

"அண்மையிலே நீங்கள் ஜனாதிபதியைச் சந்தித்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வந்ததே?"

"உண்மை. அரைமணி நேரம் என்னோடு பேசிக்கொண்டிருந்தார். முரட்டுத்தனமான அரசியல்வாதியாக அல்லாமல் படித்த, பண்பான, அறிந்து கொள்ளும் ஆர்வமுள்ள பெண்ணாக என்னோடு நடந்துகொண்டார்."

"முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தது எனக்குத் தெரியவே தெரியாது. யாழ் நகரிலும் ஷெல்கள் வந்து விழுந்தனவா?" என்று ஜனாதிபதி ஆயரிடம் வினாவியதையும்,

"8, 12, 18 மைல்கள் பாயக்கூடிய ஷெல்களை உங்கள் துருப்புக்கள் வைத்திருக்கின்றனர்: இதனால் எங்கே? எப்போது? எவ்விடத்தில்? ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன என்று அறியமுடியாது மக்கள் பெரும் நடுக்கத்தில் இருக்கின்றார்கள்" என ஆயர் கூறிய பதிலையும்,–

"அத்தகைய ஷெல் தாக்குதல்களை நடத்தும்படி நான் ஒருபோதும் படையினருக்கு உத்தரவு வழங்கவில்லை: எதிரி முன்னோக்கி வரும்போது அவர்கள் வரும் திசையில் ஷெல்களை உபயோகிக்கலாம் என்றுதான் கூறியுள்ளேன்" என்று அவர் கூறியது பற்றியும் அவரிடம் நேரடியாகவே கேட்டேன்.

ஆயர்–ஜனாதிபதி சந்திப்பின்போது, சந்திரிகா அப்படிக் கூறியதை ஒப்புக்கொண்டார். அடுத்தவரைப் பற்றித் தரக்குறைவாக மதப்பிடக் கூடாது. அப்படி உணர்ந்து கொண்டாற் கூட, அதனை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் ஆர்வம் காட்டக்கூடாது என்பதில் பண்பான போக்கினை அவர் கடைப்பிடிப்பதால், அதுபற்றி மேலும் அவரிடம் கேட்காவிட்டாலும்........

"முப்படைகளின் தளபதியான நாட்டின் ஜனாதிபதி, தன் நிர்வாகத்தின் கீழுள்ள படையினர் என்ன செய்கிறார்கள் என்பது தெரியாது என்று கூறுவாரானால், முப்படைகளும் தளபதியை மீறிச் செயல்படுகின்றன.....என்றல்லவா பொருள்!

தனது படைகளிடம் உள்ள ஆயுதங்களின் தரம், பலம் பற்றி அறியாமல் இருக்கும் ஒருவர், தானே முப்படைகளின் தளபதி என்று கூறிக் கொள்வதற்குத் தகுதியுள்ளவரா?

ஜனாதிபதியின் பேச்சுக்கள் சொல்லுக்குச் சொல்லு அவரது அறியாமையைப் பறை சாற்றுகின்றன.... அல்லது முதுபெரும் சினிமா நடிகன் விஜயகுமாரணதுங்காவின் மனைவியாக இருப்பதற்குத் தனக்குள்ள நடிப்புத்திறனை ஆடிக்காட்டுகின்றார் என்பதுதான் உண்மை.

'புத்தகங்களை எரிப்பது எமது வழக்கமல்ல' என்பது வேறு. 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என்பது போல் தோன்றினாலும், யாழ்ப்பாண நூலகத்திற்குத் தீவைத்த காடைத்தனம் அரங்கேற்றப்பட்டது இவர் போன்ற கண்டிச் சிங்களவனின் தலைமையில்தான் என்பதனை உலகத்தமிழ்ச் சமுதாயம் மறந்து விடவில்லையே....!" என் மனதுக்குள்ளாகவே நினைத்துக் கொண்டேனேயொழிய இச்சிந்தனைகளை அவரோடு பரிமாறிக்கொள்ளவில்லை.

பேராயர் ஜெபநேசனுடன் இரண்டு மணி நேரத்திற்கு மேலாகக் கழிந்துவிட்டது. சித்தங்கேணியில் அமைந்துள்ள 'போரூட்' நிறுவனத்திற் பொறுப்பான பதவி வகிக்கும் நண்பன் மூர்த்தியிடம் சென்றேன்.

காரைநகர், மற்றும் தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஏழைகளுக்கு வீட்டுத்திட்டங்கள் மூலம் குடிமனைகள் அமைத்து, அவர்களைக் கல்வி, சுகாதார வசதிகளுடன் வழிநடத்தும் பாரிய பணியைப் 'போரூட்' நிறுவனம் செய்து வருகின்றது. நல்லொழுக்கமான சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

"தமிழ் மக்களைப் புலிகளிடம் இருந்து காப்பாற்றுவதற்காக" எனக் கூறிக்கொண்டு சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட 'முன்னேறிப்பாய்தல்' நடவடிக்கையின் போது, "பிச்சை எடுத்ததாம் பொருமாள் அதைத் தட்டிப் பறித்ததாம் அனுமார்" என்பது போல, இராணுவம் அந்த ஏழைகளின் குடிசைகளைச் சூறையாடியதுடன்...... அவர் தம் குடியிருப்புக்களுக்கு, வேலிகளுக்கு, படிப்பகங்களுக்குத் தீ வைத்து வெறியாட்டம் ஆடிச் சென்றுள்ளது. சந்திரிகா அம்மையாரின் "புத்தகங்களை எரிப்பது எமது வழக்கமல்ல" என்ற 'சம்மனசுத்தனத்துக்கு' இந்தப் படிப்பக எரிப்புகள் ஒரு உதாரணம்.

மூர்த்தியும் நானும் சுழிபுரத்தை அடைகின்றோம். மூர்த்தி சுழிபுரத்தில் வாழ்பவர் மட்டுமல்ல, 'போரூட்' ஸ்தாபனத்தின் சேவைகள் அந்தப் பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றபடியால் அவருக்கு அந்தப்பகுதி நன்கு பரிச்சயம் மட்டுமல்ல, ஆட்களும் நன்கு அறிமுகம். சுழிபுரம் மேற்கு, ஆறுமுகம் குணரத்தினத்தின் வீட்டின் முன் போய் மோட்டார் சைக்கிளை நிறுத்தினோம்.

குடும்பத்தலைவர் ஆறுமுகம் அங்கு இருக்கவில்லை, வயதான அந்த அம்மா ஆறுமுகத்தின் மனைவியார்தான் இருந்தார். நாம் சென்ற விடயத்தைக் கூறியதும் அந்தத் தாய்

www.tamilarangam.net

இருந்தார். நாம் சென்ற விடயத்தைக் கூறியதும் அந்தத் தாய் நெஞ்சில் அடித்து அடித்து அழத் தொடங்கினார். "என்ரை அம்மா. என்ர வீட்டுக்கு வந்த அம்மா...என்ரை வீட்டுக்கு முதல் வந்த லச்சுமி, என்ர அம்மாவும், ஐயாவும் சமூகசேவையெண்டு திரிவினமே.....இந்த விறாந்தையில் வைச்சு ஊர்ப்பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாவே! என்ரை அம்மா...... என்னைக் கடைசிக் காலத்தில பாக்கிறவ அவதான் என்று நம்பிக் கொண்டிருந்தேனே..... என்ர ஐயாதான் எங்களுக்குக் கொள்ளி வைப்பார் என்று இருந்தோமே.....என்ர பேரப்பிள்ளைகள்...... படி படி என்று படிப்பினமே....! என்ர பேரமக்கள் எங்களுக்கு டான்ஸ் ஆடிக் காட்டுவினமே..... ஐயோ எல்லோரும் எங்களை விட்டுப் போயிற்றினமே....! நாங்கள் மட்டும் ஏன் இருக்கிறம். எங்களை மட்டும் ஏன் விட்டிட்டுப் போச்சினம். என்ரை அம்மா...... என்ர ஐயா....."

அந்த அம்மா தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தார்.



# எத்தனை வீழ்ந்தன



அவரது பிரலாபத்தை அங்கு எவராலும் கட்டுப்படுத்தவே முடியாமலிருந்தது. என்னுடன் வந்த நண்பன் மூர்த்தியின் விழிகள் ததும்பி நீர்முட்டியிருந்தன.

இதற்குள் அவரது கணவர் ஆறுமுகம் வந்துவிட்டார். பழைய லொறிச் சாரதி. அவரது மகன் ரத்தினம் காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையின் இயந்திரம் திருத்துநர். அவர் மனைவி ரோகினி படித்த பெண்..... பிள்ளைகள் தர்ஷினி, பிரணவன், விதுஷன். இவர்கள் ஐவரும் ஆடி 9ஆம் திகதி காலை சுழிபுரத்தில் இருந்து புறப்பட்டு நவாலிக்குச் சென்று, நவாலி முருகன் சிற்றாலயத்துக்குப் பக்கத்தில் உள்ள கமலநாதன் வீட்டில் தங்கியிருக்கிறார்கள்.

அன்றைய குண்டுத்தாக்குதலில் ஐவருமே இறந்து போனார்கள்.

அன்று காலை 6.30 மணியளவில், சுழிபுரம் மத்தியில் உள்ள தேரியன் தோட்டத்தில் ஷெல் விழுந்து வெடித்தது. கடற்தொழிலாளியான கருணாநிதியின் மனைவி திரவியமும் மகள் ஜெயந்தியும் அந்த ஷெல் வீச்சுக்குப் பலியானார்கள். கருணாநிதி காரைநகரைச் சேர்ந்தவர். இராணுவ அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து சுழிபுரத்திற் குடியேறினவர். இந்த அழிப்பு நடந்தவேளையில், கருணாநிதி கடற்றொழிலுக்குப் போயிருந்தார்.

ஷெல் தாக்குதல் நடந்து இருவருமே கொல்லப்பட்டதும் சுழிபுரம் மக்கள் வீடுகளை விட்டு ஓடத்தொடங்கிவிட்டனர். நிலைமை மேலும் மோசமாகவே, போவதா நிற்பதா என்று தயங்கிக் கொண்டிருந்த ஏனையவர்களும் வெளியேறத் தொடங்கிவிட்டனர். அவர்களுள் குணரத்தினம் குடும்பமும் ஒன்று.

கருணாநிதியும் வீடு திரும்பாத நிலையில், அவர் மனைவியினதும் மகளினதும் உடல்கள் தேடுவாரற்ற நிலையில் அங்கு அநாதை ப் பிணங்களாகக் கிடந்தன. பகல் 11 மணிக்குப் பின்னர் ஷெல்கள் வந்து விழுந்து கொண்டிருந்த நிலையிலும், அனுதாப உணர்வும், துணிவும் கொண்டவரான மகாலிங்கம் என்பவர், இரட்டை மாட்டு வண்டில் பூட்டிச் சென்று இருவரது சடலங்களையும் ஏற்றிவந்தார். சுழிபுரம் சந்தியை நெருங்கிய வேளை, இராணுவச் ஷெல் ஒன்று வண்டில் வந்துகொண்டிருந்த இடத்துக்கு அண்மையில் ஒரு மரத்தில் விழுந்து மோதி வெடித்தது. அந்த ஷெல் வெடித்த அதிர்வில் வண்டியிற் பூட்டியிருந்த இரண்டு மாடுகளும் திமி-றி அறுத்துக்கொண்டு பாயவே..... மகாலிங்கத்துடன் பிணங்களும் சிதறி விழுந்தன. அந்த நிலையிலும் மனங்கலங்காத மகாலிங்கம் மாடுகளை விரட்டிச்சென்று பிடித்து, வண்டில் நுகத்திற் பூட்டி, பிணங்களை மீண்டும் வண்டியில் ஏற்றிப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்த்தார். கணவர் கருணாநிதியும் பின்னர் வரவே பிணங்கள் தகனம் செய்யப்பட்டன.

சுழிபுரம் மேற்கில் இருந்து இடம்பெயர்ந்த சந்திரபாலு என்பவரின் மனைவி – பிள்ளைகள் – மருமக்கள் – பேரப்பிள்ளைகள் என எல்லாருமாக மொத்தம் 13 பேர் நவாலி-யை அடைந்து அங்கு நரபலி கொள்ளப்பட்டனர்.

மூர்த்தியைச் சுழிபுரத்தில் அவரது வீட்டில் கொண்டு சென்று இறக்கிவிட்டுத் திரும்பும் வழியில், சங்கானையில் எனது நண்பர் நாராயணசிங்கத்தைச் சந்திக்க வேண்டும் என்று ஏற்கனவே திட்டமிட்டிருந்தேன். நாராயணசிங்கம் எனது சொந்த ஊரான மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எப்போதாவது நாம் இருவரும் சந்தித்து மனம் விட்டுப் பேசிக்கொள்வதுண்டு. நண்பர்கள் என்பதை விட, ஒரே ஊரவர்கள் என்ற மண்பற்றும் எமக்கிடையே.

வாழ்க்கையில் உழைப்பால் உயர்ந்த மனிதன் என்று நான் மற்றவர்களுக்கு உதாரணம் காட்டிச் சொல்பவர்களில், நாரா யணசிங்கமும் ஒருவர். சிறந்த புகைப்படப் பிடிப்பாளர். தனது மனைவியின் பெயரிலே 'நித்தியசித்திரா' எனும் புகைப்பட நிலையம் ஒன்றைச் சங்கானையில் நிறுவி நடாத்தி வருகின்றார். இரண்டு ஆண்மக்கள். இருவரும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மூத்தவன் பரணீதரன், இளையவன் தரணீதரன். அராலி தெற்கில் அவர்கள் வீடு.

நாராயணசிங்கத்தை அணுகினால், சித்தன்கேணி, சங்கானைப் பக்கத்தில் நடந்த அனர்த்தங்கள் பற்றிய விபரங்களை அறியலாம் என்ற நம்பிக்கையில், நேரே சங்கானை ஸ்ருடியோ நித்தியசித்திராவுக்கு மோட்டார்ச் சைக்கிளை ஓட்டிச் சென்றேன். பிரச்சனைகளால் ஸ்ருடியோ ஒருவேளை பூட்டியிருக்கலாம் என்று சந்தேகப்பட்டுக்கொண்டு சென்ற எனக்கு, ஸ்ருடியோ திறந்திருப்பதைக் கண்டதும் ஒரு மன ஆறுதல்.

**நாவண்ணன்**

ஸ்ருடியோ வாசலில் மோட்டார்ச் சைக்கிளை நிறுத்திவிட்டுக் கவுண்டரைப் பார்த்தபோது, வேலை செய்யும் இரண்டு பெண்களும் அங்கு நின்றார்கள். யாரோ ஒரு பெண் ஏற்கனவே பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் விடயமாகப் பேசிக்கொண்டிருந்தார். முதலில் என்னை இனங்கண்டு கொள்ளச் சிரமப்பட்டனர். அவர்களில் ஒருத்தி "வாங்கோ நீங்கள் நாவண்ணன் தானே" என்றாள்.

"என்ன மறந்து விட்டீர்களா?" என்று சிரித்தபடி வினவிய நான், "எங்கே உங்கட **boss**" என்றேன்.

ஒருகணம் வியப்படைந்த அவர்கள், ஆளை ஆள் பார்த்துக்கொண்டு, எனது முகத்தைக் கலக்கத்துடன் பார்த்தனர்.

"என்ன முழிக்கிறீர்கள், எங்கே நாராயணசிங்கம்?" என்று மீண்டும் நான் கேட்டபோதும் அவர்களிடம் இருந்து பதில் வரவில்லை. இதுவரையில் அவர்களோடு பேசிக்கொண்டிருந்த பெண்தான் அவர்களிடம் சொன்னார்:

"என்னவண்டு சொல்லுங்கோவன். அவர் தெரியாதபடியால்தானே கேட்கிறார்" என்றார். அப்பொழுதுதான் எனது மனதுக்குள் ஏதோ ஒன்று தட்டியது. "ஏன்? என்ன விசயம்?" என்றேன்.

"அவர் மோசம் போயிற்றார்" என்றாள் அந்தப் பெண்களில் ஒருத்தி. என்னால் நம்பவே முடியவில்லை. ஒரு கணம் என்னால் எதுவுமே பேச முடியவில்லை. அந்த நிலையிலும் "என்ன நடந்தது? எப்போ?"

"அது போனமாசம் 10ம் திகதி."

"அராலியிற்தானே இருக்கிறார்கள்?"

"இல்லை யாழ்ப்பாணத்தில்......" என்று கூறிக்கொண்டிருக்கும் போது, மூத்தவன் பரணீதரன் C90 இல் அங்கு வந்து சேர்ந்தான். தந்தையை இழந்த வாட்டம் அவன் முகத்திற் தெரிந்தது. சோகம் கலந்த முறுவலோடு என்னைப் பார்த்தான்.

"என்ன ராசா நடந்தது? எனக்கு ஒன்றும் தெரியாதே....!" என்று குற்ற உறுத்தலுடன் அவனைக் கேட்டபோது, மோட்டார் சைக்கிளைவிட்டு இறங்கி ஸ்ருடியோவை நோக்கி வந்த அவன், கால்களை இழுத்து இழுத்து நடந்தான்.

"காலில் என்ன?" என்று கேட்டபடி அவன் கால்களைப் பார்த்த போது.....வலக்காலில், பெருவிரலுக்கு அடுத்தவிரல் இருந்த இடம் வெறுமையாக இருந்தது. படக்காலைச் சுற்றிக் கட்டுப்போட்டிருந்தது.

"இந்த விரல் துண்டாய்ப் போயிற்றுது. இன்னும் புண் ஆறேல்ல." அந்த வேதனைக்குள்ளும் சிரிக்க முயன்றான். "எங்களுக்கு உங்கட இடம் தெரியாது: அதோட எல்லோருக்கும் காயம். அதுதான் அன்றைக்கிருந்த அவதி யில் உங்களுக்கு அறிவிக்க ஏலாமற் போய்விட்டது" என்று தான் பிழைவிட்டது போல் சமாதானம் சொல்ல முயன்றான்.

"அது கிடக்கட்டும் இப்ப எங்க இருக்கிறீங்க?"

"சிறீதர் தியேட்டருக்கு முன்னால இருக்கிற ஒழுங்கைக்க" என்று சரியான குறிப்பைச் சொன்னான்.

மேற்கொண்டு அந்தப் பிள்ளையோடு பேசிக்கொண்டிருக்க மனமற்றவனாக விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன். என் ஊரவன், உற்ற நண்பன், ஆபத்தில் உதவியவன், அவனது மரணச் சடங்கில்— நான் யாழ்ப்பாணத்தில் இருந்தும் கலந்துகொள்ள முடியவில்லையே என்று கவலையாக இருந்தது. அதுவும் ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் தெரிந்தவர் ஒருவர் வீட்டில் நடைபெற்றதாம் என்று அன்று மாலை அவர்கள் சொல்லக் கேட்டபோது, மேலும் வேதனையாக இருந்தது.

சிறீதர் படமாளிகைக்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் அவர்கள் இருந்த வீட்டிற்கு அன்று மாலை சென்றேன். நாரா யணசிங்கத்தின் மனைவியும் பிள்ளைகளும் அங்கே இருந்தனர். முதலில் அவர்களோடு பேசுவது சிரமமாய் இருந்தாலும் பின்னர் சுதாகரித்துக் கொண்டேன்.

அன்றைக்கு என்ன நடந்தது என்று அவர்களே கூறினார்கள்.

ஆடி 9ம் திகதி 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதும் நிலைமையை உணர்ந்துகொண்ட நாரா யணசிங்கம், ஸ்ருடியோவில் இருந்த பெறுமதி மிக்க பொருட்கள், கருவிகள் அனைத்தையும் அராலிக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டார். நவாலியில் 'புக்காரா' விமானம் வீசிய குண்டுவீச்சு அழிவுகளைக் கேள்விப்பட்டதும், பரவலாக அது நடக்கலாம் என்ற காரணத்தால் முன்யோசனையுடன் செயற்பட்டார்.

அன்றுமாலை உடுவிலில் இருந்து திருமதி நாராயணசிங்கத்தின் சகோதரியின் மகன் ராஜ்மோகனும் வந்துவிட்டான்.

அன்று இரவும் ஷெல் அடிகள் ஓயவில்லை. தொடர்ந்து கொண்டே இருந்தன. எதற்கும் மறுநாள் பெறுமதியான பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்துவிடுவது என்ற முடிவுடன் இரவு கழிந்தது. காலையிலும் ஷெல் வீச்சுத் தொடர்ந்துகொண்டேயிருந்தது. பொருட்களையெல்லாம் அடுக்கிக் கட்டுவதில் குடும்பமாக ஈடுபட்டனர். எல்லாம் ஒழுங்காகக் கட்டி முடிய நண்பகல் ஆகிவிட்டது. இனி வாகனம் ஒன்றை ஒழுங்கு செய்து ஏற்றிச் செல்வதுதான் பாக்கி.

மிக அண்மையில் ஷெல்கள் வந்து விழும் சத்தம் கேட்டது. நிலைமை பயங்கரமாகவிருந்தது. வீட்டுக்கு மிக அருகாமையிற் ஷெல்லொன்று வந்து விழுந்து வெடிக்கவே வீட்டுக்குள் இருப்பது ஆபத்து என்பதால் வெளியே சென்று நிலத்தில் படுக்க முடிவெடுத்தனர்.

வீட்டின் முன் ஒழுங்கை, ஒரு முச்சந்தி. எல்லாரும் படுப்பதற்கு வசதியான இடம். இவர்கள் நால்வருடன் ராஜ்மோகனும் சேர்ந்து வீதிக்கு வந்து தரையிலே குப்புறப் படுத்துக் கொண்டனர். அவர்கள் மட்டுமல்ல, இன்னும் பலரும் அங்கு கூடியிருந்தனர். அவர்கள் வீட்டுக்கு முன்புறம், வீதிக்கு மறுகரையில் ஒரு உயர்ந்த புளியமரம். அதன் கீழும் படுத்திருந்தனர். அப்பொழுதுதான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது.

சீறிவரும் அந்த எமச் ஷெல்லின் இரைச்சல் கேட்டது. தொடர்ந்து அந்த இடமே அதிர்ந்தது. மறுகணம் அங்கே அழுகுரல்கள்! புகைமண்டலம்! புழுதிப்படலம்! யாருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

சீறிவந்த அந்த ஷெல் நேரடியாக அந்தப் பாரிய புளியமரத்தில் மோதி வெடித்துச் சிதறியது. புளியமரத்தின் கீழே படுத்திருந்தவர்கள் தவிர, சற்றுத் தள்ளி அதன் சுற்றாடலில் கிடந்த அனைவருக்குமே காயம்.

திருமதி நாராயணசிங்கத்திற்குத் தலையிலும்,காலிலும் காயம்.■

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

www.tamilarangam.net



# தென்னாசிய வலுச் சமநிலையைப் பாதிக்கும் சிறிலங்காவில் உருவாகும் மேற்குலக மையம்

தமிழீழ விடுதலைப் போராட்டமும் அதன் விளைவாக மாற்றம் கண்டுள்ள சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையும், மற்றும் உலகநாடுகளுடன்–குறிப்பாக மேற்குலகுடன் ஏற்பட்டுவரும் இராணுவ ஒத்துழைப்பும் தென்னாசிய வலுச் சமநிலையைப் பாதிக்கும் ஒன்றாக மாறியுள்ளது. இதன் காரணமாக இவ்விடயம் தென்னாசிய ரீதியில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்ற எச்சரிக்கையும் எழத் தொடங்கியுள்ளது.

"இந்து சமுத்திரத்தை வெளிச்சக்திகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், இப்பிராந்தியத்தின் உறுதித் தன்மையைப் பேணவேண்டிய பொறுப்பும், தமக்கிருக்கின்றது என்பதை இந்திய இராணுவத் திட்டமிடலாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும்" என இந்தியாவின் முன்னாள் சனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அவர்கள் குறிப்பிட்டிருந்தமையானது, இதன் வெளிப்பாடேயாகும்.

திரு. வெங்கட்ராமன் அவர்கள் தனது பேச்சில் மேலும் இரு விடயங்களைச் சுட்டிக் காட்டினார். முதலாவதாக, "இந்தியப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் தம்மைத்தாமே நிர்வகிப்பதற்கு முடியாதவாறு வறுமைப்பட்டவையாகவும், சிறிய நாடுகளாகவும் இருப்பதால் இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியாவின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றன" என்பதாகும்.



முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன்

இரண்டாவதாக, "இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா தனது கடமைகளை மேற்கொள்ள வேண்டுமானால், தற்காப்பு நிலை என்னும் தனது திசைமார்க்கத்தை இந்தியா மாற்றிக் கொள்ளவேண்டும். இந்தியா போர்களில் வெல்லும் நோக்கங்களைக் கொண்டிராது, பிராந்தியங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தையே பாரம்பரியமாகக் கொண்டுள்ளது. போர் என்றால் அது வெல்லப்பட வேண்டும். ஒப்பந்தத்தில் போரை வளர்க்கக் கூடாது" என்பதாகும்.


வெளியுறவுக் கொள்கை மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதும், இந்திய இராணுவத்தரப்பில் முக்கியத்தர்கள் பலர் கலந்து கொண்டுள்ள கூட்டமொன்றில் இக்கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதும் முக்கியமானதாகும்.

இதேசமயம், திரு. வெங்கட்ராமன் அவர்கள், பொதுப்படையாக இந்து சமுத்திரச் சமாதானப் பிராந்தியச் சிறிய நாடுகள் பற்றிக் கூறியிருப்பினும், உண்மையில் இலங்கையின் நிலைவரம் குறித்து இந்தியா கடைப்பிடிக்க வேண்டியது எது எனத் தான் கருதும் வெளியுறவுக் கொள்கை குறித்தே தெரிவித்துள்ளார் எனலாம்.



இலங்கை - இந்திய ஒப்பந்தம்

இந்து சமுத்திரப் பிராந்தியமானது, இந்தியாவின் நீண்ட காலப் பார்வையில், இந்தியாவின் ஆளுகைக்கு உட்பட்ட பிராந்தியம் என்பதே ஆகும். "கெடுபிடிப் போர்" காலத்தில் இருந்தே இந்த நிலைப்பாட்டை இந்தியா கொண்டிருப்பினும், தனது ஆதிக்கம் வலுவடையும் வரையில் இந்து சமுத்திரம் ஒரு சமாதான மண்டலமாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துவதிலேயே ஆர்வம் காட்டியது. இந்த வகையில் அதற்கான தலைமைத்துவத்தையும் தானே வகிக்கவும் முனைந்தது.




பாகிஸ்தான் விமானப்படையிலுள்ள F- 16

ஆயினும் கெடுபிடிப்போர் முடிவடையும் வரை, இந்து சமுத்திரப் பிராந்தியமும் உலக வலுச் சமநிலைக்கு ஏற்ப வல்லரசுகளின் வியூகங்கள் வகுக்கப்பட்ட பகுதியாகவே இருந்தது. இதற்குப் பல இந்து சமுத்திரக் கரையோர நாடுகளும் பங்காற்றத்தவறவில்லை. ஒருபோதும் இந்தியா விரும்பியது போல் அது ஒரு சமாதானப் பிராந்தியமாகப் பரிணமிக்கவில்லை.

இவ்வாறு, ஒருபுறம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தைச் சமாதான மண்டலமாக்குதல் என்ற கோட்பாடு பலவீனமானதொன்றாகப் போன அதேவேளை, தென்னாசியாவில் இந்தியாவும், பாகிஸ்தானும் இப்பிராந்தியத்தின் கெடுபிடிப் போரின் மையங்களாகவே இருந்தன.

அதேவேளை, உலகில் தொண்ணூறுகளின் தொடக்கத்தில், அதாவது சோவியத் யூனியனின் சரிவுடன் கெடுபிடிப் போரானது முடிவிற்கு வந்ததாகக் கருதப்பட்ட போதும் கெடுபிடிப் போரினால் மோசநிலை அடைந்த இந்தியா –பாகிஸ்தான் உறவு நிலை சீர்செய்யப்படவில்லை. கெடுபிடிப்போர்த் தந்திரங்களை இவ்விரண்டு நாடுகளும் கைவிட்டதாகவும் இல்லை. பிராந்தியத்தின் முறுகல் நிலை தணியவுமில்லை.



இந்தியாவின் நடுத்தர ஏவுகணை "பிருதிவி"

இந்நிலையிற் தென்னாசிய இராணுவச் சமநிலை என்பது, பேணப்படும் ஒன்றாகவே இருந்து வந்தது. கெடுபிடிப் போர் முடிந்த பின்பும் இவ்விராணுவச் சமநிலையைப் பேணுவதில் அமெரிக்காவும் அக்கறை காட்டியதாகவே இருந்து வந்துள்ளது. இதன் காரணமாகப் புதிய உலக ஒழுங்கு என்பது, தென்னாசியாவைப் பொறுத்துப் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்ததா என்பது கேள்விக்குரியதாகவே இருந்தது.

இந்த வகையிலேயே இந்தியா, பாகிஸ்தான் விடயத்தில் அமெரிக்கா தனது கொள்கைகளை வகுத்துக் கொண்டது. இதன் பிரகாரம் இந்தியாவைப் பொறுத்து மூன்று முக்கிய விடயங்களில் அமெரிக்காவின் அழுத்தமானது தொடர்ந்து இருந்து வந்தது. இதில், இந்தியா அணுவாயுதங்கள் தயாரிப்பில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்துவது முதலாவதாக இருந்தது. அடுத்ததாக, செயற்கைக் கோள்களை விண்ணிற் செலுத்துவதற்கான ரொக்கட்டுகளை இந்தியா உற்பத்தி செய்வதை முடக்குவதாகவும், மற்றையது இராணுவ ரீதியில் ஏவுகணைகளை இந்தியா உற்பத்தி செய்வதைத் தடை–செய்வதாகவும் இருந்தது.

இவை தொடர்பாக இந்தியாவின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படாவிடில், சர்வதேச அளவிலும், தென்னாசிய ரீதியிலும் இராணுவச் சமநிலை வெகுவாகப் பாதிக்கப்படலாம் என அமெரிக்காவிற் கருதப்பட்டது. ஆனாலும் இந்தியா இவ்விடயங்களிற் கணிசமான ஆற்றல் பெற்றுள்ளதென்றே கூறலாம். இருப்பினும் இவற்றின் பயன்பாடு தொடர்பான விடயத்தில், அமெரிக்காவுடன் அனுசரித்த போக்கு ஒன்றைக் கடைப்பிடிக்கவே இந்தியா தற்பொழுதும் விரும்புவதாகத் தெரிகின்றது. ஏனெனில் கெடுபிடிப் போரின் முடிவானது, தவிர்க்கமுடியாமல் அமெரிக்காவின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து போகவேண்டிய நிலையை உருவாக்கியுள்ளதெனலாம்.

பாகிஸ்தானைப் பொறுத்து அது தயாரித்துள்ள அணுக் குண்டானது, அமெரிக்காவிற்குச் சற்று எரிச்சல் ஊட்டும் ஒன்றாக இருப்பினும், இந்தியாவிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு நாடாகப் பாகிஸ்தான் இருப்பதையே அமெரிக்கா விரும்புவதாகத் தெரிகின்றது. இந்த வகையிலேயே, பாகிஸ்தானிடம் அணு ஆயுதம் இருக்கின்றது என்பது உறுதிப்படுத்தப் பட்டபோதும், இராணுவ– பொருண்மிய உதவிகளை அமெரிக்கா நிறுத்துவதற்கு முன்வரவில்லை.

இந்த வகையில், கெடுபிடிப் போரின் பின்னும் தென்னாசிய வலுச் சமநிலை அமெரிக்காவின் பார்வையில் முக்கியமானதாகவே இருந்தது. இருப்பினும் அண்மையில், தனது சொந்தத் தயாரிப்பான நடுத்தர வீச்சு ஏவுகணையான "பிரிதிவி" யினைத் தனது இராணுவத்தில், சேர்க்க முடிவு செய்துள்ளமையும், ரொக்கட் தொழில் நுட்பத்தில் இந்தியா வெற்றிகரமான பரிசோதனைகளை மேற்கொண்டமையும் அமெரிக்காவைப் பொறுத்து, சற்று மனக்கசப்பை ஊட்டிய விடயங்களாகவே இருந்துள்ளன.

இவ்வாறாகத் தென்னாசிய இராணுவச் சமநிலையில் இந்தியாவின் கை சற்றுத் தூக்கலாக வந்த சமயத்திற்றான், மூன்றாங் கட்ட ஈழப் போரானது தென்னாசிய வலுச் சமநிலையை மீள்பார்வை செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தையும், இதன்காரணமாக இந்தியா தனது வெளியுறவுக் கொள்கை தொடர்பாகப் புதிய வழியிற் சிந்திக்க வேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம்.

மூன்றாங்கட்ட ஈழப்போரானது, அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளுடன் சிறிலங்காவிற்கு நெருக்கமானதொரு உறவை ஏற்படுத்தியுள்ளது என்றே கொள்ளலாம். இவ்வுறவானது ஆயுத தளபாட ரீதியில், இப்பிராந்தியத்தின் வலுச்சமநிலையை எந்தளவிற்குப் பாதிக்கும் என்பதைத் தற்பொழுது கூறமுடியாது விட்டாலும், பிராந்தியத்தின் ஒரு பகுதிக்குள் மேற்குலகின் இராணுவ மையம் ஒன்று உருவாகின்றது என்பதை மறுக்கமுடியாது.

இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கணிப்பீடு அல்ல. 1987 இல் இந்திய–சிறிலங்கா சமாதான உடன்பாட்டிலும் இதுபோன்ற விடயங்களே அன்று முக்கிய இடம் பிடித்துக் கொண்டன. எடுத்துக்காட்டாக அந்நிய நாடுகளின் இராணுவ உதவிகள், ஆலோசனைகள் பெறக்கூடாது போன்றவையும், இரணவிலவில் உள்ள அமெரிக்க வானொலி நிலையம் போன்ற விவகாரங்களுமே முக்கிய அம்சங்களாக இருந்தன.

இந்நிலையில், இன்று இவையாவற்றிற்கும் மேலானதாக மேற்குலகிலிருந்தும் இராணுவ உதவிகளைப் பெறச் சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ள நிலையில், தென்னாசியாவின் வலுச் சமநிலையில் இப்புதிய பிரவேசம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று துணிந்து கூறலாம்.

**ஜெயராஜ்**

அத்தோடு, மறுவளமாகவும் இனப்பிரச்சனை விவகாரத்தில் மேற்குலகின் பிரசன்னமானது தற்பொழுது அதி–கரித்ததொன்றாகவே உள்ளது. அதாவது ஒருபுறம், சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவிகளை வழங்க மேற்குலகின் ஒரு பகுதி முன்வந்துள்ள அதேவேளை, இனப்பிரச்சனைக்கான சமாதான முயற்சிகளில் ஒருபகுதியினர் தாம் அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டவே முனைகின்றனர்.

ஆனால் இதில், மேற்குலகம் இருதரப்பாகப் பிரிந்துள்ளது என

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தரை - கடல் - வானில்

தமிழீழ விடுதலைப் போரை ஓர் உறுதியான புள்ளிக்கு இட்டுச்செல்லும் மூன்றாம் ஈழப்போர், கடந்த ஆண்டின் காலாண்டு முடிவிலேயே சித்திரை 19ஆம் திகதி ஆரம்பமாயிற்று. கடந்த ஆண்டின் இறுதி எட்டுமாத காலப்பகுதியில் நடைபெற்ற மூன்றாம் ஈழப்போர் கடல், வான், தரை என

கிழக்கிற்கும் விரிவுபடுத்தப்பட்டதைக் காட்டி நின்றது. இந்தப் புதிய செய்தியோடுதான் மூன்றாம் ஈழப்போரும் ஆரம்பமாயிற்று. இத் தாக்குதல் முதல், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது பலாலி கடற்பகுதியில் வைத்து வை–8 இராணுவப் போக்குவரத்து விமானம் கடற்புலிகளாற் பலாலிக் கடற்பரப்பில்

பயணிகள் கப்பலை மீட்க வந்த இந்த 'டோறாப் படகுகள், எவ்வாறு தீப்பிழம்பு களாக்கப்பட்டன என்பது, படை உயர்பீடத்தில் இன்னமும் மர்மமாகவே உள்ளது.

இது நடைபெற்ற நான்கு நாள் இடைவெளியில் புரட்டாதி 3 இல், புல்மோட்டைக் கடலில் மற்றுமோர் 'டோறா' கடற்கரும்புலிகளால்

என ஏற்கனவே அதிகாரிகள் மட்டத்தில் உள்ளோருக்கு உணர்த்தியிருந்தது. அவ்ரோ விமானங்கள், உண்மையில் புலிகளினாற்தான் வீழ்த்தப்பட்டனவா அல்லது இயந்திரக் கோளாறினால் வீழ்ந்தனவா என விதண்டா வாதக் குழப்ப அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்த விமானப்படைத் தளபதி எயர்

# புலிகள் சாதனை பொறித்த

மூன்று முனைகளிற் பெரியளவில் விரிந்துள்ளது.

ஒரு போரின் இறுதிவெற்றியைத் தீர்மானிப்பது அப்போர் உள்ளடக்கியிருந்த சமர்களே. எந்த ஒரு படை, சமர்களிற் தனது இராணுவ வெற்றிகளைக் குவிக்கின்றதோ அதுவே போரில் இறுதிவெற்றி பெற்றதாகக் கணிக்கப்படும். இந்த வகையில் மூன்றாம் ஈழப்போரை எடுத்துப் பார்த்தாற் கடந்த சித்திரை 19ஆம் திகதி முதல் இன்றுவரை, பல சமர்கள் இடம்பெற்றுள்ளன. இச்சமர்கள் மூலம் தமது மேலாதிக்கத்தைப் பெறச் சிறிலங்கா இராணுவமும், விடுதலைப் புலிகளும் தீவிரமாகவே முயன்றனர். கடல், வான், தரை என மூன்று முனைகளிற் கடந்த ஆண்டு இறுதி எட்டு மாதங்களில், இராணுவ ரீதியிற் புலிகள் பல சமர் வெற்றிகளைக் குவித்தனர்.

சுட்டுவீழ்த்தப்பட்டது வரை, பல சமர்களைக் கடற்பரப்பிற் கடற்புலிகள் வெற்றிகரமாகப் பூர்த்தியாக்கினர். இக்கடற் சமர்கள் மூலம், சிறிலங்காக் கடற்படையின் கடலாதிக்கம்

அழிக்கப்பட்டது. இதே மாதம் காங்கேசன்துறைத் துறைமுகத்தினுள் நடந்த பாரியதோர் கடற்சமரிலும் ஒரு 'டோறா'

வைஸ் மார்சல் ஒலிவர் ரணசிங்க போன்றோருக்கு, ஆடி 14 காலை முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கைக்கு உதவிக் கொண்டிருந்த புக்காரா தரைத்தாக்குதல்

# 1995 ஆம் ஆண்டு

துஷ்யந்தன்

கடலில் வைத்தே முடக்கப்பட்டது.

வடபகுதியில், சிறிலங்கா கடற்படையின்



கடற்கரும்புலிகளின் தற்கொடைப் படகினால் மோதிச் சிதறும் சிறிலங்காக் கப்பல்

அழிக்கப்பபட்டது. ஐப்பசி 2இல் கடற்படையின் ஆளணி, ஆயுத விநியோகக் கப்பலான தரையிறங்கும் கப்பல் ஒன்று, முல்லைத்தீவுக் கடலில் வைத்துத் தாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதோர் கடற்சமராகும். இத்தாக்குதலில், அக்கப்பலில் இருந்த இருபதுக்கும் மேற்பட்ட – விடுமுறையில் சென்ற – இராணுவத்தினர் பலியானதும் குறிப்பிடத்தக்கது. இதைவிட ஆடி மாதம் 16 இல் 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கையின் இரண்டாங் கட்டமாகக் காங்கேசன்துறைத் துறைமுகத்தினுள் 'எடித்தாரா' என்ற கண்காணிப்புக் கட்டளைக்கப்பல் கடற் கரும்புலிகளால் அழிக்கப்பட்டது.

ஆனி 28இல் மண்டைதீவு மீது நடாத்தப்பட்ட வெற்றிகரத் தாக்குதலில், கடற்புலிகளின் பின்புலப்பலம் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகவே இருந்தது.

இவ்வாறாக இவ்வாண்டில் நடைபெற்ற கடற்சமர்களில், கடற்புலிகளின் கை ஓங்கிய நிலையிலேயே இருந்துள்ளது. சிறிலங்காக் கடற்படை, தான் தக்கவைத்திருந்த கடலாதிக்கத்தை இழந்து விட்டமை தெளிவாகியது.

விமானம், புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட பின் ஒரு தெளிவான முடிவுக்கு வர வழி செய்தது.

இதன் பின்னர் புரட்டாதி 14இல், யாழல கடலில் அரசு புதிதாகத் தனது வான்வழி விநியோகத்திற்கென ரசியாவிடமிருந்து வாங்கிய இராணுவப் போக்குவரத்து விமானமான அன்ரனோவ்–32 விமானம் வீழ்ந்து நொருங்கியபோது தெளிவான முடிவுக்கு வரமுடியாத அதிகாரிகள், பல–கோணங்களில் விசாரணை–களை முடுக்கிவிட்டனர். தலைமை விமானி பாக்கியநாதன் மீதும் அதிற் பயணித்த 'பொலிஸ் சார்ஜண்ட்' தவராசா மீதும், அவர்கள் தமிழர்கள் என்பதால் சந்தேகம் எழுப்பப்பட்டது. எனினும், இது தொடர்பான அனைத்து விடயங்களும் ஒரு மாதத்திற்குள்ளாகவே முடக்கப்பட்டு மறைக்கப்பட்டுவிட்டது.

அண்மைய சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது, விமானப்படையின் விநியோக விமானங்களான சீனாவின் வை–8 ரக விமானமும் இரசியாவின் அன்ரனோவ்–32 ரக விமானமும் வீழ்ந்தமை, விமானப்படைக்கு விழுந்த மிகப் பெரிய அடி. தற்போது இந்த ரகங்களிற் தலா ஒவ்வொரு விமானமே விநியோகங்களுக்கென விமானப் படையிடம் உள்ளது. இது வான் விநியோகத்தை நெருக்கடிக்குள்ளாக்கும்.

இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை சிறிலங்காப் படைகளின் இராணுவ மேலாதிக்கத்தை அதி–கரித்து விட்டதாகவும் இது ஒரு திடீர்த் திருப்பம் எனவும் சிலர் எண்ணலாம்– வாதிடலாம். இது உண்மையா? எந்த வகையிற் சரியானது என்பது, இவ்வாண்டில் நடைபெற்ற பல சமர்களை விரிவாக ஆராய்ந்தாற் புலனாகும். இந்த ஆராய்வின் இறுதியில், சூரியக்கதிர் நடவடிக்கையை ஒப்பிடும்போது அது எந்த வகையிலான தாக்கமுடையது என்பது தெளிவாகும்.

## கடலில்

கடந்தவாண்டு சித்திரை 19இல் திருகோணமலைத் துறைமுகத்தினுள் சிறிலங்காக் கடற்படையின் ரணசுறு, சூரயா என்ற பீரங்கிக் கப்பல்களைக் கடற்கரும்புலிகள் தாக்கி அழித்தமை, கடற்புலிகளின் கடலாதிக்கம்

முக்கிய விநியோகத் தளமான காங்கேசன் துறைத் துறைமுகத்தினுள் ஆடி 16 இலும் பின் புரட்டாதியிலும் கடற்புலிகள் அடுத்தடுத்து ஊடுருவி நடத்திய தாக்குதல்கள், காங்கேசன் துறைத் துறைமுகத்தின் பாதுகாப்பு வலயத்தைக் கேள்விக்குரியதாக்கிற்று. திருமலைத் துறைமுகம், காங்கேசன்துறைத் துறைமுகம் என்பன, சிறிலங்காக் கடற்படையினரால் முற்றாகப் பாதுகாக்கப்பட முடியாத சிக்கல், பூதாகரமாகத் தெரிந்த அதேசமயம், சிறிலங்காக் கடற்படை தனது "விநியோக மார்க்கத்தின் காவலன்" எனக் கருதிய – கிப்ரு மொழியிற் 'குளவி' எனப்பொருள்படும் – இஸ்ரேலிய டோறாப் படகுகள், கடற்புலிகளின் அடுத்தடுத்த அடிகளினால் அழிக்கப்பட்டு வந்தன. 'டோறா' இல்லாது கடல்வழி விநியோகம் பாதிக்கப்படும். இது வடக்கிற் சிறிலங்காப் படைகளின் பிரசன்னத்தைப் பாதிக்கும் எனப் படை உயர்மட்டத்திற் குழப்பம் ஏற்பட்டது.

ஆவணி 30 இல் முல்லைத்தீவுக்கடலில், இரு டோறாக்கள் சிலமணிநேர இடைவெளியில் அடுத்தடுத்து அழிக்கப்பட்ட சம்பவம் குறிப்பிடத்தக்கதோர் சமராகும். கடற்புலிகளாற் தடுத்து வைக்கப்பட்ட 'ஐரிஸ்மோனா' என்ற

## வானில்

தனது கடற்படை கடலாதிக்கத்தை இழப்பது, கடல்வழி விநியோகப் பாதையைப் பாதிக்கும் என்றுணர்ந்த படை அதிகாரிகள், விமானப்படை மூலமாக வான்வழி விநியோகப் பாதையைப் பேண முடிவு செய்தனர்.

சித்திரை 29 இலும் மறுநாள் 30 ஆம் திகதி காலையிலும் அடுத்தடுத்து இரு அவ்ரோ விமானங்கள், புலிகளின் விமான எதிர்ப்புப் பிரிவினரால் சுட்டு வீழ்த்தப்பட்டமை, வான்வழி விநியோகம் கூட முழுப்பாதுகாப்பானது அல்ல

இதைவிட, புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்களின் பிரசன்னமும் பெரியளவிற் பொருட்செலவு செய்து மேலும் மேலும் இராணுவ போக்குவரத்து விமானங்களை அரசு கொள்வனவு செய்வதற்குப் பெரும் தடைக்கல்லாகவே இருக்கும். இந்த வகையில் விடுதலைப் புலிகள், வான் ஆதிக்கத்தையும் நினைத்த நேரம் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரலாம் என்பதைக் கடந்தாண்டில் விமானப்படை இழந்த ஐந்து விமானங்களின் இழப்பும் காட்டி நிற்கிறது.

தொடர்ச்சி மறுபக்கம்

**இவ்வாண்டில் நடைபெற்ற கடற்சமர்களில், கடற்புலிகளின் கை ஓங்கிய நிலையிலேயே இருந்துள்ளது. சிறிலங்காக் கடற்படை, தான் தக்கவைத்திருந்த கடலாதிக்கத்தை இழந்து விட்டமை தெளிவாகியது. தனது கடற்படை கடலாதிக்கத்தை இழப்பது, கடல்வழி விநியோகப் பாதையைப் பாதிக்கும் என்றுணர்ந்த படை அதிகாரிகள், விமானப்படை மூலமாக வான்வழி விநியோகப் பாதையைப் பேண முடிவு செய்தனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தரையுத்தத்துக்குத் தயாராகும் புலிகள்

கடந்தவாண்டின் தரைச்சமர்களைப் பார்ப்போம்.

## தரையில்

தரைச்சமர்களை இரண்டு களங்களாகப் பார்க்க முடியும். ஒன்று, கிழக்குப் போர்முனை. மற்றையது, வடக்குப் போர்முனை. கடந்தவாண்டு விடுதலைப் புலிகள் கிழக்குப் போர்முனையைத் தமக்குச் சாதகமாக்கிவிருந்தனர்.

மூடியமையும் கிழக்கில் விடுதலைப் புலிகள் தம் கட்டுப்பாட்டு வலயத்தை விரிவாக்க வழி செய்தது.

திருகோணமலை மாவட்டத்தின் திரியாய்க் காட்டுப் பகுதியில், புலிகளை ஒழிப்பதென வைகாசி 31இல் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை, எந்தப் பலனையும் தராது மோதல் கடுமையானதால் இடை நடுவில் நிறுத்தப்பட்டது. இந்நடவடிக்கைக்குத் தலைமை தாங்கிய லெப்.கேணல் தரத்திலான அதிகாரி ஒருவரையும், இராணுவத்தின் விசேட பிரிவினர் இழக்க வேண்டி வந்தது. இதைவிட ஆடி இறுதியில், வாழைச்சேனையில் மூக்கர் குளம் இராணுவ முகாம் புலிகளால் அழிக்கப்பட்டதைப் பார்வையிட்டுத் திரும்பிய கிழக்குப் பிராந்திய இராணுவ இணைப்பாளர் பிரிகேடியர் நளின் அங்கமன, கண்ணி வெடித்தாக்குதலில் மரணமடைந்தமையும் கடற்படை, இராணுவம் என்பவற்றின் உதவியுடன் பெரும் பாதுகாப்பான முகாம் எனக்கருதப்பட்ட கல்குடாப் பொலிஸ் – இராணுவக் கூட்டு முகாம் புரட்டாதி மாதம் 28இல் அழிக்கப்பட்டமையும் கிழக்கின் தரைச்சமரில், புலிகளின் கை ஓங்கியிருந்ததை எடுத்துக் காட்டியது. கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு நகர்களைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது இவ்வாண்டிலேதான்.

வடக்குத் தரைப்போர் முனையில் நடைபெற்ற சமர்களில், விடுதலைப் புலிகளும் சிறிலங்கா இராணுவமும் நீயா? நானா? எனக் கடுமையாகவே போட்டியிட்டனர் எனலாம்.

# முப்படைகளும் சந்தித்த இழப்புக்கள்

## விமானப்படை அழிப்பு

| | |
|---|---|
| அவ்ரோ விமானம் | –02 |
| புக்காரா | –01 |
| அன்ரனோவ் | –02 |
| வை–8 ரக விமானம் | –01 |
| பெல்ரக உலங்கு வானூர்தி | –02 |

### சேதம்

| | |
|---|---|
| விமானங்கள் | –02 |
| உலங்கு வானூர்தி | –01 |
| எம்.ஐ–8 உலங்கு வானூர்தி | –02 |
| ராட்சத உலங்கு வானூர்தி | –01 |

## கடற்படை அழிப்பு

| | |
|---|---|
| யுத்தக் கப்பல்கள் | –02 |
| கட்டளைக் கப்பல் | –01 |
| தரையிறங்கு கப்பல் | –01 |
| டோறா | –05 |
| சவட்டன் | –01 |

### சேதம்

| | |
|---|---|
| யுத்தக்கப்பல் | –02 |
| விநியோகக் கப்பல் | –01 |
| தரையிறங்கு கப்பல் | –01 |
| டோறா | –01 |

## தரைப்படை அழிப்பு

| | |
|---|---|
| டாங்கிகள் | –08 |
| பவள் கவசவாகனம் | –12 |
| ஏனைய இராணுவ வாகனங்கள் | –06 |

### சேதம்

| | |
|---|---|
| டாங்கிகள் | –05 |
| பவள் கவச வாகனம் | –03 |
| ஏனைய இராணுவ வாகனங்கள் | –06 |



சிறிலங்கா இழந்த எம்.ஐ. 17 வகை உலங்குவானூர்தி

சித்திரை 22 இல் மட்டக்களப்புக் கட்டுமுறிவு இராணுவ முகாம் அழிப்பும் வைகாசி 27இல் மட்டக்களப்புத் தரவைக்குளம் முகாம் அழிப்பும், இம்மாவட்டத்தில் உதிரிகளாகப் பரவலாக அமைக்கப்பட்டிருந்த பல இராணுவ முகாம்களைக் கைவிட்டுப் பெரிய இராணுவ முகாம்களை மட்டும் தற்காக்கும் நிலைக்குச் சிறிலங்கா இராணுவத்தினரைத் தள்ளின. இது புலிகளின் விரிவான சுதந்திர நகர்வுக்கு வழி செய்தது. ஆனி மாதத்தில் மட்டு–அம்பாறை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு தாக்குதல் என்ற ரீதியிற் புலிகள் இராணுவ ரோந்து அணிகள் மீது திட்டமிட்டு நடத்திய அதிரடித்தாக்குதல்கள், இம்மாவட்டத்திற் படையினரின் ரோந்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தியது. (சந்திவெளியில் கார்த்திகை 19இலும், மார்கழி 23இலும் நடைபெற்ற ரோந்து அணி மீதான தாக்குதலும் இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும்.).

கெரில்லா எதிர்ப்புப் பயிற்சி பெற்றவர்கள் என்று கூறப்படும் விசேட அதிரடிப்படையினர் மீது, வைகாசி 5 இல் புலிகள் நடத்திய அதிரடியில் ரோந்து சென்ற 19 அதிரடிப் படையினரும் பலியான சம்பவம் முதல், கடந்த மார்கழி மாதம் 5ஆம் திகதி கிழக்குத் தரைப் போர் முனையில் முதற்கரும்புலித் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம் தாக்குதல் சம்பவம் வரை, அதிரடிப்படையினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதல்களைச் சுட்டிக்காட்டலாம். எனினும் ஆவணி 29இல் அம்பிலாந்துறை அதிரடிப்படை முகாம் மீதான புலிகளின் தாக்குதல், எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை என்பதையும் இங்கு கூற முடியும்.

வடக்கில், குறிப்பாக யாழ். குடாநாட்டின் பெரும் இராணுவ நடவடிக்கைக்காகக் கிழக்கிலிருந்து பெருமளவு படையினரை – ஆட்பற்றாக்குறை காரணமாக வடக்குப் போர்முனைக்கு நகர்த்தியமையும், மற்றும் கிழக்கில் தனியாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களைப் பாதுகாப்புக் கருதி

வடக்கின் எல்லையில் அநுராதபுர மாவட்டத்தில் வைகாசி 10இல் காட்டுப்புளியங்குளம் பொலிஸ் – இராணுவ கூட்டு நிலைய அழிப்பும் ஆனி 28 இல் 'கெப்பிட்டிகொல்லாவ'வில் பொலிஸ் வாகன அணி மீதான அதிரடியும் அதன் பின் அங்கு புலிகள் நடத்திய தேடுதல் வேட்டையும் வடக்குப் போர் எல்லை நீண்டது என்பதைப் புலனாக்கியது.

ஆனி 28இல் மண்டைதீவினுள் புலிகள் புகுந்து நடத்திய வெற்றிகரத் தாக்குதல், கடந்தவாண்டு புலிகள் வடக்கில் நடத்திய பாரிய தாக்குதல்களில் ஒன்றாகக் கருதலாம். ஆடி 9இல் 'முன்னோக்கிப் பாய்தல்' எனும் பெயரிலான இராணுவ நடவடிக்கை, பலாலி முகாமிலிருந்து வலிகாமம் மேற்குப் பகுதியூடாக நடத்தப்பட்டது. எனினும், ஆடி 14இல் புலிகள் மேற்கொண்ட புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் இந்த இராணுவ நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. இரு முனையில் முன்னேறிவந்த சிறிலங்கா இராணுவம், பலாலி முகாமிற்கே இறுதியிற் பின்வாங்கிச் சென்றது. வடக்குப் போர்முனையில் அடுத்த சமராக இது கருதப்படக்கூடியது. திட்டமிடாத விநியோகம், முன்னேறிய பகுதிகளிற் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளாமை, தமக்கு வாய்ப்பற்ற பகுதிகளூடாக நகர்ந்தமை போன்ற விடயங்கள் இந்த 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கை தோல்வியில் முடிந்த காரணங்களிற் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்நிலையில், மணலாறு மாவட்டத்தில் ஆடி 28 இல் ஐந்து இராணுவ முகாம்கள் மீது புலிகள் நடாத்திய பாரிய தாக்குதல், தகவல் கசிவினாற் பின்னடைவைச் சந்தித்தது.

இதைத் தொடர்ந்து ஆவணி மாத இறுதி முதல் புரட்டாதி மாத இறுதி வரையிலான காலப்பகுதியில், ஏனைய பகுதிகளிற் தாக்குதற் சம்பவங்கள் மந்தமடையப் பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளிற் படையினர் பல மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆவணி 29இல் 'பரல்வோமர்' என்ற பெயரிலான நடவடிக்கை, புரட்டாதி 13இல் கைகுலுக்கல் 1, 2 என்ற இராணுவ நடவடிக்கைகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

யாழ்ப்பாணம் மீதான பாரிய படையெடுப்பிற்காகப் பலாலியிற் குவிக்கப்பட்ட படையினருக்கு மேலதிகப் பயிற்சி வழங்கவும், புதிதாகத் தருவிக்கப்பட்ட போர்த் தளபாடங்களின் களச்செயற்பாட்டைப் பரிசீலிக்கவும், பாரிய ஓர் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க முன் பலாலியைச் சூழ ஒரு பின்புலத்தளத்தை உறுதியாக அமைக்கவும் இந்த மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பயன்பட்டன.

என அரசினால் அறிவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மீதான 'ரிவிரச' என்ற சிங்களப் பெயரிலான சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஐப்பசி 17இல் ஆரம்பிக்கப்பட்டது. 50 நாட்களாகப் புலிகளின் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைப் பறிகொடுத்து மூவாயிரம் படையினரைக் காயப்படுத்தி மார்கழி மாதம் 5ஆம் திகதி யாழ்நகரை ஆக்கிரமித்த சிறிலங்காப் படைகள், அங்கு தமது கொடியை ஏற்றினர். (இத்தாக்குதல் ஆரம்பித்து மூன்று நாட்களில் ஐப்பசி 20இல் கொலன்னாவ, உறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் மீதான தாக்குதலும் தொடர்ந்து படையினர் மீது இப்பகுதியில் நடந்த தாக்குதல்களும் இங்கு குறிப்பிட வேண்டிய சம்பவங்களாகின்றன.) இந்தச்



சிறிலங்கா இழந்த அன்ரனோவ் - 32

ஐப்பசி முதலாம் திகதி ஞாயிறு காலை, வலிகிழக்கை முதற்கட்டமாக ஆக்கிரமிக்க 'இடிமுழக்கம்' எனும் இராணுவ நடவடிக்கையைச் சிறிலங்காப் படையினர் ஆரம்பித்து அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளை ஆக்கிரமித்தனர். இதற்கெதிராகப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் எதிர்பார்த்த பலனைத்தராத நிலையில், இந்த இடிமுழக்க நடவடிக்கை ஐப்பசி 3இல் முடிவடைந்தது.

## சூரியக்கதிர்

இத்தகைய சமர் நிலைமைகளின் பின்னணியிலேயே, "சமாதானத்திற்கான போர்"

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை, உண்மையில் சிறிலங்காப் படைகளுக்கு இராணுவ மேலாதிக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்ததா? புலிகளுக்கு இது பெரும் பின்னடைவா? என்ற கேள்விகள் இந்நேரம் எழுவது தவிர்க்க முடியாதது. ஆனால், இவற்றுக்கு இல்லை என்பதே தெளிவான பதிலாக இருக்கும். இந்த நடவடிக்கை என்ன நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்பதைப் பார்த்தால், இது புலப்படும். யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பை ஆரம்பித்துவிட்டால், புலிகள் தமது ஆட்பலத்தை யாழ் நகரைக் காப்பதற்காக

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடியலுக்காக.....

"சூரியக்கதிரப் போர்க்களத்திற் பிரதீபனுக்குக் காலிற்காயம். மட்டுவிலில் இருக்கிற மெடிக்ஸ் பேசில ஆள் நிக்கிறார்"

பொழுதுசாய்ந்து இருள் கவிழ்ந்துவிட்ட வேளையிற் செய்தி வந்து கிடைத்தது.

அவனது முகத்தை ஒருதடவையாவது பார்த்துவிட வேணும் என்று, ஐந்து மாதங்களாகத் தவங்கிடந்த தாயாருக்கு இந்தச் செய்தி கிடைத்தபோது, கால்களுக்குள் புதுவேகம் புகுந்தது. நாவற்குழிப் பாலத்தைச் சனநெரிசலுக்கும் மத்தியில் நடந்து கடந்து வந்த களைப்பு நொடிப்பொழுதில் மறைந்து போனது. கச்சான் அல்வாப் பொதிகள் சிலவற்றையும், எள்ளுருண்டைகள் சிலவற்றையும் சேகரித்துக் கொண்டவள் பயணத்திற்குத் தயாராகிவிட்டாள். ஒரு சில நிமிடங்களுக்குள் அவளது செயல்களையும், செயற்படும் வேகத்தையும் அவதானித்த நான், மௌனமாகவே என்னைப் பயணத்திற்குத் தயார்ப்படுத்திக் கொண்டேன்.

உடுப்பிட்டியிலிருந்து மட்டுவிலுக்குப் பயணம்....... மன வேகமா, சைக்கிளின் வேகமா கூட என்பதை மதிப்பிடுவதற்கு முன்பாகப் பாசறையின் வாசலுக்கு நாம் வந்து விட்டிருந்தோம்.

எனது சைக்கிளின் கரியலிலிருந்து– பிரதீபனின் தாயான எனது அக்கா இறங்கிக்கொள்வதற்கு இடையே, பிரதீபனின் அக்காவான தர்மினி சைக்கிளை நிறுத்திப் பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டுவந்தாள்.

இருவருமாகப் பாசறைக்குள் புக, நான் சைக்கிளை ஓரமாக நிறுத்திப் பூட்டினேன்.

படர்ந்திருந்த வேப்பமரமொன்றின் கீழிருந்த வாங்கில் பிரதீபன் எங்களை உட்காரவைத்தான். தலையணைகளுக்கு மேலே சில்வர் சாப்பாட்டுக் கோப்பைகளை வைத்து மத்தளம் அடிப்பதிலும், தாயக மீட்புக்கான எழுச்சிப்பாடல்களை இசைப்பதிலும் போராளிகள் ஈடுபட்டிருந்தனர். அவர்களிற் பலருக்கும் உடலில் ஏதோ ஒரு பாகத்தில் மருந்துகள் கட்டப்பட்டிருந்தது தெளிவாகவே தெரிந்தது. உடல் நோவுகளை மறைக்கத்தான் போராளிகள் குதூகலிக்கின்றனரோ என மனம் எண்ணிக்கொண்டது.

சி.சிவகுமார்

வார்த்தைகள் தொடர்ந்தன. ஐந்து மாதத்தில ஒரு கடிதமாவது போட்டியாடா" அம்மாவின் குற்றச்சாட்டு அடுத்துப் பிறந்தது.

"தலைவராணை....... இரண்டு கடிதம் அனுப்பினனான். நீங்கள் இடம் மாறிக்கொண்டு இருந்தபடியா உங்களுக்குக் கிடைக்கேல்லப் போல." அவன் பதில் கூறினான்.

"அப்பு....... எங்களுக்கெண்டு ஒரு உதவியுமில்ல. அண்டைக்கு அவதிப்பட்டு வரேக்கையும் சன நெரிசலுக்குள்ளை மயங்கிப்போனன். கொப்பாவுக்கும் முட்டு....... இழுப்பு....... நீ....... சொல்லிப்போட்டு வாவன். கடைசியாய்க் கேக்கிறன்......." அம்மாவின் வற்புறுத்தல் கெஞ்சலாகியது.

"நீங்கள் என்னம்மா மோட்டுக்கதை கதைக்கிறியள். இயக்கத்திலை சேரப் பிந்திப்போச்சுதெண்டு நாங்கள் கவலைப்படுறம். எத்தினியோ பேர் தாங்களாகவே பிள்ளையளைக் கூட்டிக்கொண்டுவந்து இயக்கத்தில சேர்க்கினம். வயது, தொழில், பால் வேறுபாடில்லாமற் சனமெல்லாம் இயக்கத்தில சேருகிற நேரத்தில, விட்டிட்டுவா என்று சொல்லுறியள். ஒரு கை இல்லாத பெடியள் கூட அங்கை நிண்டு சண்டை பிடிக்கிறாங்கள். கையை....... காலை இழந்த போராளியள்கூட அடிபாட்டுக்குப்போக ஆசைப்படுறான்கள். இந்த நிலைமையில நான் மட்டும் என்னண்டு வாறது?" அவனது வார்த்தைகளில் ஆவேசம்.

இவன் நல்லாய் ஊறிப்போட்டான். இவனை இனித்திசை திருப்பேலாது போல என அவள் தனக்குள் எண்ணிக்கொண்டாள் போலும்.

"சுகப்பட்டா திரும்பவும் அடிபாட்டுக்குப் போவியோ?....... தனது கவலைகளை வார்த்தைகளாக்கினாள்.

"ஓமோம் எங்களை வரச்சொல்லி இப்ப வான் வந்தாலும் ஏறிப்போடுவம்." அவனது பதிலில் எந்தத் தயக்கமும் இல்லை.

"உங்களுக்கு நான்மட்டுமே பிள்ளை....... அண்ணன், தம்பி, அக்கா எல்லாம் இருக்கினம்தானே. ஒவ்வொரு போராளிக்கும் குடும்ப பாசம் இருக்கு....... ஆனா நாட்டுப் பாசம் அதைவிட அதிகமாய் இருக்கு." அவனது வார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருந்தது.

**அவனது முகத்தை ஒரு தடவையாவது பார்த்துவிட வேணும் என்று, ஐந்து மாதங்களாகத் தவங்கிடந்த தாயாருக்கு இந்தச் செய்தி கிடைத்தபோது, கால்களுக்குள் புதுவேகம் புகுந்தது. நாவற்குழிப் பாலத்தைச் சனநெரிசலுக்கும் மத்தியில் நடந்து கடந்து வந்த களைப்பு நொடிப்பொழுதில் மறைந்து போனது. கச்சான் அல்வாப் பொதிகள் சிலவற்றையும், எள்ளுருண்டைகள் சிலவற்றையும் சேகரித்துக் கொண்டவள் பயணத்திற்குத் தயாராகிவிட்டாள்.**

அமாவாசையின் இருட்டைப் போக்கும் முயற்சியிற் சில விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அந்தப் போராளிகளையும் சிறு விளக்குகளையும் மனத்தராசு எடைபோட்டுக்கொண்டது.

"இந்த இருட்டுக்கை ஏன் அம்மா வந்தனியள்....... காலமை வந்திருக்கலாமே" பிரதீபனின் முகத்தில் ஆதங்கம். அவள் அவனது முகத்தையே உற்றுப்பார்த்தாள். வார்த்தைகள் எதுவும் வராமல் மௌனம் கனத்தது.

"ஏனம்மா பேசாமல் இருக்கிறியள்....... என்னில கோபமே" பிரதீபனின் சொற்களுக்குள் வேதனையின் கீற்றுக்கள். கஷ்டப்பட்டுப் படிக்கவைத்ததைக் குழப்பிவிட்டதாக நினைத்து அம்மா வேதனைப்படுகிறாவோ....... அல்லது சந்திக்கேலாமற் தேடித்திரிஞ்சதை நினைச்சுக் கவலைப்படுகிறாவோ....... என்ற விதத்தில் எண்ண அலைகள் எழும்பியிருந்தன.

"கொண்ணண் கடிதம் போட்டிருக்கிறான். உன்னைப்பற்றித்தான் கவலையாய்க் கிடக்காம். வேலையை விட்டிட்டுக் கொழும்புக்கு வரப்போறானாம்....... கொப்பருக்கும் ஒரே முட்டுவருத்தம்....... நாங்கள் எல்லாம் சாகப்போறம்....... நீ கல்லுப்போல உங்கையே இரு....... ஐந்து மாதமாய் எங்களை மறந்தனிதானே......." மடை திறந்த வெள்ளம்போல் அம்மாவின் உதடுகளிலிருந்து சொற்கள் உடைப்பு எடுத்தன.

"சொல்லிப்போட்டு வாவன்ரா எங்களோடை." முத்தாரமாய் முத்தாய்ப்பு வைத்தாள் அவள்.

"ஒவ்வொரு கஷ்டம் வரேக்கையும் எனக்கு நீதானே ஆறுதல் சொல்லுறனி....... இட்டிலி....... தோசை....... நூடில்ஸ்....... எண்டு வகைவகையாய்....... கேட்கக் கேட்க ஆசையோடு செய்து தந்தன். அந்தப் பாசத்தைக்கூட மறந்திட்டியோடா". அக்காவின்

"சரி நேரமாகுது, இந்தக் கதையளை விட்டிட்டுச் சுக துக்கங்களைக் கதையுங்கோவன்" இடைமறித்து நான் ஆலோசனை கூறினேன்.

"குட்டிமாமா நீங்கள் போராட்டத்தின்ர வரலாறு, தேவையள் பற்றி பேப்பரில எழுதின கவிதையள் படிக்கிறனான். நீங்கள் இவைக்கும் புத்தி சொல்லுங்கோவன்" அவன் வேண்டுகோள் விடுத்தான்.

"ஓ....... ஓ....... அவருக்கும் வளர்ந்த பிள்ளையள் இருந்து உப்பிடிப் போனாத்தான் தெரியும். தலையிடியும் தனக்குவந்தாற்தான் தெரியும்." அம்மா சீறினாள்.

"தீபன் உன்ர இயக்கப்பேர் என்னெண்டு சொல்லன்" அக்கா கேட்டாள்.

"எரியேந்தி"

"உதென்ன அரியண்டப் பேர்" அவள் அபிப்பிராயம் தெரிவித்தாள்.

"அரியண்டப் பெயரோ....... தூய தமிழ்ப் பெயர்....... தீயை ஏந்திச்செல்பவன் என்னும் பொருளுடையது. பொறிகக்கும் விழியோடு ஒவ்வொருவரும் போர்க்களம் போகவேண்டிய நேரமிது" அவன் மேலும் குறிப்பிட்டான்.

"நாங்கள் எல்லாம் வந்து என்னவாம் செய்யிறது?" அம்மா கேள்வியெழுப்பினாள்.

"காயப்பட்ட போராளியளையும், மற்றவையையும் பராமரிக்கலாம்....... அக்கா வாறியே மெடிக்சில சேர்த்துவிடுறன்......."

எரியேந்தியின் பதிலுக்கு அவர்கள் மௌனமாயினர். இதே மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்பதை, வார்த்தைகளைக் காவிச்சென்று பரிமாறிய காற்று, உறுதிப்படுத்திக்கொண்டது. ■

# பாசறையில் இருந்து ஓர் அழைப்பு

–யாழ். இந்துக்கல்லூரி உயிரியல் மாணவனான இவர், தாயக விடுதலை என்னும் இலட்சியத் தாகம் உந்த அண்மையிற் போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொண்டவர்.

தாட்சன்

அன்னையே!
உன்னிடம் ஒரு வார்த்தை
சொல்லாத......
என் முடிவிற்காய்......முதலில்
என்னை மன்னிக்க,
நீ வைத்திருக்கும் பாசம்
அறிவேன்.
எனினும் அன்னையே! தந்தையே!
உற்றுக்கேளுங்கள்......
தூரத்திலிருந்து ஏவிய
எறிகணை
அருகில் விழுந்த
அதிர்வைக் கேளுங்கள்.
என் உடன் பிறப்புக்களே!
பேயிருக்கும் வீடென,
நாம் குடியிருந்த கோயில்
ஆகிவிட்டதே!
கிளாலிக் கடலில் உலாவரும்
அசுரர்
திட்டம் தீட்டித் தமிழரை வெட்ட
இருப்பதைக் கேளுங்கள்.
தென் தமிழீழத் திசைகளிலெல்லாம்
வன்முறை என்பது வாழ்முறை
யானது.
வீடுகள் எரித்தல்,
விலங்கு போட்டடித்தல்,
பாலியல் வன்முறை,
பலப்பல வதைகள்,
காடயர் கற்பிக்கும் கட்டாய பாடம்.
இனியும் உங்கள் மகன், சகோதரன்
தூங்கி இருக்கவா? நாம் இனியும்
அலைந்து திரிவதா? அல்லற்படு
வதா?
துணிதல் அற்று நாம் இன்னும்
தூங்கவா?
போராடும் புலிகளைப்பாருங்கள்.
அவர்களும் உங்கள் மகன்கள் –
சகோதரன்கள்தானே......!
சின்னப்புலிகள் கால்களிற் கூட,
திசைகள் யாவும் பணிந்து
நிற்கின்றன.
தலைவன் என்ற தாரக மந்திரம்,
தலைமுறை ஒன்றின் சத்திய
வேதம்
வெல்லும் திசையிற் பயணம்
செய்கிறேன்.
பிரபாகரன் வழிகாட்டியான பின்பும்
தயக்கமேது? தவிப்பேது?
பாதை ஒன்று,
பயணமும் ஒன்று,
தலைவன் ஒருவன்
சத்தியம் வெல்லும்,
மகனே புறப்படு. வெற்றியுடன்
திரும்பிடு
என வாழ்த்துப் பாடுங்கள்.
அவன் வழி சரியெனப் பாட்டிசை
யுங்கள்,
என் உடன் பிறப்புக்களே!
உங்கள் கல்வி மீண்டும் ஒளிர,
உங்கள் வாழ்வு விடிய நான் ஒரு
புலியானேன்.
எதிரி முகாம் அருகே
எப்போதும் காவல் நிற்கும்
என்வயது இளையவர்கள்
நினைவெல்லாம் என் மனதை
வாட்டிடுதே
அம்மா தமிழ்த் தாயே....?
என் நிலத்திற் கால்பதித்துத் தரை
தொட்டு முத்தமிட நான்
விளைந்தேன் உடன் புலியாய்.
என் சக இளைஞர்களே! யுவதி
களே! எழுந்திடுவீர் புலியென
விடிந்திடுமே தமிழீழம். ■

# வாத்தியார் வாய்மொழி



## வென்றிலன் என்ற போதும்...

யாழ்ப்பாணத்தின் பனை வடலிகளுக்கு மேலாக, வாளேந்திய சிங்கக்கொடி பறக்கும் காட்சிக்காகச் சிங்களம் கண்களை அகலத் திறந்திருந்தது. பட்டாசுகளின் வெடியோசைக்காகக் காதுகளைத் தீட்டியிருந்தது. ஊற்றெடுக்கும் உவகை கரைக்கு அடங்காமல் கட்டுமீறிப் போகும் என்பதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வுகள் ஆங்காங்கே வெளிப்பட்டன. "வீடு வாசல்களையும். சொத்துச் சுகங்களையும் இழந்துள்ள தமிழ் மக்களின் அவலம்: உறவுகளைப் பிரிந்தும், உற்றாரை இழந்தும் தமிழர் நெஞ்சங்களிற் பொங்கும் சோகம். இருப்பைக்கூட இழந்து பரிதவிக்கும் ஏக்கம்" இவற்றின் அத்திவாரத்திற்றான் சிங்களத்தில் எதிர்பார்த்த அந்தச் செய்தி எழுதப்பட்டது.

ஆனால், யாழ்ப்பாண மண்ணைப் படையினர் பறித்தெடுக்கலாம். தமிழர் மனங்களில் இடம்பிடித்துவிடக் கொழும்பு ஆட்சியாளர்களுக்கு முடியாது என்பது, மாபெரும் இடப்பெயர்வு மூலம் வரலாற்றின் பக்கங்களிற் பதியப்பட்டு விட்டது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட முனை மங்கப் போவதில்லை என்பது தெளிவு. எனவே சிங்களம் எதிர்பார்க்கும் வெற்றிக்கு ஒரு நீர்க்குமிழியின் வாழ்வுதான் வாய்க்கும். தமிழர்களின் அவல வாழ்வு என்ற அத்திவாரத்தில் எழுப்பப்படும் சிங்களத்தின் கோட்டை ஆட்டம் காணும். யாழ்ப்பாணத்திற் புலிக்கொடி நிரந்தரமாய்ப் பறக்கிறது என்பது வரலாற்றில் பொன்வரிகளால் பொறிக்கப்படத்தான் போகிறது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பயம்

"என்ன மணியண்ணை 'பேப்பர்' பார்த்து நீயே சிரிக்கின்றாய் எனக்கும் சொல்லன் கேட்பம்"

"இப்ப 'பேப்பர்'களிலை வாற அரச செய்திகளிலை வாற நகைச்சுவை வேறெதிலையுமில்லைத் தம்பி"

"அப்படியென்ன சிரிப்புக்கிடமான செய்தி 'பேப்பரிலை' கிடக்காம்?"

"யாழ்ப்பாணத்திலை மாங்காய்கள் பழுத்துத் தொங்குகின்றனவாம்"

"உதுவும் ஒரு சேதியே..... உதிலையென்ன பகிடி கிடக்கு?"

"அதைப் படையினர் பிடுங்கப் பயப்படுகின்றார்களாம்"

"ஏனாம்.....?"

"அதுக்குள்ளை யொனி வெடி இருக்குமெண்ட பயமாம்"

"ஓகோ.....! அப்படியே சங்கதி. மற்றதெல்லாம் அள்ளியிருப்பினம். மரத்துக்குக் கிட்டப்போகத்தான் பயம் போலை...."

"ஓமோம் இந்தியப்படை பட்டபாடு இவைக்கு நல்லாத் தெரியும் தானே....."

"கால் வைச்ச இடத்திலை கண்ணிவெடி, கைவச்ச இடத்தில கனிவெடி' – ரத்வத்தயின்ரை படைதான் என்ன செய்யிறதாம். அதோட இன்னொரு சேதியுமிருக்கு. 'யாழ்ப்பாணத்தில் முந்தி இருந்த 37 ஆயிரம் சிங்களவரும் விரும்பினால் அங்கை குடியேற வசதி செய்வார்களாம்.....' இதுவும் அநுருத்த மாமாதான் சொல்லியிருக்கிறார்.

"இடம்பெயர்ந்த எங்களை அழைச்சுப் பார்த்து அலுத்துப் போனவர். இப்ப அவையடை ஆக்களுக்கு ஆசைகாட்டி வரவேற்கிறார்."

"உதுக்குப் பின்னாலை ஏதோ மர்மமிருக்கு– உவன் யாழ்ப்பாணத்திலையும் சிங்களக் குடியேற்றத்திற்கு திட்டமிடுகிறான் போலை"

"இருக்கும் இருக்கும்..... எப்பிடி–யெண்டாலும் ஒண்டு மட்டும் அவையளுக்குத் தெரியும்."

"என்னது?"

"உந்தப்பகிடி அறிக்கைகள், எங்கடை சனத்தைப் பாதிக்காது எண்டதுதான் அது" ■

# மண்ணின் குரல்கள்

செந்தூரன்

## பேச்சுவார்த்தை

"என்னப்பா, சண்முகம் 'லங்காபுவத்' செய்திக்குக் காதை நீட்டிக்கொண்டிருக்கிறாய்: என்னவாம் சொல்லுகினம். யாழ்ப்பாணத்திலை பார்லிமேந்து கூட்டப் போகினமாமே?"

உனக்கு எப்பவும் கிண்டல்தான்........ சந்திரிகா அம்மையார் மீண்டும் பேச்சுவார்த்தையில்தான் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் எண்டு சொல்லுறா— அதுதான்—

"ஓமோம்........ சாத்தான் மீண்டும் வேதம் ஓதப்போகுதாமே........! என்ன செய்தாலும் எங்கடை சனத்துக்கு இந்தப் பேச்சுவார்த்தை நப்பாசை மட்டும் போகாது........"

"அவதானே சொல்லுறா சண்டையில பிரச்சனை தீராதென்று........ பிறகென்ன?"

சண்டை பிடிச்சுக்கொண்டே அரசியல் தீர்வுபற்றிக் கூறுவா...... குண்டு போட்ட சத்தத்துக்கிடையே பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவா........ உதை நம்புற சனங்களைத்தான் செருப்பாலை அடிக்க வேணும்........

"பின்னை எப்பதான், எப்படித்தான் பிரச்சனை தீருகிறதாம்?"

நாங்க எத்தினை தடவை பேசிப்பார்த்திட்டம். ஏதாவது நடந்ததே........ ஒண்டுமில்லை........ கொஞ்சக் கொஞ்சக்காலம் இடைக்கிடை எங்கடை சனம் அரசின் மயக்கும் பேச்சில் கனவு கண்டதுதான் மிச்சம்........ எண்டைக்காவது எங்களுக்கான உறுதியான தீர்வை, அரசு முன்வைத்திருக்கிறதே........? எல்லாம் வாய்ப்பந்தல்தான்........ உதுக்கு மயங்கிற காலம் மலையேறிப்போச்சு........ யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, சிங்களக்கொடியை ஏற்றிவிட்டுப் பயங்கரவாதிகள் என்று வினாடிக்குநூறு தடவை, எங்கடை பிள்ளையளைத் திட்டிக்கொண்டு சீரழிக்கப்பட்ட எங்கடை மண்ணில், குண்டு வீச்சில் சிதறிய எம் மக்களின் இரத் தக்கறை படிந்த மண்ணிற் கால் வைத்துக்கொண்டு பேசுவோம் வா என்பவளை, இனியும் எவனும் நம்பினால் அவன் தமிழனா இருக்க முடியாது........

"ஏன் மணியம் கொதிக்கிறாய். எனக்கென்ன இது தெரியாத விடயமே. சும்மா உன்னைக் கிண்டிப்பாத்தன்........ "தமிழன்ர தோலிலை செருப்புத் தைச்சுப்போட்டாற்தான் நிம்மதி" என்று சொன்ன வெலிமடை இராஜரத்தினாவின் ஆட்களை எனக்குத் தெரியாதே. ஏன் 58 இலையும், 77 இலையும் கொழும்பிலை வாங்கிய அடியையும் கப்பலில் காங்கேசன்துறை வந்து இறங்கியதையும் நான் மறப்பனே........! உனக்கு இன்னொன்று தெரியுமே........!. நேற்றைக்கு என்ர மகனும் இயக்கத்தில சேர்ந்திட்டான் எல்லே........!

"அப்படியே சங்கதி........ அதுதானே பாத்தன் பக்கத்து வீட்டுக்காரரோடை ஏற்பட்ட பத்து ரூபா பிரச்சனையிலை பத்து வருசமா அவரோட பேச்சுவார்த்தை இல்லாம இருக்கிற நீ, சிங்கள அரசின் பேச்சுவார்த்தை மயக்கத்திலை கிறங்கிப்போவியோ........?

# பட்டிடும் பாட்டைப் பாத்தியா முருகா

திக்கற்றுத் துயருற்றுத்
தேய்ந்த யாழ் மக்கள்
நிக்கவே கதியற்று
நீண்ட செல் வீச்சால்
பக்கத்து ஊருக்குப்
பதறிப் பாய்ந்தோடி
துக்கத்தில் துடித்துத்
தூக்கமேயற்று
நெட்ட நெடுவீதிகள்
நிரப்பியே யிருக்கையில்
நெட்ட நெடுமழை
நீங்காது கொட்டுது
பட்ட துயரோடு
பரிதாபம் மீண்டும்
துட்டரின் குண்டுகள்
தாவித் துரத்துது
ஊட்டி, வலம் வந்து
உன்னையே கும்பிட்டோர்
பட்டிடும் பாட்டை
பாத்தியா முருகா! ■

செ. நாகேந்திரன்

# கதிர்காமரின் ஞானோதயம்



"எங்கடை கதிர்காமு அண்ணாற்றைக் கதையைக் கேட்டியே?"

"ஆர்— குடிகாரக் கதிர்காமுவே—. என்ன சொல்லுறார் வெறிக் குட்டியர்—?

"உனக்கு விசர்...... நான் எங்கடை மானிப்பாய் மத்திய கதிர்காமற்றைக் கதையைப்பற்றி எல்லோ சொல்லுறன்"

"என்னவாம் புதுசா என்ன அவிட்டுவிட்டிருக்கிறார்?

டெல்லியில போய் நிண்டு கொண்டு, "தமிழரால் வெற்றிகரமாகப் போரிட முடியும் என்பதைத் தலைவர் பிரபாகரன் நிரூபித்துக் காட்டியுள்ளார்: அவர் தனது இலக்கை அடைந்துள்ளார். தமிழர்களின் வரலாற்றில் அவருக்குத் தனியிடமுண்டு" என்றெல்லாம் சொல்லியிருக்கார் அம்மான்—

"எட என்னடா அதிசயம்? எனக்குக் கேட்கத் தலையைச் சுத்துது. என்ன திடீர் ஞானோதயம் அவருக்கு வந்திட்டுது?"

"உவையிட ஞானோதயம்' எல்லாம் தெளிவிலே வாறதில்லை. குழப்பத்திலைதான் வாறது. இப்ப அம்மையார் ஆட்சி நல்லாக் குழம்பிப் போயெல்லே இயங்குது.

"எண்டாலும்... ஒண்டை ஒப்புக் கொண்டிட்டார் பார். அது பெரிய விசயம். தமிழர் போரிலை வெண்டு கொண்டு வருகினம். அவை இலக்கை அடையும் தறுவாயில் இருக்கினம் எண்டதை இந்தியாவில் வைச்சுச் சொல்லிட்டாரெல்லே"

"உவர் சொல்லாட்டிலும் உலகம் பூராவும் இதை உணர்ந்து கொண்டு வருகிது. உதை உவர் உள்ளூரிலை வைச்சுச் சொன்னால் நல்லாயிருந்திருக்கும்.

"அவர் வெளியுறவு அமைச்சரெல்லே அதுதான் வெளிநாட்டிலை வைச்சுச் சொல்லியிருக்கார்."

"எங்கட பிள்ளைகள் இரத்தம் சிந்தி உயிர்த் தியாகம் செய்து போராடி எங்கடை மண்ணின்ற விடுதலைக்காகக் கஸ்டப்படுறத்துக்குப் பலன் கிடைக்காமலே போயிடும்."

"அதில்லை....... புலிகள் தமிழற்றை வீரத்தை உலகளாவிய முறையிலை நிரூபித்துத் தமிழினத்துக்குப் புகழ் தேடித்தருகையில், கதிர்காமர் போன்றவர்கள் கால்பிடிப்பதிலும், பதவிக்காக வால் பிடிப்பதிலும் இனத்துரோகிகளாகச் செயற்படுவதிலும்— தமிழர்களின் வரலாற்றில் தனியிடம் பெறத்தான் போகிறார்கள்—"

"சரியாய்ச் சொன்னாய். பண்டாரவன்னியன் காலத்தில் ஒரு காக்கை வன்னியன்....... பிரபாகரன் காலத்தில் ஒரு கதிர்காமர். இப்படித்தான் வரலாறு பதியப்போகிறது." ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறுங்கதைகள்

## துணை

**பிரகலாத ஹேமந்த்**

அப்பு தும்மினார்.

தடிமன் தாங்க முடியவில்லை.

நான்கு வீடுகளைக் கட்டிப் பிள்ளைகளுக்குக் கொடுத்த மனுசன். "ஆற்றையும் வீட்டைபோய் ஏன் ஆரையும் கஸ்ரப்படுத்துவான்" என்று ஒரு இடமும் போக இவர் விரும்பவில்லை.

இப்போது மூன்று நாட்களாகப் பஸ்ராண்டில் வாழ்க்கை.

கால் வைக்க முடியாத அளவுக்குச் சனம். குழந்தைகள், பெண்கள், அப்புவைப் போல வயது போனவர்கள்.

மழை கொட்டிக் கொண்டிருந்தது. போர்வை இல்லை. சாரல் அடித்தது. ஒரு துணியை ஒதுக்குக்குக் கட்டியிருந்தனர். அது நனைந்து ஊறிவிட்டது.

குழந்தைகள் அனுங்கத் தொடங்கின. அப்பு எழுந்து குந்திக் கொண்டார். சனங்களிற் பலரும் குந்திக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

"58ல் ஓடிவந்தம். பிறகு திரும்பிப் போய் 77ல் ஓடிவந்தம். பிறகு 83லும் ஓட்டந்தான். அதெல்லாம் சிங்கள இடத்தில இருந்து ஓடி வந்தது. இப்ப எங்கட தமிழ் நிலத்தில இருந்து, எங்கட பூர்வீக மண்ணில இருந்து ஓடவேண்டி வந்திருக்கு!"

இனவாதத்தின் வளர்ச்சி அப்புவுக்குக் கண்முன் தாண்டவமாடியது.

கண்ணீரை முந்தியபடி ஆத்திரம் பொங்கியது.

"இருக்கட்டும். என்ர பேரன் உந்தச் சிங்களவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிப்பான்."

இயக்கத்தில் இருக்கும் பேரனை அப்பு நினைத்துக் கொண்டார். மெல்லிய சிரிப்பு வந்தது.

"எத்தினை கஸ்ரம் வந்தாலும் எல்லாம் எத்தினை நாளைக்கு? மனிசன் ஒரு நாளும் சலிக்கப்படாது"

தனக்குள் சொல்லியபடி தோள்த்துண்டை எடுத்து அருகிற் கிடந்த குழந்தையைப் போர்த்தினார். ■

## நெகிழ்ச்சி

**மகேந்திரவர்மன்**

தேடிக் களைத்து விட்டான். புதிய இடம். எவரைப்பார்த்தாலும் புதிய புதிய ஆட்கள். எல்லோரும் இடம் பெயர்ந்து வந்தவர்கள். யார் ஊர்க்காரர் என்று கண்டு பிடிப்பதே பெரிய காரியம். சொன்ன குறிப்பை ஒழுங்காகக் கேட்டிருக்கலாம். சொன்னவருக்கும் சரியாக இடம் தெரியாது. இந்த நிலைமையில் எப்படிச் சரியாகக் கேட்டிருக்க முடியும்? இன்னும் ஒருக்கால் முயற்சிக்கலாம், என்று நினைத்த படி சைக்கிளை மிதித்தான். இரண்டாவது வளைவைக் கடந்து வலப்பக்கம் திரும்பிய போது, கண்டு விட்டான்.

முற்றத்தில்–மரத்தின்கீழ்–அவர்கள் கூட்டமாக இருந்தார்கள். கலா தான் முதலில் தெரிந்தாள்.

சைக்கிளை நிறுத்தினான். மறைப்பில்லாத கதியால் வேலிக்குள்ளால் அவனைக் கண்டு விட்டார்கள்.

கலா வந்து அழைத்துச் சென்றாள்.

முதலில் இருந்ததைவிடக் கொஞ்சம் மெலிந்திருந்தாள். அவளைவிடத் தங்கை இன்னும் மெலிந்திருந்தாள்.

குடிசை வீடு, மிகவும் சிறியதாய்——

"இதில் இருங்கோ உடுப்பு ஊத்தையாய்ப் போயிடும். கதிரையில் இருந்த காலமெல்லாம் போயிட்டுது" என்ற படி உரப்பை ஒன்றை எடுத்து விரித்தாள் கலாவின் தங்கை.

அவன் ஒன்றும் பேசவில்லை. பேச முடியாமலிருந்தது.

"என்ன பேசாமலிருக்கிறியள்" என்றாள் கலா.

"எப்படி இருந்ததுகள்? சிறிய வீடென்றாலும் அழகான வீடு. வளவு நிறையப் பூமரங்களும், பழமரங்களும். இப்ப ஒன்றும் இல்லாமல் இந்த கொட்டில்....." அவனுக்கு அழுகை வந்து விடும் போலிருந்தது.

" நீங்கள் எங்கையிருக்கிறியள்? " கலாவின் தகப்பன் கேட்டார்.

"தெரிஞ்ச ஒருதற்ற வீட்டில இருக்கிறோம். நாங்கள் அஞ்சு குடும்பம் ஒன்றாக இருக்கிறோம். பிரச்சனை இல்லை. ஆனால் நீங்கள் ஊரில எப்படி இருந்தனீங்கள ண்ணை—— இப்ப இஞ்ச——

"தம்பி எனக்கு ஒண்டைப்பற்றியும் கவலையில்லை. வீணாக இவ்வளவு நாளும் காசைச் செலவழிச்சிருக்கிறம். வெறுமனே பூக்கண்டுகள் நட்டதும், சோக்கேஸ் நிறையக் கண்ட நிண்ட சாமான்களையெல்லாம் குவிச்சதும்தான் மிச்சம். அதையெல்லாம் இயக்கத்துக்குக் கொடுத்திருந்தால் இப்ப எவ்வளவு பிரயோசனமாக இருந்திருக்கும். எனக்கு அதுதான் கவலை..... கலா தேனீர் கொண்டு வந்தாள். ஓயாமற் கதைத்து அரட்டை அடிக்கும் பெண். இப்போது பேச்சில்லை. ஆழ்ந்த மௌனம். அவனாலும் எதையும் பேச முடியவில்லை.

கலாவின் தகப்பன் இன்னும் சொல்லிக்கொண்டிருந்தார். என்றுமில்லாதவாறு நீண்ட நேரமாக அவர் போராட்டம் பற்றியும், கடந்தகால வாழ்க்கை பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்.

ஒரு இடைவெளி பார்த்து இவன் விடை பெற்றுப் புறப்பட்டான்.

இரண்டு நாளின் பிறகு அறிந்தான், கலா போராட்டத்துக்காக இயக்கத்தில் இணைந்து விட்டாள் என்று.

கலாவின் ஆழ்ந்த மௌனத்தின் அர்த்தம் அப்போதுதான் புரிந்தது. கலா குடும்பத்தின் மாற்றம் அவனுள் புதிய எண்ணங்களைக் கிளர்த்தியது. ■

## ஆணை

**வளவை வளவன்**

எறிகணைத் தாக்குதலில் மூன்று பேர் ஒரே இடத்திற் துண்டுதுண்டாகிச் சிதறிப் பலியாகினர். ஊரெல்லாம் கூடி அழுதது.....

வீதியெங்கும் தோரணமும், கறுப்புக் கொடியும், தாளாத துயரை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

மூன்று பாடைகள் ஒன்றாகச் சுடுகாடு நோக்கிப் பயணமாகின. புகை வண்டித் தொடர்போல மக்கள்சேனை.

சுடுகாட்டில் மூன்று சடலங்களும் தீமிடப்பட்டன.

எல்லோரும் வழக்கம் போலவே வீடு திரும்பினர்.

ஆறுமுகத்தார் மட்டும் அவசர அவசரமாக வாசிகசாலைப் பக்கம் விரைந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுதுதான் அவர்களும் வந்திருக்க வேண்டும். ஆம். பத்துப் பன்னிரண்டு இளவட்டங்கள். சைக்கிளிற் காலூன்றி நின்றவாறு ஏதேதோ கதைத்துக் கொண்டிருந்தார்.

"தம்பியவை இஞ்சை தோரணங்கட்டினது ஆரடா?" சற்றுமெல்லத் தொடங்கிக் கோபத்தை ஊட்டி நிறுத்தினார் ஆறுமுகத்தார்.

"ஏனப்பு அது நாங்கள்தான் கட்டினனாங்கள். எங்கட ஊரில எல்லாச் செத்தவீட்டுக்கும்...."

"நீங்கள்தான் கட்டுறியள். இனிப்போதும். தோரணங்கட்ட இனிமேல் நாங்களிருக்கிறம். நீங்கள் கட்ட வேண்டாம்" சூடுமிதமான ஆறுமுகத்தாரின் கடுகடுத்த தொனி சலசலப்பை ஏற்படுத்தி விட்டது.

"ஏன்? ஏன்? நாங்கள் கட்டினால் என்ன?" பொடியளின் கேள்வி இது.

"நீங்கள் எல்லாம் சண்டைக்குப் போய், இந்தச் சண்டையை முடிவுக்குக் கொண்டாருங்கோ....தோரணம் கட்டினமாம் தோரணம். நெடுக அவன் கொன்று கொண்டிருக்க, நீங்கள் தோரணங் கட்டிக் கொண்டிருக்கப் போறியளோ,"

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து மிரண்டனர்.

"தம்பி! இனியோசிக்கிறதுக்கு ஒண்டுமில்லை. நாளைக்கு நாங்களும் எதிரியால் சாகடிக்கப்படலாம். பிறகு, உங்களுக்குத் தோரணம்....?

அதுவரை நிலவிய மௌனம் நீண்டு கொண்டிருந்தது.....

"அதுதான். இனிமேல் இஞ்சை நாங்கள் கிழடுகள் பாக்கிற வேலை எண்டு இதுகளை விட்டிட்டு, நாங்கள் இந்தச் சண்டைக்கு முடிவு காணுவமெண்டு வெளிக்கிடுங்கோம்...."

இரவற் கோடியளுக்குத் தாவித்தாவி ஓடித்திரியாமல், பூமியளை நாங்கள் மீட்கவேணும்.... போங்கோ.... எல்லோருமாய்ச் சண்டைக்குப் போங்கோ"

ஆறுமுகத்தார் பொங்கிய உணர்வைக் கொட்டிச் சிதறிவிட்டுப் போனார். மந்திரமா சொல்லிவிட்டுப் போனார்?

சே! இந்தப் படுகிழவனுக்கு வந்த உணர்வும் ஆவேசமும்.....ஆ....மனதில் ஆழப்பதிந்த சுவடுகளை மீட்டிக்கொண்டு சென்றார்கள் உறுதியோடு. ■

## நெருக்கம்

**ஞானமுத்து**

சந்திரனும், குகனும் ஒன்றாய்ப் பணிபுரிந்தவர்கள். குகன் திருகோணமலையைச் சேர்ந்தவர். 1990ன் நடுப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார்.

சிறிலங்கா இராணுவம் துரத்திச் சுடச்சுட, காடுகளூடாகத் தப்பி யோடி 186 மைல்கள் கடந்து யாழ்ப்பாணம் வந்தவர்களுள் குகனும் ஒருவர். இந்த ஓட்டத்தில் தனது ஒரு குழந்தையை இழந்தவர். பசியைப் போக்கப் புளியமிலைகளைத் தின்றும், மரணஞ் சூழ்ந்த இருளடர்ந்த பகுதிகளூடாக நடந்தும்.... அது ஒரு பயங்கர அனுபவம் அவருக்கு.

சந்திரன் நல்லூரில் இருந்து இடம்பெயர்ந்து பளையில் தங்கவேண்டியதாயிற்று. அங்கு அவர் குகனைக் கண்டார்.

இடம் பெயர்ந்து, பட்ட சிரமங்களைச் சொல்லிய அவர், "வீடு வாசல் எல்லாம் விட்டு வந்தாச்சு. இப்பிடியொரு கஸ்ரமான பயணம் யாருக்கும் வரக்கூடாது" என்றார்.

குகன் சிரித்தார்.

"இதைப் போல எத்தினையோ மடங்கு துன்பங்களை எங்கடை தென்தமிழீழச் சனங்கள் அனுபவிச்சிருக்கிறாங்கள். ஒரு சின்ன இடப்பெயர்வுக்கே இப்படி அல்லாடிப் போட்டீங்களே. போராட்டத்திலை இதெல்லாம் நடக்குந்தான். இன்னும் நாங்க கடக்க வேண்டிய தூரம் நிறைய இருக்கு"

சொல்லிவிட்டு, சந்திரனை ஆதரவோடு தட்டிக் கொடுத்தார். ■

## கோணங்கள்

–நள்ளிரவு.

–யாரோ வாய் புலம்பும் சத்தம் கேட்டு, திடுக்குற்று எழுந்தாள் அவள்.

–அவளின் கடைசிமகன்தான் ஏதோ கனவுகண்டு உளறிக் கொண்டிருந்தான்.

–"பிள்ளை....... இந்த இருட்டு வழியிலை திரிறது........ எதையோ கண்டு பயந்திட்டுது போலை......... நாளைக்கு வெள்ளி......... எப்பிடியாவது பிள்ளையார் கோயில் ஐயரிட்டை போய் ஒரு நூல்கட்ட வேணும்......." என நினைத்தபடியே, அவனைத் தட்டி எழுப்பியபடி கேட்டாள்........

–"தம்பி...... டேய்....... எழும்படா........ ஏன் உளறுறாய்......?"

அவன் விருட்டென எழுந்தவனாய், சுற்றுமுற்றும் பார்த்தான்.

–"ஏனப்பு..... ஏதாவது பயங்கரமாய் கனவு கண்டு பயந்திட்டியே......?"

–ஒரு சில........ வினாடி அமைதிக்குப் பின் அவன் சொன்னான், "பயந்தனானோ.......? உங்களுக்கு விசர்........ நானும் தம்பியும் ஒரு ஆமிக்காரனைத் துரத்திக் கொண்டு போனம்........ அவன்தான் பயந்து கத்திக் கொண்டு ஓடினான்......... அவனைப் பிடிக்கிறதுக்குள்ள........ நீங்கள் எழுப்பிட்டிங்க......." ■

www.tamilarangam.net



# கவிதைக் களம்

## ஊர் இழந்தவனின் குரல்

மீண்டும் வந்திருக்கிறேன்
விடைபெற முடியாத் தருணமொன்றில்
விட்டோடிப் போனதெருவுக்கு.
பாதிமரமும் கிளைகளும் சிதைந்தழிந்த பிறகும்
ஈரம் மிதக்கும் சடைத்த கூழா நிழலுக்கு....
என்ன இது?
ஊரென்ற ஒரு சிறு உணர்வும் எழ விதியற்று
பேய்க்காடாகிக் கிடக்கிறதே நம் கிராமம்?
கண்முன்னால்,
வேலிகளைப் பற்றைகள் தின்கின்றன
புற்றெழுந்த வீடுகளும்
நொருங்கிய மாடங்களுமாய்
தீயலைந்த தெருவெங்கும்
காற்றின் அழுகுரலே கேட்கிறது.

புதர்கள் மூடிவரும் ஒலி
பாம்புகள் அரையும் இரைச்சல்
தவித்துப் பறக்கும் ஒற்றைப் பறவை
விழியின் ஓட்டைவழி
நுழையும் காட்சிகளில்
என் பால்யம் இருளடைகின்றது.

என்னுடைய தலையைத்
திசைகள் சுழற்றுகின்றன.
எப்போதும், எங்கிருந்தோ ஒரு பறவை
என் கண்ணைக் கொத்திச் செல்லுமென்று அஞ்சுகிறேன்.

இரக்கமில்லாத காலத்தின் கடவுளே!
அன்புருக்கம் நுரைக்கும் இதயத்துடன், நிதமும்
பலிகொள்ளப் படுகின்றேன்! எனது தெருவில்.

காலமே, ஒரு அலைக்கழிந்த பிறவியாக
இன்று, இந்தப் புள்ளியில் நின்றழுகின்றேன்.
எங்கே, என் முன்னோரின் கால் பட்டெழுந்த பாதைகள்
வம்சா வம்சமாய் நிலைபேறாய் நாம் வாழ்ந்த வீடுகள்
தென்கரை நீள்வெளியில்
காலவெளியின்றி விளைந்த வயல்நிலங்கள்
எல்லாம் எங்கே எங்கே? ? ?
ஆயிரம் கோடி பாடல்களும் பேச்சும் கூத்தும்
மதுவும் வேட்டையும் மாபெரும் பொங்கலுமாய்
நூறாயிரம் ஆண்டுகள்
தொன்மம் கொண்டதெங்கள் வாழ்வு இவ்வூரில்
ஒரு அதிகாலைப் பொழுதிருந்து அழியத் தொடங்கிற்றே!
எவ்வளவு கொடுமை.

கருணாகரன்

## புத்துயிர்ப்புப் பெற்றவனின் அழைப்பு

என்னுடைய,
தம்பிக்கும், தங்கச்சிக்கும்
மற்றும்
என்னவளுக்கும்......
முன்னெப்போதுமில்லாத
சந்தோசத்துடன் இப்போதைய நான்...
நீங்களும் அவ்வாறே
அமைய வேண்டும்
என்பதே எனது அவா.
இடைக்கிடை நான் விசனமுறுவேன்,
வீணாய்க் கழிந்தது – எனது
இறந்த காலமென.....
உங்களுக்குச் சொல்லக் கூடியது
ஒன்றே ஒன்றுதான் –
எழுக, நிமிர்க....
புயங்களில் நரம்புத் துளைகளில்
எங்குமே
போர்ப் பிரகடனஞ் செய்க.
கண்களில் கனவு சுமந்து
சின்ன உதடு நெளித்து
சிரித்துத் திரிந்த காலமெல்லாம்
இப்போ
செத்துப் போச்சு....
கண்களில் கனலேந்துக.
புயங்களில் போர்ப் பிரகடனஞ் செய்க.

ஓ...ஊரில்
முற்றத்து மல்லிகை
பூத்துக் குலுங்கி இருக்கும்.....
நாங்கள் முழுகிக் களிக்கவென
கிணற்றடி காத்திருக்கும்.....
ஆச்சி மூலையுள் கிடந்து
அழுவாதான்
அம்மா –
போச்சு என்ர செல்வம் என்று புறுபுறுப்பாதான்......
அவுட்டு விட்டு வந்த ஆடுகள்
என்னவாமினவோ – என்றும்
அம்மாவின் கவலையுடன்
எங்களைப் பற்றியதும்
சேர்ந்து கொள்ளட்டும்.....
உங்களுக்குச் சொல்லக் கூடியது
ஒன்றே ஒன்றுதான்
எழுக, நிமிர்க
புயங்களில் நரம்புத் துளைகளில்
எங்நனும்
போர்ப் பிரகடனஞ் செய்க.....
நாம்
வீடு திரும்பலாம்
முன்னைய விடவும்
சந்தோசமாய்.....

க. கண்ணதாசன்

## வேங்கையிற் சேரடி கிளியே!

நேர்மையில் லாதவர் வாய்வீரம் பேசிடும்
நெஞ்சில் உரமற்ற வஞ்சக ராமடி கிளியே!
ஆர் எவர் என்றெனைக் கேட்டு விடாதே
ஆடை கலைந்ததை மூடவோ சொல்லவோ!

பேர் தெரியாதவர் 'தமிழ் தமிழ்' என்றதால்
பெரியவ ராயினர் கிளியே – பின்னர்
ஊர் உலகத்து உயர்த்திய ஏணியை
உதைத்து விழுத்தினர் கிளியே!

'போர் போர்' என்ற றைகூவினார் மேடையில்
போய் ஒளித் தாரடி கிளியே!– இன்று
ஆருமைப் போராடச் சொன்ன தெனக்கேட்டு
அழுவதைக் கேளடி கிளியே!

ஆரையும் தூண்டி விட்டுக் கிடைத்ததில்
ஆளுக்குப் பாதிஎன் பாரே – கிளியே
போருக்கு அஞ்சிப் புறஞ் சொல்லி வாழ்கின்ற
புல்லர்க ளாமடி கிளியே!

அஞ்சிச் சாகும் அடிமைக்குச் சுதந்திரம்
அரிதெனக் கூறி நிற்பாயோ –கிளியே
விஞ்சிவரும் அரக்கர் படையை ஒழித்திட
வேங்கையிற் சேரடி கிளியே!

தில்லைச்சிவன்

## நாளை வெற்றி உறுதி

"கிள்ளித் தருவதைச் சாப்பிட்டு விட்டுக்
கிட கிழவி பேசாமல்" என்று, என்னை
எள்ளி நகையாடாதீர் என்னருமை மக்களே
எரிகின்ற தென்னிதயம் எழுதுகிறேன் அதனாற்றான்
கொள்ளிவாய்ப் பிசாசுகள் போல் வந்த பகைவர்கள்
கொஞ்சமா அக்கிரமம் செய்தார்கள் எம்மண்ணில்
துள்ளிக் குதித்தாரே கொடியேற்றி வெடிகொளுத்தி
துண்டுதுண்டாக்கி நாம் அனுப்ப வேண்டாமா?

பிள்ளைகள் ஏறியமர்ந் தாடுகின்ற ஊஞ்சலிலே
பெருச்சாளி நின்றுகொண்டு ஆடுகின்ற படத்தைப்
பள்ளிக் கூடத்திலே பார்த்தநேரந் தொடக்கம்
பற்றி எரிகிறதே என் நெஞ்சு என்செய்வேன்
தள்ளிவிழுத்தித் தலையை நொருக்குதற்குத்
தள்ளாத வயதிலும் என் தமிழ்க் கரங்கள் – துடித்ததுண்மை
முள்ளை முள்ளாலே எடுப்பதுதான் முறையென்று
முன்னோர்கள் சொன்னபடி செய்வதற்கு வருவீரா!

தளர்ந்த என் உடலிலும் இரத்தம் கொதிக்குதென்றால்
தமிழர் எனப் பெயர் கொண்ட எவர்தான் பொறுத்திடுவார்?
கிளர்ந்தெழுவார் நிச்சயமாய் கிலிகொண்டு எதிரி
கிட்டு பூங்காவுள் ஏன் நுழைந்தோம் என்றலறுவான்
வளர்ந்து வரும் எம்படையின் வலிமை அறியாது
வாய்வீரம் பேசுபவர் உடல்களை நாம் நாளை
பிளந்து பொதிசெய்தனுப்ப விரைந்தோடி வருவீர்!
பிரபாகரன் காலம் இது என்று அறிவீர்.

'ஐம்பதிலும் ஆசை வரும்' என்று ஒரு கவிஞர்
அன்றுரைத்தார், அதுசரிதான் என்றனம் நாம் இன்றோ
தெம்புடனே 'அறுபதிலும் வீரம் வரும்' என்போம்
திகைக்க வைப்போம் உலகினையே தீரமுடன் எந்தன்
தம்பியரே தங்கையரே அண்ணன் மாரே
தமிழ்த்தாகங் கொண்ட எந்தன் பேத்திமாரே
நம்பிடுவோம் நாம் நடத்தப்போகும் இப்போர்
நாமிணைந்தால் தவறாது நாளை வெற்றி.

–மனோன்மணி நடராஜா

## முடியும்

அந்தக் கட்டிலில்
பச்சைப் பசேலென்ற உடையில்
உறங்கும்....
நிரந்தரமாய் உறங்கும்
தென் தமிழீழச் சோதரன்
"அவன்"
சூரியக்கதிரை
உலுப்பி உறங்கும்
'மனிதத் தென்றல்'
நெஞ்சில் ஓர் துளை.
கன்னத்தில் என் ஊர் மண்.
மௌனத்திலும் ஓர் உறுமலாய்
அவன்.....
அவன் கதைக்க மாட்டானா?
என ஏங்கும் என் ஜீவன்.
நான் இருக்க
அவன் போய்....
மௌனத்தைக் கலைத்து
யாரோ இருவர்....
என் ஊரவர்கள்தான்.
பாஸ் கிடைத்தால்
போய் விடலாம்.
ஓம் போய் விடுவார்கள்.

'முதுகெலும்பை'
கழற்றி வைத்துவிட்டு
அவர்கள் போய்விடுவார்கள்.

என் இதயமோ
கற்பாறையொன்றின் கீழ்
அமிழ்ந்து போக.....

நிலமுடைந்து வந்த முளைபோல்
ஓர் சின்னப் போராளி வந்தான்.
மிடுக்கு.... நடையில்
தெளிவு.... சொல்லில்
எதற்கும்
முடியும்! முடியும்! என்றே
துப்பாக்கி ஒத்தடம் கொடுக்க
அவன் போனான்.

எனக்கோ
விண்வெளிக்கு விண்கலம்
விட்ட திருப்தி.
இப்போது
என் இதயம் மட்டுமல்ல
கற்பாறையும் துடித்துக்
கொண்டிருந்தது.

கா. கஜந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தரை - கடல் - வானில்....

14 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

முழுமையாக ஈடுபடுத்துவர்– இந்நிலையில் ஆட்பலம் கூடிய சிறிலங்காப் படையினராற் புலிகளைத் துடைத்தெறியலாம் என இராணுவம் எதிர்பார்த்தது. இது நடந்ததா? இல்லை. யாழ்ப்பாணம் மீது நடந்த இந்தப் பாரிய தாக்குதலில் இராணுவம் எதிர்பார்த்ததை விட, மிகச் சொற்பமான ஆட் சேதமே புலிகளுக்கு ஏற்பட்டது. இதனால், முதல் நோக்கமான புலிகளின் ஆட்பலத்தை முறிப்பது என்ற திட்டம் தவிடு பொடியானது.

இரண்டாவது, இப்படையெடுப்பு மூலம் சனநெரிசல் மிக்க பகுதியிற் பல தமிழ் மக்களைக் கொன்று, எஞ்சிய தமிழர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு, குடிசார் நிர்வாகம் என்ற பெயரில் தமது இராணுவ ஆட்சியை நிறுவ அரசியல் ரீதியாகத் திட்டமிடப்பட்டது. நடந்ததா? அதுவும் இல்லை.

ஐப்பசி 30இல் இரவோடு இரவாக, வலிகாமத்தின் ஐந்து இலட்சம் தமிழ் மக்களும் தம் இருப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

இரண்டாம் உலகப்போரின்போது இரசியா மீது கிட்லரின் நாசிப்படைகள் படையெடுத்தபோது, மேற்கு இரசியாவிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து மாபெரும் உலக வரலாற்றுப் பதிவு ஒன்றினைச் செய்தனர். இது யாழ்ப்பாண மண்ணில் மீண்டும் ஒருமுறை பதியப்பட்டது. 'ஐப்பசி 30' இடப்பெயர்வும் சிறிலங்கா அரசினதும்–இராணுவத்தினதும் திட்டத்திற்குப் பெரிய அறையைக் கொடுத்தது.

எனவே, இந்தச் சூரியக்கதிர் சாதித்தது என்ன? ஒரு போலியான தற்காலிக அரசியற் சாதக நிலையை மட்டும் சந்திரிகா அரசிற்கு இது ஏற்படுத்திக் கொடுத்ததே மிச்சம்.

யாழ். நகர் மீதான படையெடுப்புத் திட்டம், சுமார் ஆறுமாதங்களுக்கும் மேலாகத் திட்டமிடப்பட்ட ஒன்று. பல கோடி ரூபாக்களை அரசு கொட்டிச் செயற்படுத்திய நகர்வு. 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின்போது பெற்ற பட்டறிவைக் கொண்டு சீரமைக்கப்பட்ட திட்டம். பல படையணி–களைப் போர்க்களத்தில் இறக்கி எடுத்த படையெடுப்பு. இவற்றையெல்லாம் விட, களைப்புற்ற படையணிகளையும் சேதமுற்ற படையணிகளையும் மாற்றிமாற்றிப் புதிய அணிகளைப் போர் முன்னரங்கிற்கு அனுப்பவென முழு இராணுவ வளமும் பிரயோகிக்கப்பட்ட தாக்குதல். யாழ். நகருக்குள் நகர்வதற்கென்றே பிரிகேடியர் ஜானகப்பெரேரா தலைமையில் இறுதி நேரத்தில் இரகசியமாக உருவாக்கப்பட்ட 53ஆம் படையணி, இராணுவ விசேட படையினரை உள்ளடக்கியது. 20,000க்கும் மேற்பட்ட படைகள் இரு பாதைகளில் முன்நகரும்போது, அதைப் பெரியளவில் எதிர்கொள்ளாது, தன் இராணுவக் கட்டமைப்பைச் சிதைத்துக் கொள்ளாதபடி, ஆனால் எதிரியின் படைமீது பலத்த சேதத்தை ஏற்படுத்திவிட்டுப் பின்நகர்ந்துவிட்ட விடுதலைப் புலிகளின் போர்த்தந்திரோபாயம், இறுதியிலேயே அதிகாரிகளுக்கும் ஆட்சியிலுள்ளவர்களுக்கும் புலப்பட்டது.

தென்னிலங்கை இராணுவ ஆய்வாளர்களும் மூத்த படை அதிகாரிகளும் தற்போது சிந்திப்பதும் எழுவதும் புலிகளின் அடுத்த நடவடிக்கை என்ன? என்பதைப் பற்றியே. இந்த நடவடிக்கை "அரசின் வெற்றியுமல்ல, புலிகளின் தோல்வியுமல்ல" என வெளிநாட்டு இராசதந்திரிகள் மட்டத்திலேயே மறைமுகமாக ஒப்புக்கொள்ள ஆரம்பிக்கப்படுகின்றது. சர்வதேசத் தொடர்புச் சாதனங்களும் இதை ஏற்றுள்ளனபோல் தெரிகிறது.

ஆரம்பத்திற் குறிப்பிட்டதுபோல், அதன் நோக்கத்தையடையாத எந்தச் சமரும் தோல்வியில் முடிந்த சமராகவே கருதப்படும். இதனால் இனி வரும் ஆண்டிற் தொடரவுள்ள சமர்களில், இராணுவ ரீதியிலான இலக்கையடைபவரே இறுதிப் போரில் வெற்றி பெற்றவராகப் பிரகடனப்படுத்தப் படக்கூடியவர் எனக்கூறலாம். ■

# எத்தனை எத்தனை வித்துக்கள் .....

11 ஆம் தொடர்ச்சி....

மூத்தவன் பரணீதரனின் வலதுகாலில், பெருவிரலுக்கு அடுத்த விரல் எங்கே என்று தெரியவில்லை. இளையவன் முதுகைச் ஷெல் துண்டு பிளந்துவிட்டிருந்தது. ராஜ்மோகனுக்கு இடதுகால் சிதைந்திருந்தது. இவர்கள் போக, அயல்வீட்டுப் பையனான ஹேமவதனன் உயிர்பிரிந்த நிலையில் அசைவற்றுக் கிடந்தான். நாராயணசிங்கம் அப்படியே கிடந்தார் அவரது வலதுகை முழங்கைக்கு மேலே துண்டிக்கப்பட்டு தொங்கிக்கொண்டிருந்தது. தொடையிலும் வயிற்றிலும் வேறு காயங்கள் ஏற்பட்டிருந்தன. எல்லார் உடம்பிலும் இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. திருமதி நாராயணசிங்கம் கணவனை அணுகி "என்னப்பா செய்யுது?" என்று கேட்டபொழுது "காரைப் பிடியுங்கோ" என்ற பதில் ஈனஸ்வரமாக ஒலித்தது.

நாராயணசிங்கத்தன் மூச்சோடு கலந்து ஒலித்த கடைசி வார்த்தைகள் அவைதான். உயிர் இன்னும் ஊசலாடிக்கொண்டிருந்தது.

மூத்தவன் பரணீதரன் விரல் துண்டிக்கப்பட்டு இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்த அந்த நிலையிலும், அப்படித் துணிவு எங்கிருந்துதான் பிறந்ததோ! தாயின் ஆலோசனையுடன் வீட்டிலே ஆயத்தமாக நின்ற ₹90 மோட்டார் சைக்கிளை 'ஸ்ராட்' செய்தான்.

ராஷ்மோகனைத் தூக்கமுயன்றபோது, "என்னைத் தூக்காதீங்கோ" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தான். நாராயணசிங்கம் அறிவிழந்து கொண்டிருக்கிறார். அவரை உடன–டியாகக் காப்பாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தில், மூவருமாகச் சேர்ந்து நாராயணசிங்கத்தை மோட்டார் சைக்கிளின் பின்னிருக்கையில் இருத்தியபின், இளையவன் பரணீதரனைத் தந்தையை இறுக்கிப் பிடித்துக் கொள்ளச் செய்தான்.

தாயைத் தனது இருக்கைக்கும் ஹாண்டிலுக்குமிடையில் உள்ள 'கரியரில்' இருத்தி, தனக்குப் பின்னே இருந்த தகப்பனின் இரு கால்களையும் தூக்கி முன்னே இருந்த தாயி–டம் கொடுத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் செய்தான். மோட்டார் சைக்கிள் புறப்பட்டுவிட்டது. கல்லுண்டாய் வீதிவழியே மோட்டார் சைக்கிள் பறந்துகொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளில் இருந்த நால்வரின் உடலில் இருந்தும் இரத்தம் வீதி நெடுக கோடிழுத்துக் கொண்டிருந்தது. நாராயணசிங்கத்தின் தலை, முன்னே இருந்த மூத்தவனின் தோளில் சரிந்து இடித்துக் கொண்டிருந்தது. நடுவழியில் தந்தை விக்குவது போல ஒருமுறை மூத்தவனால் உணரமுடிந்தது.

"அப்பா என்னடி செய்கிறார்?" (இப்படித்தான் தாயும் தகப்பனும் பிள்ளைகளைப் பெண்பாலில் செல்லமாக அழைப்பார்கள்)

"அப்பா சும்மா கிடக்கிறார், நீங்கள் கவனமாய் இருங்கோ." அவனது வேகம் முழுவதும், எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் யாழ் வைத்தியசாலை சென்றடைந்து விடவேண்டும் என்பதிலேயே இருந்தது. மோட்டார் சைக்கிள் யாழ் வைத்தியசாலையை வந்தடைந்தது. ஆனால் நாராயணசிங்கத்தின் வெற்றுடல்தான் அங்கிருந்தது. இரண்டு பிள்ளைகளினதும், மனைவியினதும் அரவணைப்பில் இருந்தபடியே அன்பான அந்தத் தந்தை, குடும்பத்தலைவன் வழியிலேயே அமரத்துவமடைந்து விட்டார்.

தந்தையை–தாய், சகோதரனை வைத்தியசாலையில் ஒப்படைத்து, தனது காலுக்கும் மருந்து கட்டினான் பரணீதரன். கால் எடுத்து அடி வைக்கமுடியாமல் வலித்தது. அந்த நிலையிலும் சித்தியின் மகன் ராஜ்மோகனை எப்படியும் கொண்டுவரவேண்டும் என்ற நினைப்பில் மோட்டார் சைக்கிளை எடுக்க முயன்றான். ஏற்கனவே அதிகமான இரத்தம் வெளியேறிவிட்டபடியால், போகும் வழியில் மயக்கம் போட்டுவிடலாம் என்று வைத்தியசாலையில் அவனைத் தடுத்தனர்.

அதற்கிடையில் அராலிக்கு அம்புலன்ஸ் அனுப்பப்பட்டுவிட்டது. இவர்கள் அனுப்பிய அம்புலன்ஸ் அராலி நோக்கிப் போய்க்கொண்டிருந்த போது, பாதி வழியிலே ராஜ்மோகனையும் மற்றும் காயமுற்றவர்களையும் சுமந்துகொண்டு அராலியில் இருந்து வண்டில் ஒன்று வந்துகொண்டிருந்தது. ராஜ்மோகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும்கூட, அதிக இரத்தம் வெளியேறி விட்டபடியாலும் வேறு சிறு துண்டுகள் உடலுக்கு உள்ளே ஆழமாகப் பாய்ந்து உள்ளுறுப்புக்கள் சேதப்படுத்தப்பட்டபடியாலும், அவனைக் காப்பாற்ற முடியவில்லை. அங்கு விழுந்த ஷெல், மூன்றாவது உயிராக ராஜ்மோகனையும் பலிகொண்டுவிட்டது.

நாராயணசிங்கம், ராஜ்மோகன் இருவருடைய உடல்களும் கே.கே.எஸ் வீதியில் உள்ள நண்பர் ஒருவர் வீட்டில் வைத்து, மறுநாள் இறுதிக்கிரிகைகள் செய்யப்பட்டு கோம்பையன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

அயல்வீட்டுப் பையனான அந்தப் பதினைந்து வயது இளைஞன் ஹேமவதனனின் உடல், மயானம் கொண்டுசெல்ல முடியாத நிலையில் – பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் முன்னிலையில்– அவர்கள் வளவின் பின்புறத்தில் வைத்துத் தகனம் செய்யப்பட்டது.

நாராயணசிங்கத்தின் குடும்பத்தவரிடமிருந்து விடைபெற்றபோது என் இதயம் பாறையாகக் கனத்தது: உற்ற நண்பனை இழந்துவிட்டது மட்டுமல்ல, அவனது இறுதிக் கிரிகைகளில் யாழ்ப்பாணத்தில் நான் இருந்தும் கூட, கலந்து கொள்ள முடியவில்லையே என்று கண்ணீர் வடித்தது. அன்று இரவு முழுவதும் நாராயணசிங்கத்தின் தோற்றமே நிறைந்து நின்றது. எங்களது மன்னார் வாழ்க்கையும் அன்றைய நாட்களின் எமது நட்பான வாழ்க்கையும் நிழற்படங்களாகத் தோன்றின.

வெள்ளை நிறத் தாமரைகள்

வேண்டுது செவ்விரத்தம்

கொள்ளையிட்டுக் கொன்றிடவே

கொண்டதிந்த யுத்தம்

முள்விரித்த படுக்கையிலே

முடங்குவது அழகா

முதுகெலும்பு உனக்கிலையா

முழங்கி எழு தமிழா! ■

# தென்னாசிய வலுச்சமநிலையை....

12 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

அர்த்தம் எதுவுமில்லை. மேற்குலகில் அமெரிக்கா போன்றவை, போராயுதங்களை நேரடியாகச் சிறிலங்காவிற்கு வழங்கமாட்டாது எனத் தெரிவித்திருப்பினும், அவர்களின் செல்லப் பிள்ளையான இஸ்ரேலும் அத்தோடு பிரிட்டன் போன்ற நாடுகளும் போதியளவு ஆயுதங்களை வழங்கத் தாயராக இருப்பதென்பது, மேற்குலகம் வழங்குவதற்கு ஒப்பானதேயாகும்.

இதேசமயம் நோர்வே, கனடா போன்ற நாடுகள் சமாதானம் எனப்பேசிக்கொள்வதும் அவற்றிற்கான முயற்சியில் ஈடுபடுவதும் தனியாக அந்நாடுகளின் தனிப்பட்ட முடிவுகளாகவும் இருக்கமாட்டாது. அதாவது, ஒட்டுமொத்தமாக ஐரோப்பிய சமூகம் எனவும், நேட்டோ கூட்டமைப்பு எனவும் தம்மைக் கூறிக் கொள்ளும் இந்நாடுகளின் நடவடிக்கைகள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள், நோக்குகள் என விளக்கம் கொள்ள முடியாது.

இந்த நிலையில் இலங்கை இனப்பிரச்சனை விவகாரமானது, மேற்குலகத்தைப் பொறுத்து இராணுவ அரசியல் ஆகிய இருவழிகளினாலும் அணுகப்படும் ஒன்றாகவே உள்ளது. இது இலங்கையின் அரசியலில் மட்டுமல்ல, தென்னாசியாவின் இராணுவச் சமநிலையிலும் மாற்றத்தையும், தாக்கத்தையும் எதிர்காலத்தில் விளைவிக்கும் ஒன்றாகவே நிச்சயம் இருக்கும். இவ்வாறானதொரு நிலையே, இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்களாற் சுட்டிக்காட்டப்பட்டது எனலாம். திரு. வெங்கட்ராமனின் கருத்து, இப்பிராந்தியத்தில் அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் பிரவேசத்திற்கு இந்தியா அனுமதிக்கக் கூடாது என்பதன் அடிப்படையிலானதே ஆகும். அத்தோடு, இலங்கையின் இனப்பிரச்சனை போன்ற விவகாரங்களில் இந்தியா நேரடியாகத் தலையீடு செய்ய வேண்டும் என்பதும் ஆகும்.

ஆனால், இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்குக் கடந்த காலத்தில் ஏற்பட்ட பலமான அடியே, இப்பிராந்தியத்தில் அமெரிக்கா போன்றவற்றின் நேரடிப் பிரசன்னத்திற்கும், இந்தியாவின் இன்றைய இயலாமைக்கும் காரணமாகும். இனப்பிரச்சினைக்குக் கடந்த காலத்திலேயே சரியானதொரு கொள்கையை இந்தியா வகுத்திருக்குமானால், தனது கொல்லைப் புறத்திற்குள் ஒரு பலமான சக்தியை விட்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

ஆனால் இன்று இந்தியாவால், திரு. வெங்கட்ராமன் அவர்கள் கூறியது போன்றதொரு வெளியுறவுக் கொள்கையை வகுக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதேயாகும். ஆனால் நிச்சயமாக இந்தியா, சிறிலங்காவின் அண்மைய வெளியுறவுக் கொள்கையால், மேற்குலகுடன் அதற்கு ஏற்பட்டுள்ள நெருக்கம், அதனுடனான இராணுவ ஒத்துழைப்பு என்பனவற்றைக் கவனத்திற்கொண்டே தமது வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டியது தவிர்க்க முடியாததொன்றே. ■

# புத்த விகாரையை...

9 ஆம் பக்கத் தொடர்ச்சி....

வீசவோ சிங்கள பௌத்த இனவாத அரசுகளுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்திருக்காது. இதனை மேலுள்ள புள்ளி விபர அட்டவணை மூலம் தெரிந்து கொள்ளலாம். 1972 வரை சிறுபான்மையருக்கு மேலதிகமாக 6 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 1947இல் மலை நாட்டுத் தமிழர்களுக்கு 7 ஆசனங்கள் மட்டும் கிடைத்தாலும் அவர்களது வாக்குப் பலத்தால் இடது சாரிக் கட்சிகள், அதைப் போல இரண்டு மடங்கு தொகை ஆசனங்களைக் கைப்பற்ற முடிந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

1948ஆம் ஆண்டுக் 'குடியுரிமைச் சட்டம்', 1956ஆம் ஆண்டுச் 'சிங்களம் மட்டும் சட்டம்' ஆகிய இரண்டு சட்டங்களும் தமிழினத்தை அடிமைப்படுத்தி, சிங்கள–பௌத்த இனவாதிகளால் ஏவப்பட்ட ஏவுகணைகள் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

இவற்றோடு, வட–கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம் மாவட்டத்திலும் முடுக்கி விடப்பட்ட குடியேற்றத் திட்டங்கள், கிழக்கு மாகாணத்தில் 1946இல் வெறுமனே 4.6 விழுக்காடாக இருந்த சிங்களவர் தொகையை இன்று 34 விழுக்காடாக உயர்த்தி விட்டது. வடமாகாணத்தில் சிங்களவர் தொகை, புத்தளம் மாவட்டத்தில் 90 விழுக்காடாக (1953–9,010, 1971–309,298) உயர்ந்துவிட்டது. 1948இல் ஜீ.ஜீ.பொன்னம்பலம் விட்ட தவறின், இல்லை இழைத்த துரோகத்தின் பலாபலன்களை இன்றும் நாங்கள் அறுவடை செய்துகொண்டிருக்கின்றோம். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த கதைபோல இன்று சிங்கள – பௌத்த இனவாதிகள் தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு இவற்றின் தொட்டிலாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை ஏற்றி "வெற்றிவிழா"க் கொண்டாடி இருக்கிறார்கள்.

இது போதாதென்று நல்லூர்க் கந்தசுவாமி கோவில், இடிக்கப்பட்ட புத்த விகாரையின் மீது கட்டப்பட்டு இருப்பதாக அபய ஆரியசிங்க என்ற பேராசிரியர் ஆராய்ச்சி என்ற போர்வையிற் புதிய சரித்திரம் எழுத முற்பட்டிருக்கிறார். இவை யாவும் தமிழர்–சிங்களவர்களுக்கு இடையிலான இடைவெளி நிரப்பமுடியாத அளவிற்கு விரிந்து கொண்டு போவதைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இளைய தலைமுறையே எழுக!

"நான் பிடித்தேன் யாழ்ப்பாணம்" என்று சொல்லி
"ரத்வத்தை" கொடியேற்றிப் போனான் நேற்றுப்
பாண்விற்க வந்தவனின் பிள்ளை நல்லூர்ப்
"பண்டாரக் குளத்தினிலே" குளிக்கின்றானாம்.
ஏன் தமிழா! எழவில்லை? எமது மண்ணை
எதிரியிடம் கொடுத்துவிட்டு உறங்கிப் போகக்
கூன்விழுந்த முதுகோடா உனக்கு? கேட்டுக்
குதிப்பதற்குக் கைகாலும் குறண்டிப் போச்சோ?

வானுயர்ந்த வலுவுடலும், தடந்தோ ளெல்லாம்
வளைந்ததுவோ? தமிழச்சி மார்பில் வீரத்
தேனொத்த பால்குடித்தும் உன்னில் மானம்
செறியாது போனதுவோ? திண்ணைக் குந்தில்
பேன்பொறுக்கிக் கிடப்பதற்கோ பிறந்தாய்? உன்னைப்
பெற்றவளும் இதற்கோடா பெற்றாள்? இங்கே
வீண்பிள்ளை விறகுக்கும் உதவான் தாயின்
விடுதலைக்கு உயிர்கொடுப்போம் வாடா தம்பி!

நோயுற்று மடிந்தாலும் நெஞ்சில் வேலால்...
நோண்டியபின் சுடுகின்ற வீரப் பண்பின்
தாய்பெற்ற திருமகனே! எம்மண் தன்னைத்
தளுவத்த, ஜெரிசில்வா, பெரேரா என்னும்
பேய்களிடம் விட்டோடி வந்தாய் வந்தும்
பேசாமற் கிடக்கின்றாய் எழடா! இன்று
காய்கின்ற கதிர்சாய முன்னர், நாங்கள்
கால்நடந்த மண்ணுக்குப் போவோம் வாடா.

கூவிவரும் எறிகணைகள் வீழும் எங்கள்
குடிநிலத்தைப் பகையரசு குதறும் தெய்வக்
கோவிலது பூசையின்றிக் கிடக்கும் வந்த
குடிகேடர் மொழியுலவும் தமிழா! உந்தன்
ஓவியத்தை இன்னொருவன் சிதைக்க விட்டு
ஒன்றுக்கும் அசையாமற் கிடக்கின்றாயே?
ஏவிவிட வந்தவனை எம்மண் தன்னில்
இல்லாமற் செய்திடலாம் எழடா தம்பி.

குயிலிருந்து பாடியநம் தோப்பை விட்டுக்
குடிபெயர்ந்தோம் தேரிழுத்த கோயில் விட்டோம்.
அயலிழந்தோம் தோட்டவெளி துறந்தோம் நாங்கள்
அன்போடு வளர்த்திட்ட ஆட்டை, மாட்டை
வயல்வெளியைப் பிரிந்திட்டோம் எனினும் சோரோம்.
வந்தபகை துரத்திடநம் ஊருக்குள்ளே
புயல்புகுந்த மாதிரியாய் புகுவோம், வெற்றிப்
புலிக்கொடியைக் கோட்டையிலே பறக்கச் செய்வோம்.

– புதுவை இரத்தினதுரை

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palemo, Italy
T/F: 091- 611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss
T/F: 01- 273- 29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O, 211 Katherine Rd
London E6 1Bu,U.K
Tel: 0181 503 4294
Fax:0181 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1 , Norway
Tel: 022- 191 260 Fax: 190114

W.T.C.C
170 - 10 Cadarcroft Road
Suite 1-L,Jamaica,
New York 11432 U.S.A.
T/ F: 718- 657- 9463

L.T.T.E
P.O.Box 47, 7400 Herning
Denmark
T/F: 97- 155299

T.C.C
Groot Hertoginneisaan
2517 BL Den Haag, Nederland
Tel:070 - 346 1963 Fax:384 0583

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F: 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia.
T: 03-470 6441 F: 560 8224

Disigned by Euro Graphics & Printing Ltd - 0181 801 3822
Printed by Observer Group News papers